# அந்த அக்காவைத் தேடி



ஜெயகாந்தன்


அந்த
அக்காவைத் தேடி
ஜெயகாந்தன்

http://www.pustaka.co.in

# அந்த அக்காவைத் தேடி...

# Andha Akkavai Thedi...

Author:

## ஜெயகாந்தன்

**Jayakanthan**

For more books

http://www.pustaka.co.in/home/author/jayakanthan-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்து

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அந்த அக்காவைத் தேடி...

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

# முன்னுரை

அண்மையில் நான் எழுதிய, ஒன்றுக்கொன்று தொடர்புடைய, ஆனால் தனித் தனியே படிக்கத் தகுந்த இரண்டு கதைகளின் தொகுதி இது. இத்துடன் தொடர்பு உடைய முதல் கதை 'நம்ப மாட்டேளே?' இதற்கு முந்தைய தொகுதியான 'கழுத்தில் விழுந்த மாலை'யில் சேர்ந்து விட்டது.

நான் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்பதுதான் முக்கியம். வாராவாரம் எழுதுகிறேனா, ஒரே புத்தகமாக எழுதுகிறேனா, நிறைய எழுதுகிறேனா, நீளமாய் எழுதுகிறேனா என்பதெல்லாம் புறநிகழ்வுகளினால் ஏற்படுகிற மாற்றங்களே ஆகும்.

குறிப்பாக அண்மையில் எழுதிய இந்தக் கதைகளுக்கு - நான் பிரபல பத்திரிகைகளில் எழுதிய கதைகளுக்கு ஏற்பட்டதை விட அதிகமான 'ரெஸ்பான்ஸ்' இருந்தது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. அதிலும் இளம் பெண்கள், உயர்நிலைக் கல்வி பயிலும் மாணவ பருவத்தினரிடமிருந்து எண்ணற்ற கடிதங்கள் வந்தன. அந்த மாணவிகளுக்கு எனது எழுத்துக்களை அறிமுகப்படுத்திய அவர்தம் ஆசிரியர்களுக்கு எனது மானசீகமான நன்றி...

அந்தக் கடிதங்கள் யாவும் இந்தக் கதைகளில் வருகிற பெண்களை வெகுவாகப் பாராட்டி புகழ்ந்த போதிலும், 'இது சாத்தியப்படுமா? சமூகம் அனுமதிக்குமா?' என்ற கேள்வியை எழுப்பத் தவறவே இல்லை.

பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதைமை அற்றிடும் என்ற நம்பிக்கை தான் அவசியம்.

சமூகப் பார்வையும், சித்தாந்தப் பிடிப்பும், கடமையுணர்வும், சுயாபிமானமும் உள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தக் கூட்டு வாழ்க்கை முறை சாத்தியமானதே ஆகும்.

பெண்கள் தாமே தமது உருவ அழகில் மயங்கி, தன்னை ஒரு மோகினியாக நினைத்துக் கொண்டு, அசட்டுத்தனமான கற்பனைகளில் சிக்கி, ஆண்களைத் தம்மை ஆளத் தகுந்த எஜமானர்களாக ஆக்கி அடிமைப்படுவதைத்தான் நடைமுறை வாழ்வில் நிறையவே பார்க்கிறோம்.

கல்வியும் அறிவும் பண்பும் திறமையும் கொண்ட நவீன கால யுவதிகளுக்கு அடிமைப்படுவது என்பது முந்தைய தலைமுறைப் பெண்களுக்குக் கை வந்திருந்ததைப்போல் இன்று கைகூடுவது சிரமம். இந்தப் பிரச்னையில் சிக்கிக் கொண்டு சமாளிப்பதைவிட, சிக்காமல் விடுதலை பெறுவதுதான் காலப்போக்கில் நற்பயன்களை உண்டாக்கும் என்று நம்புகிற பெண்கள் தோன்றியுள்ளனர்.

தனியுடைமை ஒழிந்த சமூகத்தில் அல்லாமல் வேறெங்கும் பெண் விடுதலை சாத்தியமில்லை. எனவே பெண்கள் பிறவியிலேயே சோஷலிஸப் பண்பு கொண்டவர்களாக வருங்காலத்தில் மாறுவர்.

இலக்கியமும் கொள்கைப் பிடிப்பும் உள்ள இளைஞர்கள் ஒன்றுபடுவதன் மூலமும், புதிய வாழ்க்கை முறைகளையும், புதிய மதிப்பீடுகளையும் தத்தம் சொந்த வாழ்க்கையிலும் கூட்டாகவும், நிறுவி நிரூபிப்பதன் மூலமும் இந்தச் சமூக மாற்றத்துக்கு, அவர்கள் போராட்டத்தின் பயன்களாகவும் விளைவுகளாகவும் புதிய கலைகளும் இலக்கியங்களும் பரிணமிக்கும் என்பது எனது நம்பிக்கை.

அந்த நம்பிக்கையினால் உருவான பாத்திரங்களே இக்கதையில் வரும் பெண்கள்.

இவர்களைப் போன்ற பெண்கள் உண்டா? என்று என்னிடம் கேட்பவர்களுக்கு:

உண்டு; உண்டு... தேடுங்கள் கண்டு அடைவீர்கள் என்பதே எனது பதில்.

- த. ஜெயகாந்தன்

சென்னை - 78.

6-10-85

# வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்து

## 1

எனக்கு வயசு இருபத்தி ஒண்ணு... பெயர் பைரவி... என்னைப் பெத்த அம்மாவுக்கு சங்கீதத்தின் மேலே ஒரு பிரீதி... அவளுக்கு ரொம்பப் பிடிச்ச ராகம் பைரவி... நான் மூத்த பொண்ணு இல்லையோ... பிடிச்ச ராகத்தின் பெயரை எனக்கு நாமகரணம் பண்ணியிருக்காள். எனக்கும் கூட அந்தப் பெயர் பிடிக்கும்! என் பெயருள்ள ராகம்ங்கறதனாலே அந்த ராகமும் எனக்குப் பிடிக்கும்.

அம்மா அளவுக்கு இல்லேன்னாலும் எனக்கும் சங்கீத ஞானம் கொஞ்சம் உண்டு. கற்றுக்கொண்டால் நன்றாக வரும் என்று அம்மா அடிக்கடி என்னை வற்புறுத்துவாள். அதற்கு உடன்பட்டு ஏதோ கொஞ்சம் கற்றுக் கொண்டேனே தவிர அம்மா மாதிரி எனக்குப் பாட வராது.

அம்மாவுக்கு என்னைத் தன்னைப் போலவே ஆக்கி விட வேண்டும் என்று ஆசை. அதில் அவள் ஒருபோதும் வெற்றி அடைய முடியாது என்கிற மாதிரி எனது இயல்பு.

அது எப்படி முடியும்? அவள் பிறந்த தலைமுறை என்ன... அவளது பெற்றோர்களின் பின்னணி என்ன... அந்தக் காலம் என்ன...? இந்தக்கால வளர்ச்சி என்ன...?

இதிலெல்லாம் இருபத்தியோரு வயதான ஒரு பெண்ணுக்கு இணையாக என்னதான் அவளைப் பெற்றுச் சொந்தமாக்கிக் கொண்டவளாக இருந்தாலும் நாற்பது வயதைத் தாண்டிய ஒரு அம்மா இணையாக முடியுமா?

தன்னைப்போல் என்னை ஆக்க முடியாவிட்டால் என்னவாம் இந்த அம்மாவுக்கு...? அதற்குத்தான் என்னை விட எல்லா விதத்திலும் உசத்தியாய் இன்னொரு ராகம் பிறந்திருக்கிறாளே; வசந்தா...!

நான் போன வருஷமே பி.ஏ., முடித்து விட்டேன். வசந்தா இந்த வருஷம்தான் சேர்ந்திருக்கிறாள்.

நானும் படிப்பு விஷயத்தில் அம்மா சொல்வதை யெல்லாம் கேட்டுத்தான் படித்தேன். படித்தது போதும் என்று நிறுத்திவிட்டார்கள்... நானும் நின்றுவிட்டேன்.

கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்ற பேச்சு அடிபட்டவுடன், என் அறிவு வேலை செய்தது.

நான் படித்த படிப்பு, நான் சேகரித்த அனுபவங்கள் யாவும் இந்தக் கல்யாணம் என்கிற பந்தத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்கிற அறிவை எனக்குப் போதித்துள்ளன.

நான் இது விஷயமாக என் சிநேகிதர்களிடம் - அவர்களில் ஆண்களும் உண்டு; பெண்களும் உண்டு - நிறையவே பேசி இருக்கிறேன். வசந்தாவிடம் கூடப் பேசியிருக்கிறேன்.

என்னுடைய வாதம் இதுதான் - இது ஏதோ இந்த பைரவியின் சொந்த அபிப்பிராயம் மட்டும் அல்ல. இந்த மண மறுப்புக் கொள்கையை ஆதரித்து எனது சிநேகிதர்களிடையே ஒரு புதிய கோஷ்டியே உருவாகி வருகிறது.

ஆனால் வசந்தா இந்தக் கட்சியைச் சேர்ந்தவள் அல்ல.

கல்யாணம் என்பது பெண்களை ஆண்களுக்கு நிரந்தரமாக அடிமைப்படுத்தி, அவளைக் கடைத்தர ஜீவனாக்கும் சதி! - என்று நான் சொன்னபோது அம்மாவோடு சேர்ந்து கொண்டு ஆக்ரோஷமாக மறுத்தாள் வசந்தா. அந்த மறுப்பில் அவளை நான் கண்டு கொண்டேன் - இது தொழுவத்துப் பசு என்று.

என்ன வெட்கமில்லாமல் சொன்னாள் வசந்தா! - ஆண்களுக்குப் பெண்கள் அடிமை என்பதை அவள் ஒப்புக் கொள்ள மாட்டாளாம்! ஆனால் பெண் என்பவள் யாராவது ஒரு ஆணுக்கு அடிமையாகத்தான் வேண்டுமாம்.

இவளது இந்த அரிய கண்டுபிடிப்புக்கு அம்மா பெரிசா கைதட்டிப் பாராட்டினாள்.

அதுக்கு என்ன அர்த்தம்? பெண்களெல்லாம் ஆணுக்கு அடிமை இல்லை! ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆணுக்கும் அடிமைன்னா, கடைசியிலே ஒட்டுமொத்தமா பெண்களெல்லாம் ஆண்களுக்கு அடிமைன்னு ஆகறதா இல்லையா...?

வசந்தா அம்மாவுக்கு அடங்கிய பொண்ணுன்னு பேர் வாங்கணும்னு தீர்மானம் பண்ணியிருப்பவள்! நான் அப்படி இல்லை.

ஏதோ படிப்பு விஷயத்தில், சங்கீத விஷயத்தில் அம்மாவிடம் யோசனை கேட்பேனே தவிர உடை விஷயத்தில், ஊர் சுற்றுகிற விஷயத்தில், நண்பர்களோடு சுதந்திரமாகப் பழகுகிற விஷயத்தில் எல்லாம் அம்மாவின் சொற்களை மீறி நடந்து, இதற்குள்ளேயே அடங்காப்பிடாரி என்று பெயரெடுத்து விட்டவள் நான்.

பின்னே என்ன? வசந்தா மாதிரி என்னால் புடவையைச் சுற்றிக் கொண்டு திரிய முடியாது. நான் குர்தாவும் ஜீன்ஸும்தான் அணிந்து கொள்கிறேன். இதுதான் எனக்கு வசதியாக இருக்கிறது.

- என்னுடைய நண்பர்கள் பலர் மோட்டார் பைக்குகளில் வருகிறார்கள்... நான் காலேஜுக்குப் போகிறவரை சைக்கிளில்தான் போனேன்... அந்தப் பழக்கம் இப்போதும் நீடிக்கிறது... இதில் என்ன தப்பு...?

'காலேஜ் படிப்பு எல்லாம்தான் முடிச்சாச்சே... பேசாமல் பாவாடை தாவணி உடுத்திக்கொண்டு வீட்டில் பதவிசாக இருக்க வேண்டும்' என்கிறாள் அம்மா...

முடியாது! முடியாது! முடியாது! - என்று மூணு தடவை சொல்லிவிட்டேன்.

அதே மாதிரி வசந்தாவும் 'என்னால் சைக்கிளில் போக முடியாது! ஜீன்ஸ் போட்டுக்கொள்ள முடியாது! படிப்பு தவிர வேறெதிலும் என்னால் ஈடுபட முடியாது' என்று சொல்லிவிட்டாள். அம்மாவிடம் கை தட்டு வாங்கிக் கொண்டாள்.

அப்பா என் கட்சி... இரண்டே பெண் குழந்தைகளைப் பெற்றதனாலேயோ என்னமோ... அப்பா என்னை ஒரு ஆண்பிள்ளை போல் வளர்த்துவிட்டார். ஆணுக்குப் பெண் அடிமை இல்லை என்கிற என் வாதத்தை அவர் ஆதரிக்கிறார். அவர் அம்மாவை அடிமையாக வைத்திருப்பது போன தலைமுறை விஷயம். அதில் தலையிட நமக்கு அதிகாரம் இல்லை.

தலைமுறைக்குத் தலைமுறை நியாயம் மாறுகிறது. இதுவரை மாறாதிருந்த அநியாயங்கள் இந்தத் தலைமுறையில் மாறத்தான் போகிறது என்ற நம்பிக்கையில்தான் இவர்களையெல்லாம் சகிக்க வேண்டியிருக்கிறது. அப்பாதான் என் கட்சியே தவிர நான் ஒன்றும் அவர் கட்சி அல்ல. இந்தச் சமூக ஆண் வர்க்கப் பிரதிநிதிகளில் அவரும் ஒருவர்... ஆனாலும், எனக்கு அப்பா...

அவருக்கு ஒரு பெரிய கம்பெனியில் சார்ட்டர்டு அக்கவுண்டென்ட் உத்தியோகம். தாத்தா சம்பாதித்து வைத்த சொந்த வீடு. அவர் வேலை செய்கிற ரகம் அல்ல. பல பேரை வேலை வாங்குகிறவர் என்பதால், செய்கிற உத்தியோகத்தில் அலுப்பே கிடையாது. கார் உண்டு. டிரைவர்கள் உண்டு. சிப்பந்திகள் உண்டு... ஒரே ஜபர்தஸ்து... இன்னும் பதினைந்து வருஷம் இருக்கிறது அவர் ரிடையர் ஆவதற்கு...

இளந் தம்பதிகளுக்குக் குழந்தைகளாகப் பிறக்கறதனாலே அந்தப் பெற்றோர்களுக்குத் தங்கள் வயசான காலத்தில் இந்தக் குழந்தைகளோட துணை தங்களுக்கு வேணும்ங்கற உணர்ச்சியே தோன்றுவதில்லை போலிருக்கு... அவசர அவசரமாக வளர்த்து, யார் கையிலேயாவது பிடிச்சுக்

குடுத்துட்டால் எஞ்சியிருக்கிற இளமைக் காலத்தை ஏக போகமாகக் கொண்டாடலாம்னு எண்ணம் போலிருக்கு... யார் வேண்டாம்னு சொல்றா... அதற்குப் பெத்த குழந்தைகள் கூட இருக்கிறது எப்படி இடைஞ்சலாகும்?

நானே ஒரு பையனாக இருந்தால்...? ஒரு குறிப்பிட்ட வயசுக்கு அப்புறம் இந்த வீட்டை விட்டுட்டு நான் வேற வீட்டுக்குப் போயிடணும்னு நினைப்பாளோ?

அப்பா சொல்லுகிறார்:

"உங்க அம்மா சொல்றபடியெல்லாம் கேக்கறதுக்கு வசந்தா இருக்காள்... நீ நான் சொல்றதைக் கேளு... உனக்குக் கல்யாணம் ஆகறபோது ஆகட்டும். நான் ஒண்ணும் அந்தச் சிரமத்தை எடுத்துக்கறதாக இல்லை - நீ இவ்வளவும் சொன்னப்பறம்... அதுக்காக நீ எப்பவும் குழந்தையாகவே இருக்க முடியாது... எங்க ஆபீசிலேயோ இல்லாட்டால் வேற எங்கேயாவதோ உனக்கு உத்தியோகம் பார்த்து வைக்கிறேன்... நீ வேலைக்குப்போ... என்ன சொல்றே?"

நானும் எனது சிநேகிதர்களும் சேர்ந்து தீர்மானித்திருக்கிற முடிவை அப்பாவிடம் தெரிவித்தேன்.

"நாங்கள் கல்யாணமும் செய்து கொள்ள முடியாது? வேலைக்கும் போக முடியாது. என்றென்றைக்கும் இந்த வீட்டில் ஓர் உறுப்பினராய் நான் இருக்கலாமா, கூடாதா! உங்களுக்கு ஏன் திடீரென்று இந்த எண்ணம்? வயது வந்து விட்டதற்காக எங்களை ஏன் அந்நியமாக எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு அப்பாவிடமிருந்து வந்த பதில் "இது அடங்காப்பிடாரித்தனம்..." என்பதே.

அவர் என்னிடம் கோபித்துக் கொண்டதைப்போல் என்னிடம் முகம் கொடுத்துப் பேசுவதை நிறுத்திவிட்டார். இது என்ன எதேச்சாதிகாரம்? இவர்கள் சொல்லுவதை அப்படியே கேட்டு ஏற்றுக் கொண்டுவிட வேண்டும்! இவர்கள் சொல்லுவதில் நமக்குள்ளே சந்தேகத்தையோ, அச்சத்தையோ, மறுப்பையோ தெரிவித்துவிட்டால் உடனே

இவர்கள் நம்மை உதறிவிடுவார்கள். குழந்தைகள் மீது இவர்கள் கொண்டுள்ள உறவுக்கு இவ்வளவு நிர்ப்பந்தமா? இதை என்னால் சகிக்க முடியாது.

அப்பா என்னிடம் பேசுவதில்லை; அம்மா பேசினாலே ஒரே கடுகடுப்பு... என் நடை, உடை, பாவனை, தோற்றம் எல்லாவற்றைப் பற்றியும் விமர்சனம்... இளித்து இளித்துக் காட்டுகிறாள். வசந்தா ஒருத்திதான் என்னைப் பற்றி உள்ளூர என்ன அபிப்பிராயம் கொண்டிருந்த போதிலும், உடன் பிறந்தவள், தன்னைவிடப் பெரியவள் என்பதால் என்னிடம் அன்போடு நடந்து கொள்கிறாள். ஆனால் எல்லா விஷயத்திலும் என் கருத்துக்கு எதிர்க் கருத்து உள்ளவள் தான் வசந்தா, அதனால் என்ன?

இந்த வீட்டிலுள்ள நாலு பேரில் மூன்று பேர் ஒரு பக்கம். நான் மட்டும் தனி. அதுவும் கூடாதாம்... இந்த வீட்டில் எனக்கு உரிமை இருக்கிறது. இவர்களுக்கு நான் தேவை என்பதால் இங்கே இருந்து கொண்டிருக்கிறேன்.

வரவர அம்மாவின் அடக்குமுறைகளும் அப்பாவின் ஆக்கினைகளும் அதிகமாகின்றன,

மொட்டை மாடிக்குப் போகக் கூடாதாம்... ஏதாவது புஸ்தகத்தைப் படிச்சிண்டிருந்தால் படிச்சிப் படிச்சித்தான் கெட்டுப் போனேனாம், இந்த ஜீன்ஸ், சல்வார் கமீஸ் எல்லாத்தையும் தூக்கி ஒரு நாள் நெருப்பிலே போட்டுட்டுத் தன் புடவையைக் கிழிச்சுக் குடுத்துக் கட்டிக்கச் சொல்லப் போறாளாம்... எல்.கே.ஜி.யிலிருந்து என்னோட படிச்சவன் சுரேஷ். அவனோட நான் ஸ்கூட்டர்லே போகப்படாதாம். அவனைப் பார்க்கப்படாதாம். அவனோடு பேசப்படாதாம். இதெல்லாம் என்ன அநியாயம்!

இந்த அநியாயத்துக்குப் பணிய என்னால் முடியாது.

எனக்கு வயசு இருபத்தி ஒண்ணு. நான் வயசு வந்த ஓர் இந்தியப் பிரஜை. ஓட்டுப் போடவும் உரிய அரசைத் தேர்ந்தெடுக்கவும் உரிமை படைத்தவள். இந்தக் காலத்தில்

ஒரு பெண்ணை வீட்டுக்குள் பூட்டி வைப்பது சட்டப்படி குற்றம். இந்த அம்மா அதைக்கூடச் செய்து விடுவாள் போலிருக்கிறதே!

சில பெண்கள் வீட்டைவிட்டு ஓடிவிடுகிறார்கள் என்றெல்லாம் அடிக்கடி கேள்விப்படுகிறோமே, அதை எல்லாரும் சகட்டு மேனிக்குக் காதல் விவகாரம் என்று நினைத்து விடுகிறார்கள். அது எவ்வளவு தப்பு! இந்த மாதிரி அடைத்து வைத்தால் ஒரு பெண்ணுக்கு இந்தத் தடைகளை உடைத்துக் கொண்டு வெளியேறித் தன் வழியைத் தன்னிச்சையாய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் ஏன் வராது? நன்றாய் வரும்! எனக்கே வருகிறது.

ஒரு பெண் அப்படித் தன் வழியைப் பார்த்துக் கொள்கிற பொழுது ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இவர்கள் காட்டும் வழியைவிட அவளது அந்தத் தனிவழி சிறப்பானதாக இருக்க வேண்டும்.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கும் உடைய புதுமைப் பெண்களுக்கு உதாரணங்களே இல்லையென்றா நினைக்கிறார்கள்? தான் அப்படிப்பட்ட ஒருத்தியென்று இந்தப் பைரவி நிரூபித்துக் காட்டுவாள்!

"என்ன ரொம்ப நாழியா ஒரே யோசனை?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறேன்... வசந்தாதான்!

"நீயே சொல்லுடி வசந்தா... இந்த அம்மா பண்றது நியாயமா? என்னை வெளியே போகக்கூடாதுங்கறாளே... சுரேஷ் நமக்கு என்ன அந்நியனா? அவனோட வெளியே போகக் கூடாதாம்... என் இஷ்டப்படி நான் டிரஸ் பண்ணிக்கக் கூடாதாம்."

வசந்தா உதட்டைக் கடித்துக் கொண்டே தர்ம சங்கடத்துடன் யோசித்தாள்.

"முன்னெல்லாம் அப்பாவாவது என்கூடப் பேசுவார்... நான் வேலைக்குப் போகமாட்டேன்னு சொன்னதிலேருந்து

அவருக்கும் என் மேலே கோபம். இந்த வீட்டிலே நான் இருக்கிறதா, இல்லே வேற எங்கேயானும் ஓடிப் போறதான்னு யோசிச்சிண்டிருக்கேன்.”

வசந்தா அதிர்ச்சியடைந்து புருவங்களை உயர்த்தி விழிகள் விரிய என்னைப் பார்த்தாள்.

"திஸ் இஸ் டூ மச்" என்று அவளது உதடுகள் முனகின.

“எனக்கு முன்னால் மாடி வராந்தாவில் உலாத்தியவாறே யோசிக்கிறாள் வசந்தா. அவள் என்னைப் பார்ப்பதிலிருந்து அவள் யோசனை என்னைப் பற்றித்தான்" தெரிகிறது.

“நீ அப்பா சொல்கிறபடி ஏன் ஏதாவது வேலைக்குப் போகக் கூடாது?”

நான் ஏன் வேலைக்குப் போகமாட்டேன்? சுதந்திரமாக இருப்பேன் என்றெல்லாம் ஒவ்வொருவருக்கும் நான் எப்படி விளக்கிச் சொல்வது? அதை நான் உணர்கிற மாதிரி எப்படி இவர்களை உணர வைக்க முடியும்.

எனக்குத் தோன்றுகிற முதல் விஷயம் ஒரு வேலைக்கு மனுப் போடுகிற கூட்டத்தைச் சேர்ந்தவள் அல்ல நான் என்பது. வேலையில்லாத் திண்டாட்டம் நிறைந்த நாடு இது. எவ்வளவோ ஏழைகள் ஒரு உத்தியோகத்துக்குப் போய்த் தான் தானும் தன்னைச் சேர்ந்த சில ஜீவன்களும் உயிர் வாழ முடியும் என்று தவித்துப் போராடுகிற தரத்தில் உழல்கிற இளைஞர்கள். அவர்களுக்கு இணையான ஏழைப் பெண்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்! என்னுடைய நண்பர்களில் பலர் அத்தகையவர் உண்டு. அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு டம்ப வாழ்க்கை வாழ்கிற இந்தக் குடும்பத்துக்கு இப்போது வருகிற வருமானம் போதாதென்று அந்த ஏழைகளின் வயிற்றுச் சோற்றைப் பறிக்கிற மாதிரி, வசதி உடையவர்கள் தங்களது உல்லாசச் செலவுக்காக உத்தியோகம் பார்ப்பது குறித்து நானே எவ்வளவு கடுமையாகப் பேசி இருக்கிறேன்.

"உனக்குத் தெரியாது வசந்தா. நம்மை மாதிரி தரத்துப் பெண்கள் வேலைக்குப் போனால் அது சரியில்லை - நாம் வெறும் அலங்காரப் பொம்மைகளாகத்தான் அங்கே கருதப்படுவோம். எந்த வேலைக்குப் போனாலும் நமக்கு மேலே ஒருவன் இருந்து கொண்டு தாலி கட்டிய பெண்டாட்டியிடம் பண்ண முடியாத அதிகாரமெல்லாம் பண்ணுவான். சம்பளம் வாங்குவதற்காக எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டும். அதைவிட அந்த மாதிரி வேலை செய்கிற பெண்களையெல்லாம் திரட்டிப் போராடுகிற வேலை ஏதாவது வந்தால் அதில் நான் போய்க் கலந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்."

வசந்தாவின் முகம் மறுபடியும் சுளித்தது. இப்போது அவள் என் எதிரே தூணைக் கட்டிக்கொண்டு ஏதோ பைத்தியக்காரியைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்க்கிறாள். என்னுடைய 'விதண்டா வாதங்கள்' இவளுக்குப் புரியவில்லை போலிருக்கிறது.

"என்னை வேலைக்குப் போன்னு நீங்கள் ஒவ்வொருத்தரும் சொல்றது என்னை அவமானப்படுத்தற மாதிரி இருக்கு. எனக்கு எவ்வளவோ திறமைகள் இருக்கு. என் சிநேகிதர்களும் எவ்வளவோ பேர் அப்படிப்பட்ட திறமைகள் உடைய இளங் கலைஞர்கள். உனக்குத் தெரியாது. சுரேஷ் எப்படிப்பட்ட கவிஞன், எப்படிப்பட்ட ஓவியன் என்று!”

நான் பேசிக் கொண்டிருக்கும்போது இடைமறித்துச் சொல்கிறாள் வசந்தா.

"யாராவது அப்பா சம்பாதிச்சு வெச்சா பிள்ளைகள் நீ சொல்ற மாதிரி கலை, கவிதைன்னு திரியலாம். அதுவும் ஒரு மாதிரி யாரையோ அண்டி வாழ்க்கைதானே? இது ஏன் உனக்குப் புரியவில்லை."

நானும் பதிலுக்குச் சரியாகச் சொல்ல வேண்டியிருந்தது: "அப்பா மட்டும் எங்கிருந்து கொண்டு வந்தாராம்? இந்த வீடு தாத்தா கட்டியது அல்லவா? மற்ற சொத்துக்களும் தாத்தா சேர்த்தது அல்லவா? நான் எனது திறமைகளை வளர்த்துக்

கொள்ளுவேன். வயது எனக்கு இருபத்தி ஒன்றுதானே ஆகிறது! அதற்குள் நான் என்னைப் பற்றி ஏன் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும்? அப்பா சொல்ற இந்த நவீனகால உத்தியோக வாழ்க்கை முறையும் எனக்கு ஒத்து வராது! அம்மா சொல்ற அந்தப் பழையகால மாட்டுத் தொழுவ வாழ்க்கை முறையும் எனக்குச் சரிப்பட்டு வராது. நான் ஒரு சுதந்திரப் பறவை. எனக்குத் தெரியும் - சுதந்திரம் என்றால் சுயகட்டுப்பாடு என்று...”

மாடிப்படி அருகேயிருந்து அம்மாவின் குரல் கேட்கிறது: "வசந்தா! நீயும் போய் அவளோட சங்கமம் ஆயிட்டியோ?”

“போடி... அம்மா கூப்பிடறா... இப்பத்தானே காலேஜ்லேருந்து வந்திருக்கே" என்று சொல்லி அவளை அனுப்பி விட்டு ஸ்டாண்டில் கிடந்த ஜீன்ஸை எடுத்து அதில் இறங்கிக் கொள்கிறேன்... ஐந்து மணிக்கு சுரேஷ் வருவான். ஆறு மணிக்கு நண்பர்களெல்லாம் 'டிரைவ்-இன்'னில் சந்திப்பதாக ஏற்பாடு. இன்னிக்கி நான் வெளியே புறப்படுவதற்கு முன்னால் இந்த அம்மா என்ன நாடகம் ஆடப்போகிறாளோ! சில நாட்களாகவே வீட்டில் ஒரே டென்ஷன்.

இன்னிக்கின்னு அப்பாவும் நேரத்தோட வீட்டுக்கு வரார்... அதனால் என்ன? ஒருவேளை அப்பா இருந்தால் அம்மா கொஞ்சம் சமாதானமாயிருந்தாலும் இருப்பாள்... ஒண்ணும் சொல்றதுக்கில்லே! என்னை எதிர்த்து எல்லாரும் ஒண்ணா ஆயிட்டாங்க இந்த வீட்டிலே.

பாவம்; வசந்தா நல்லவள். அப்பா - அம்மா மீதும் என்மீதும் எப்போதும் குழந்தைபோல அன்பு செலுத்துகிறவள். அவள் அபிப்பிராயங்களை மறுத்தோ அல்லது எதிர்த்தோ நான் ஏதும் சொல்லுவதில்லை. என்னோடு பழகியதால் நான் அவளைக் கெடுத்துவிட்டேன் என்று அம்மா பழி சொல்லுவாள் என்கிற பயம்தான்!

நானும் என் சிநேகிதர்களும் கூடி, இளைஞர்களான நாம் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று தீர்மானித்த

காரணங்களை ஊரறியப் பிரகடனம் செய்தால் கூட நல்லது. இது ஏதோ பைரவி என்கிற என் சம்பந்தப் பட்ட பிரச்னை மட்டுமா?

ஒரு பக்கம் மக்கள் தொகை பெருக்கத்தைப் பற்றி நாடே அலறுகிறது! இன்னொரு பக்கம் ஆண்களும் பெண்களும் கல்யாணமோ காதலோ என்று அலையோ அலை என்று அலைகிறார்கள்!

ஒரு பக்கம் வறுமை, ஏழ்மை! இன்னொரு பக்கம் இவர்களை மேலும் மேலும் இந்த நரகத்திலேயே இழுத்து விடுகிற தூண்டுதல்கள் போல் ஆண் - பெண் சேர்க்கை பற்றிய விகாரமான ரசனைகளும், பிரச்சாரங்களும்...

இதிலெல்லாம் சிக்காதவர்கள் நானும் என் சிநேகிதர்களும். எனக்கு ஒரு விதத்தில் இதையெல்லாம் கற்றுத் தந்தவன் இந்த சுரேஷ்தான் என்று சொல்ல வேண்டும்.

கல்லூரியில் படிக்கும்போது மாணவர் சங்கத்தில் அவனுக்கு நிறைய மதிப்பு இருந்தது. மிகவும் வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவன்! தமிழன் இல்லை. வெகுகாலம் தமிழ்நாட்டிலேயே வேரூன்றிவிட்ட வட நாட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நாலைந்து அண்ணன்மார் உண்டு. இவன்தான் கடைசிப் பையன்.

எப்படியோ நர்ஸரி கிளாஸிலிருந்து கல்லூரி வரை நாங்கள் நண்பர்களாகவே வளர்ந்துவிட்டோம். இந்த வீட்டில் எல்லாரோடும் குழந்தைப் பருவம் முதலே அவன் பழகியிருக்கிறான். ஆனால் எனக்கோ, எங்கள் குடும்பத்தாருக்கோ, அவன் குடும்பத்தோடு ஒன்றும் பரிச்சயமில்லை. அவர்கள் ரொம்பப் பெரிய குடும்பத்தினர். அவன் அப்பா பெரிய தொழிலதிபர்.

சுரேஷை அவனது போக்குக்காக அவனது குடும்பத்தினர் சுதந்திரமாக விட்டுவிட்டனர். அவனுக்கு ஓவியத்திலும் ஈடுபாடு உண்டு. தன் வீட்டிலுள்ள அவுட் ஹவுஸைத் தனது

ஓவியக் கூடமாகவும் வாசஸ்தலமாகவும் மாற்றிக் கொண்டு தனியே வாழ்கிறான் சுரேஷ்.

நாங்களெல்லாம் உடன்பிறவா சகோதர சகோதரிகளாகத்தான் பழகிக் கொண்டிருக்கிறோம். பழங்காலக் கண்ணாடி வழியாகப் பார்க்கும் அம்மாவுக்கும் இது புரியாது. இந்தப் புதிய காலப் போலி வெளிச்சத்தில் மயங்கிப் பார்க்கும் அப்பாவுக்கும் இது புரியாது.

இன்னும் கொஞ்ச நேரத்தில் சுரேஷ் வந்துவிடுவான். நான் வாசலிலே போய் நின்று கொள்ளலாம் என்ற நினைப்புடன் தோளில் மாட்டிய பையோடு இறங்கி வரும் போது அம்மாவின் அதட்டல் குரல் கேட்டது.

"என்னடியம்மா... பொழுது சாஞ்சதும் புறப்பட்டாச்சா...? நல்லவேளை! இன்னக்கி உங்க அப்பாவும் இருக்கார். இன்னக்கி இதுக்கு ஒரு முடிவு கட்டணும். இங்கே வந்து பாருங்களேன், இவள் கோலத்தை! இந்த மாதிரி இவ வெளியிலே சுத்தறதை இன்னையோட நிறுத்தியாகணும்...!"

அப்பா உடை மாற்றிக் கொண்டு அறைக்குள்ளிருந்து வெளியே வந்தார். ஹால் ஸோபாவில் உட்கார்ந்து கொண்டு இதையெல்லாம் கவனிக்காமல் என்னமோ பாடம் எழுதிக் கொண்டிருந்தாள் வசந்தா.

மாடிப்படியின் நடுவே நின்று கொண்டிருக்கிற என்னை ஹால் நடுவே நின்றிருந்த அப்பா தலை உயர்த்திப் பார்த்து மெதுவான குரலில் கேட்டார்:

"ஏம்மா... ரொம்ப முக்கியமான காரியமா?”

"ஆமாம்ப்பா... இன்னிக்கு நாங்க ஒரு முஷைரா நடத்தப் போறோம். முஷைரான்னா கவியரங்கம் மாதிரி. ஆனால் எழுதிக்கிட்டு வந்து படிக்கக்கூடாது, 'ஸ்பான்ட் டேனியஸா' அங்கேயே தோணினதைப் பாடணும். சுரேஷ் இங்கிலீஷ்லே கவிதை சொல்லுவான்” என்று உற்சாகமாகச் சொல்லிக்கொண்டு மாடிப்படியில் நான் இறங்கி வந்தேன்.

அம்மா வழியை மறித்தவாறு குறுக்கே வந்து நின்றாள். "முக்கியமான இடத்துக்குப் போறவா ஒண்ணும் இப்படி டிரஸ் பண்ணிண்டு போக மாட்டா. நீ இந்த சுரேஷோட சுத்திக்கிட்டு இருக்கியே - 'கல்யாணம் வேண்டாம், உத்தியோகம் வேண்டாம்'னு இதுக்கு என்ன அர்த்தம்?"

"அம்மா! நீயும் காலேஜ்லே படிச்சிருக்கேன்கிறே. என்னோட ஃபிரண்ட்ஸ் எல்லாம் எப்படி டிரஸ் பண்ணிக்கிறாளோ அதே மாதிரி நானும் பண்ணிக்கிறேன். சுரேஷ் எனக்கு நண்பன், வழிகாட்டி. நான் அவனுக்கு ரக்ஷாபந்தன் கட்டியிருக்கேன் தெரியுமோ? அவங்க பழக்கமில்லியா, அது? அதனாலே அவனோட நான் வெளியிலே போறதைப் பத்தி நீ தப்பால்லாம் நினைக்கக்கூடாது" என்று நான் சமாதானமாச் சொல்லுவது அம்மாவைச் சாந்தப்படுத்துகிறது. ஆனாலும் புத்தி முகத்தில் கோணிக் கொண்டிருக்கிறது.

அப்பா நிதானமாக ஸோபாவில் உட்கார்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டு சிகரெட்டைப் பற்றவைத்த பின்னர் சொன்னார்:

"எனக்கு இதைப்பத்தியெல்லாம் லட்சியமில்லை! நீ எப்படி வேணுமானாலும் டிரஸ் பண்ணிக்கோ! யாரோட வேணாலும் சிநேகிதமா இரு. ஆனால் யாரோட செலவிலேயாவது இப்படியே எப்பவும் வாழ்ந்துக்கிட்டு இருக்கலாம்னு நினைக்காதே. அமெரிக்காவிலேயெல்லாம் பதினெட்டு வயசுக்கு மேலே எவ்வளவு பணக்காரங்களாக இருந்தாலும் அவங்க பெத்த குழந்தைகளை உங்க கையை நம்பிப் பிழைத்துக் கொள்ளுங்கள்னு விட்டுடறாங்க தெரியுமோ?"

அடடே! அப்பாவுக்கு அமெரிக்காவைப் பற்றி ரொம்பத்தான் தெரிகிறது என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டேன்.

"அப்பா! இந்த வீட்டுப் பொருளாதாரத்தில் எனக்குப் பங்கு இல்லையா? இல்லை, தெரியாமல்தான் கேட்கிறேன். இந்த வீட்டில் என்னால் ஒரு உபயோகமும் இல்லையா?

உங்களுக்கும் அம்மாவுக்கும் நான் பணிவிடைகள் செய்யவில்லையா? நாளெல்லாம் தையல் மிஷினில் உட்கார்ந்து இந்த வீட்டு ஜன்னல்களுக்கும் கதவுகளுக்கும் ஸ்கிரீன் தைத்துப் போடவில்லையா? இப்படி நாங்கள் செய்வதை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா? ஏன் நீங்கள் இப்படிப் பெற்ற குழந்தைகளை விரட்டிவிட எண்ணுகிறீர்கள்? எங்களைச் சுதந்திரமாக இங்கேயே இருக்கவிடுங்கள். நாங்கள் ஒரு பொழுதும் சோம்பேறிகளாகி உங்களுக்குக் சுமையாகி விடமாட்டோம்" என்று மிகவும் பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

அப்பாவுக்கு ஏனோ கோபம் வந்துவிட்டது. இந்த வீட்டையும் இதைச் சேர்ந்த சொத்துக்களையும், சம்பாதித்துச் சேர்த்தது அப்பா இல்லை என்று நான் சொல்லிக் காட்டி விட்டதாக நினைத்துக் கொண்டார் போலிருக்கிறது.

இந்தப் பெரியவர்கள் எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்வார்கள்! இளைஞர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டினால் அவர்கள் தாங்கிக் கொள்ளவே மாட்டார்கள் போலிருக்கிறது.

"இதோ பார் பைரவி! உன்னிடம் அதிகம் பேசிக் கொண்டிருப்பது மரியாதைக் குறைச்சல் போல் இருக்கு. இருந்தாலும் சொல்றேன். என் பேச்சுக்கோ இல்லே உங்க அம்மா பேச்சுக்கோ கட்டுப்பட்டு இருக்கிறதுதான் உனக்கு நல்லது. வீணாகக் கைமீறி நடந்தால் கஷ்டப்படுவே. எங்க பேச்சுக்குக் கட்டுப்படறதுக்கு அடையாளமா இன்னிக்கு நீ வெளியே போகாமல் இருக்கணும். சுரேஷ் வந்தால் நீ வரமாட்டேன்னு நான் சொல்லி அனுப்பிச்சுடுவேன். இப்ப நீ மாடிக்குப் போ!"

'வாட் நான்ஸன்ஸ்' என்று நினைத்துக் கொண்டு, "நீங்க சொல்றது ஒண்ணும் நல்லா இல்லேப்பா. நான் வெளியில் போவேன். அதோ சுரேஷ் வந்தாச்சு" என்றேன்.

அம்மா எனக்கு முன்னால் வெளியிலே போய் சுரேஷிடம் கத்தினாள்: "ஏண்டாப்பா பெரிய குடும்பத்துப் பையனுக்கு

இது நல்லா இருக்கா? ஒரு வயசு வந்த ஆம்பளைப் பையன் இப்படி ஒரு பொட்டச்சியைத் துரத்தி கிட்டுத் திரியறயே, உனக்கு வெட்கமில்லை? தூ..."

இந்த அநாகரிகமான வரவேற்பை எதிர்பார்க்காத சுரேஷ் பொறிகலங்கி நிற்பதைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. நான் அம்மாவைத் தாண்டிக் கொண்டு போய் சுரேஷின் கையைப் பற்றிக் கொண்டு மன்னிப்புக் கேட்டேன்.

அவனுக்கு அம்மா கத்தியது எதற்கு என்றும் தெரியவில்லை. நான் மன்னிப்புக் கேட்பது எதற்கு என்றும் புரியவில்லை, கைக்கடிகாரத்தைப் பார்த்து, "புறப்படு நாழியாச்சு" என்றான். ஆனாலும் அவன் உள்ளூரக் காயம்பட்டுவிட்டது எனக்குத் தெரிந்தது.

நான் எப்பொழுதும் பொறுமை இழப்பதோ கோபவசப்படுவதோ இல்லை. ஆனால் இவ்வளவுக்கும் பிறகு நான் என்ன செய்யவேண்டும் என்பதை ஒரு நொடியில் நிதானமாய்த் தீர்மானித்தேன்.

என்னைப் புரிந்து கொள்ளாமலும் தவறாகப் புரிந்து கொண்டும் இருக்கிற இவர்கள் என்னை எவ்வளவு அவமானச் சொற்களைச் சொல்லியிருந்தபோதிலும் அதற்கு இவர்களுக்கு உரிமை இருக்கிறது என்று நான் பொருட்படுத்தாமல் இருந்தேன்.

ஆனால் பிறர் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய ஒரு நண்பனை அவமானப்படுத்திய பிறகு இவர்களோடு சொந்தம் கொண்டாடிக் கொண்டு என்னால் இனிமேலும் இங்கே இருக்க முடியாது. இப்பொழுதும் கூட நான் நிதானமிழந்து ஏதும் சொல்லிவிடவில்லை.

சுரேஷ்! ஒரு நிமிஷம் இரு. இவர்களோடு இறுதியாகக் கணக்குத் தீர்த்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு மாடிக்குப் போனேன். ஏற்கனவே தோளில் தொங்கிக் கொண்டிருக்கிற பையில் மாற்று உடை எடுத்துத்

திணித்துக் கொண்டேன். நான் எப்போதும் அலங்காரப் பொருட்களை உபயோகிப்பதில்லை. என்னுடைய சில புத்தகங்கள், குறிப்புகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டேன். பணம் ஏதோ கொஞ்சம் இருக்கிறது. அப்பா தந்ததுதான்.

"ஏதோ அமெரிக்காவில்தான் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் தன் கையே தனக்கு உதவி என்று வாழ முடியும் என்று நினைக்காதீர்கள். இங்கேயும் முடியும்! இந்த வீட்டில் எனக்குச் சுதந்திரமும் இல்லை; சுயமரியாதையும் இல்லை. அப்பாவின் சம்பாதனையிலோ தாத்தாவின் சொத்துக்களிலோ நான் ஒன்றும் உரிமை கொண்டாடிக் கொண்டு திரும்பவும் இங்கே வரமாட்டேன்" என்று சொல்லிவிட்டு யாருடைய பதிலையும் எதிர்பாராமல் நான் என் வீட்டை விட்டு வெளியேறினேன்.

வாசற்படியைத் தாண்டும்போது கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. மீண்டும் இந்த வாசற்படியைத் தாண்டி இந்த வீட்டுக்குள் நான் வரமாட்டேன் என்கிற என்னுடைய உறுதியிலே விளைந்த வருத்தம் அது.

மனிதர்கள் மனம் மாறினால்...? ஒரு வேளை நானும் மாறலாம்; மாறாதிருக்கக் கூடிய பிடிவாதக்காரியா நான்? இவர்கள் மீது கோபமோ குரோதமோ கொண்டா நான் வெளியேறுகிறேன்? இல்லை இல்லை.

குழந்தைகளின் வாழ்க்கைப் புத்தகத்தில் பொறுப்பில்லாமல் கிறுக்குவதற்கு எந்தப் பெற்றோருக்கும் உரிமை இல்லை என்பதால் அந்த உரிமையை மறுக்கிற நான், இவர்கள் உறவில் உடல் வளர்க்கக் கூடாது என்பதால் இந்த வீட்டை விட்டு வெளியேறுகிறேன்.

முன்புறத் தோட்டத்தில் நானே நட்டு வளர்த்துப் பயிராக்கிய அந்த ரோஜாச் செடிகளை, என் மீது கொண்ட கோபத்தால் காய்ந்து தீயவிட்டு விடுவார்களோ என்று அப்போதே மனம் கலங்கியது.

அப்பாவின் குரல் பின்னால் பிரகடனம் போல் ஒலித்தது: “போ... போ... எங்களுக்கு ஒரு மகள்தான் பிறந்தாள் என்று தீர்மானித்துக் கொள்கிறோம். அடங்காப் பிடாரியான நீ, எங்களை உன் பெற்றோர் என்று சொல்லிக் கொண்டு திரியாதே, நீ எக்கேடு கெட்டாலும் உன்கூடப் பிறந்த இன்னொருத்தி இருக்கிறாளே அவள் வாழ்க்கை பாழாகாமல் நடந்துகொள். உனக்குத்தான் இருபத்தியொரு வயசாகி விட்டதே, உன்னை யார் கட்டுப்படுத்த முடியும்?”

"நாங்கள் சுயகட்டுப்பாடு உடையவர்கள் அப்பா. நீங்கள் சொன்ன மாதிரி நான் யாருக்கும் எப்பழியும் வராமல் நடந்து சொல்வேன்." இந்த வினாடி முதல் நான் ஒரு அநாதை என்ற நினைப்புடன் புறப்பட்டுவிட்டேன்.

நான் ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்தபோது அப்பா உள்ளே திரும்பி வசந்தாவிடம் ஆங்கிலத்தில் சொல்கிற வார்த்தைகள் என் காதில் விழுந்தன.

"இந்த முட்டாள் குழந்தை நினைக்கிறது: ஐஸ்கிரீமிலும் கூல்டிரிங்கிலும் உயிர் வாழ்ந்துவிட முடியும் என்று... நன்றாய் பாடம் கற்றுக் கொள்ளட்டும்.”

எங்கள் ஸ்கூட்டர் 'டிரைவ் - இன்'-ஐ நோக்கிப் போயிற்று. அந்த ரெஸ்டாரெண்டின் வாசலை நெருங்கும் போதே தூரத்தில் மூன்று ஸ்கூட்டர் மீது அமர்ந்து இருக்கிற நண்பர்களின் கூட்டம் தெரிந்தது.

போய் இறங்கிய மாத்திரத்தில் இதுவரை மௌனமாக ஸ்கூட்டர் ஓட்டி வந்த சுரேஷ் அந்த நண்பர்களிடம் அறிவிப்பது போல் சொன்னான்.

"நாம்ப முஷைரா ஆரம்பிப்பதற்கு முன்னால் ஒரு முக்கியமான விஷயம்...”

"ஐஸ்கிரீம்தானே...? அதுக்கெல்லாம் ஏற்கனவே ஆர்டர் பண்ணியாச்சு. டோண்ட் பாதர்” என்றொரு குரல் எனக்குப் பின்னாலிருந்து ஒலித்தது. திரும்பிப் பார்த்தேன். "ஓ! ரவியா?"

எங்கள் கூட்டத்தில் இவன் ஒரு நல்ல ஆள். அரசியல் சாஸ்திரத்திலும் விஞ்ஞானத்திலும் ஈடுபாடு கொண்டவன். நன்றாகக் கிதார் வாசிப்பான். இவன் பெற்றோர் வெளியூரில் இருக்கிறார்கள். இவன் ஹாஸ்டலில் தங்கி போஸ்ட் கிராஜுவேட் படித்துக் கொண்டிருக்கிறான். எங்கள் கூட்டத்திலேயே பெரியவன். எங்கள் 'கல்யாண மறுப்பு, உத்தியோக மறுப்பு' இரண்டு கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டவன். அவனது தாடிக்குள்ளும் பரட்டைத் தலைக்குள்ளும் ஒளிந்து கொண்டிருக்கிற குழந்தையை நாங்கள்தான் அறிவோம். இங்கிலீஷில்தான் அவனுக்குப் பேச வரும். அதற்காக அவனுக்குத் தமிழ் தெரியாதென்றோ தாய்மொழி குறித்துத் தாழ்வுணர்ச்சி கொண்டவன் என்றோ சொல்ல முடியாது. சங்க இலக்கியத்தின் பெருமையைக்கூட அவனால் இங்கிலீஷில்தான் விளக்க முடியும். அவன் பேசப் பேச நான் அதைத் தமிழில் மனத்துள் மொழி பெயர்த்துக் கொள்வேன். அதனால்தானோ என்னமோ என்னுடைய பாஷையே நான் பேசுவதுகூட - ஒருவகை மொழிபெயர்ப்பு பாஷையாகிவிட்டது.

கூட்டம் ஆரம்பமாயிற்று. சுரேஷ் சொன்னான்:

"பைரவி அவளுடைய வீட்டைவிட்டு வெளியேறி வந்துவிட்டாள். எதிர்பார்க்காமல் திடீரென்று ஒரு அவசரத்தில் அவள் இந்த முடிவுக்கு வந்துவிட்டாள். இதற்கு அர்த்தமென்ன தெரியுமா? அடுத்தவேளை அவள் எங்கே சாப்பிடப் போகிறாள் என்று அவளுக்கே தெரியாது! என்ன சரிதானே" என்று கூறிவிட்டு என்னைப் பார்த்தான். நான் ஒரு புன்னகை செய்தேன். அவன் தொடர்ந்து ஆங்கிலத்தில் சொன்னான்:

"நண்பர்களான நம்மிடையே நிலவுகிற ஆண் - பெண் சமத்துவம் நாம் வாழ்கிற இந்தச் சமூகத்தில் கிடையாது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தச் சமூக மனிதன் ஒரு பெண்ணை எப்படிப் பார்க்கிறான் என்பதற்கு இதோ இது ஒரு உதாரணம்" என்று கையை உயர்த்திக்

காட்டினான். அவன் காட்டிய திசையில் நாங்கள் திரும்பிப் பார்த்தோம்.

'ஆஹா ஹா...!' என்று எல்லாரும் வாய் பிளந்து பார்க்கும் ஒரு கவர்ச்சி நடிகை, 'ஓ ஹோஹோ' என்று நகரத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு படத்திற்காகக் கொடுத்திருக்கும் அலங்கோலப் போஸ் கண்ணைக் கூச வைக்கிறது.

“அந்தப் பெண்ணையும் இந்தப் பைரவியையும் எது பேதப்படுத்துகிறது? அவளுக்கு ஆண்டவன் உடம்பை மட்டும் தான் வைத்திருக்கிறான்? இவளுக்கு அறிவையும் சேர்த்து வைத்துவிட்டான். அறிவுச்சுடர் மிகுந்த இளைய தலைமுறையைப் புரிந்து கொள்வது அதன் முந்தையை தலைமுறைக்கு மிகவும் கடினம். இவளது பெற்றோர் “இளம் வயது முதல் எங்களை அறிந்த இவளது பெற்றோர் எங்களது நட்பைக் கூடச் சந்தேகிக்கிறார்கள். என்னைப் பெற்றவள்கூட என்னைக் கோபித்துக் காறித் துப்பியதில்லை” என்று சொன்னபோது சுரேஷுக்குத் தொண்டையை அடைத்தது. என்னால் அவனுக்கு நேர்ந்த அவமானத்தை நினைத்து எனக்கு அழுகையே வந்து விட்டது.

"பைரவி நீ வருத்தப்படாதே... நான் ஒன்றும் காயப்பட்டு விடவில்லை... நடந்ததை நண்பர்களுக்குச் சொல்லுகிறேன். சரி, இப்போது இந்தப் பைரவியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்முடையது. என்ன செய்யலாம் என்று உங்கள் யோசனையைச் சொல்லுங்கள்" என்று சொல்லி அவர்கள் ஒவ்வொருவரின் முகத்தையும் உற்றுப் பார்த்தான் சுரேஷ். அவனது பெரிய கண்கள் கண்ணாடிக்குள் இன்னும் பெரியதாகத் தெரிந்தன.

எங்கள் குழுவில் என்னைச் சேர்த்து மூன்று பெண்கள். ஒருத்தி ரேகா! இன்னொருத்தி வாணி. இருவரும் என்னை விட ஓரிரு வயது பெரியவர்கள்.

ரேகா ஒரு போலீஸ் ஆபீசரின் பெண். வாணியின் அப்பா என்னமோ ஒரு வாரியத் தலைவர்; அரசியல் பிரமுகர். அவர்

நம்பர் ஒன் ஊழல் பேர்வழி என்பது வாணியின் தீர்ப்பு!

ஸ்கூட்டரில் கால் வைக்கிற இடத்தில் ஏதோ மரப் பொந்துக்குள் தன்னை நுழைத்துக் கொண்டிருக்கிறவள் மாதிரி குறுக்காக உட்கார்ந்து கொண்டிருந்த வாணிதான் ஆரம்பித்தாள்.

"சும்மா மருவிலிருந்து மலையை உருவாக்காதீர்கள். நான் எத்தனை முறை வீட்டை விட்டு வெளியே வந்திருக்கிறேன் தெரியுமா? இட் இஸ் அவர் ரைட்!" என்று காற்றில் மிதப்பது போன்ற குரலில் சொன்னாள்.

"என்ன ரைட்? வீட்டைவிட்டு வெளியிலே ஓடிவரதா?" என்று கோபால் குறுக்கிட்டான்.

அவனைப் பார்த்தபொழுது அவன் விட்ட சிகரெட் புகை அவன் முகத்தை மறைத்தது. "ஒருவர் பேசும்போது குறுக்கே எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது என்பது தெரியாதா?" என்று நான் கோபாலைக் கண்டித்தேன்.

"ஸாரி..." என்று சொல்லிவிட்டு அவன் மீண்டும் புகையை இழுத்தான்.

வாணி தொடர்ந்து சொன்னாள்:

"நாம் நமது வீடுகளை விட்டு வெளியே வந்துவிட்ட போதிலும் அந்த வீட்டில் நமக்கு இருக்கிற உரிமையை யார் மறுக்க முடியும்? என்னுடைய நடைமுறையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் சொந்தங்களை மறுத்துவிட்டுத் தெருவில் அனாதையாக நிற்க வேண்டுமென்று வீட்டை விட்டு வெளியேறுவதில்லை. வீட்டுச் சூழ்நிலை நம்மை அப்படி வெளியேற வைக்கிறது. எல்லா விஷயத்திலும் அவர்களது பார்வை வேறாகவும் நம்முடைய பார்வை மாறாகவும் இருக்கிறது. அவர்கள் நமக்குப் பொருந்தாத வாழ்க்கை முறைக்குள்ளே நம்மை வலுக்கட்டாயமாக முறித்துத் திணிக்கப் பார்க்கிறார்கள். அது மாதிரி சமயங்களில் நான் திமிறிக் கொண்டு வெளிப்பட்டு விடுகிறேன். அப்படி வெளியேற எனக்கு

உரிமை உண்டு. அதுபோல திரும்பிப் போகவும் எனக்கு உரிமை உண்டு. பிரச்னை ஒன்றுமில்லை. பைரவி, இப்போது நீ என்னுடன் வந்து தங்கலாம். கொஞ்சம் சூடு ஆறின பிறகு ஒன்று நீயாகவே உன் வீட்டுக்குப் போவாய். அல்லது அவர்கள் வந்து உன்னை அழைத்துக் கொண்டு போவார்கள்.”

அவள் இவ்வாறு சொல்லி முடித்ததும் அடுத்து ரேகா சொல்ல ஆரம்பித்தாள். அவள் பேசுகிறபொழுது யார் முகத்தையும் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டு தனக்குத்தானே பேசிக் கொள்வது மாதிரி பேசினாள். எங்கள் தலைகளுக்கு மேல் கவிந்திருந்த தூங்குமூஞ்சி மரத்தின் மயிற்பீலிப் பூக்கள் அவளது குனிந்த தலையின் மீது உதிர்ந்து கொண்டிருப்பதை நான் ரசித்தேன். ரேகா தமிழிலேயே பேசினாள்:

"நாம் இதில் முக்கியமாகப் பார்க்க வேண்டிய விஷயம் பைரவியை எங்கே 'அக்காமடேட்' பண்றது என்பதல்ல. அது ரொம்ப ஸிம்ப்பிள். ஆனால் நிஜமாக அவளுக்கும் அவ அப்பா - அம்மாவுக்கும் இடையிலே என்ன தகராறு, அவங்க அநியாயமா சுரேஷ் - பைரவி நட்பைச் சந்தேகப் பட்டால் பட்டுவிட்டுப் போகட்டும். நமக்கென்ன நஷ்டம்? காலப் போக்கிலே நாம்ப சந்தேகப்பட்டது எவ்வளவு தப்புன்னு அவங்களுக்கே தெரிஞ்சுட்டுப் போகுது. இதுக்கு ஏன் நீ கோவிச்சுக்கிட்டேன்னு எனக்குப் புரியலை. அதனாலே இது மட்டும் காரணம் இல்லைன்னு நினைக்கிறேன். ஏற்கனவே பைரவியை அவங்க வீட்டிலே கல்யாணம் பண்ணிக்கணும்னு வற்புறுத்தி இருக்காங்க. அது நமக்குத் தெரியும். அந்த வற்புறுத்தலிலேருந்து தப்பிச்சுக்கறதுக்கு நீ வந்திருந்தால் நீ திரும்பிப் போகறது நல்லதில்லை. பைரவிக்கு அடுத்த சாப்பாடு எங்கேங்கறதை இப்ப வாணிதான் சொல்லிவிட்டாளே” என்று ரேகா சொல்லி முடிக்கிறபோது ஐஸ்கிரீம், காபி உள்ளிட்ட சிற்றுண்டி பரிமாறப்பட்டது.

கையில் ஏந்திய ஸாஸருடன் கோபால், "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்" என்ற விந்தை மனிதர் தலை கவிழத்தான் வேண்டும். ஆனாலும் நம்மைப் போன்ற மனிதர்களுக்கு ஒரு வீடும் வேண்டும். வாணி இன்னிக்கு பைரவியை அழைச்சுக்கிட்டுப் போகட்டும். நாமெல்லாம் சேர்ந்து நம்முடைய காரியங்களை நிறைவேத்தறதுக்கும் திட்டம் போடறத்துக்கும் நம்ப அத்தனை பேருக்கும் பொதுவாக ஒரு இடம் வேண்டும். அதுதான் இப்போ முக்கியம். நாம்ப ஒண்ணா வாழணும். ஒத்த கருத்து உடையவர்கள் சேர்ந்து வாழலேன்னா அவர்கள் லட்சியங்கள் சிதறிப்போகும்! கைகூடாது...

“கல்யாணம் செய்து, குழந்தைக் குட்டிகள் பெத்துக்கிட்டு உத்தியோகம் பார்த்துக்கிட்டு வாழற மனுஷங்கள்கிட்டே போய் “கல்யாண மறுப்பு, உத்தியோக மறுப்புன்னெல்லாம் பேசினால் நம்மைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத் தான் அனுப்புவாங்க. அவங்களுக்குப் புரியணும் - நாம்ப கல்யாணத்தைத்தான் மறுக்கிறோம். கடமையை மறுக்கவில்லை. உத்தியோகத்தைத்தான் மறுக்கிறோம்; உழைப்பை மறுக்கவில்லை...” என்று கோபால் சொல்லிக் கொண்டிருக்கும்போது அவனது வாசாலகத்தை வியந்து நாங்கள் அனைவரும் கைதட்டுகிறோம்.

"ஏ! கோபால், தமிழில் புதுக்கவிதைக்கு நிச்சயம் ஒரு இடம் உண்டு என்றால் அது உன்னைப் போன்ற புதுக் கவிஞர்களால்தான்" என்று மனசுக்குள் நான் பாராட்டுகிறேன். அவனது ஜோல்னாப்பையில் துருத்திக் கொண்டு சமீபத்தில் அவன் வெளியிட்ட ஒரு புதுக்கவிதைத் தொகுப்பு தெரிகிறது. அதன் தலைப்பு 'தலைக்குள் உலகம்!'

கடைசியில் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தனியாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுப்பது என்று தீர்மானித்தோம். ஒரு பிரபல காண்டிராக்டரின் மகனான கோபாலுக்கு ஒரு வீடு பிடித்துவிடுவது ஒன்றும்

கஷ்டமில்லை. அட்வான்ஸ் தருவது தன் பொறுப்பு என்றான் சுரேஷ்.

சுரேஷ், தான் முக்கியமானது என்று கருதிய விஷயத்தை நண்பர்களோடு கலந்து பேசி, வெற்றிகரமான முடிவுக்கு வந்துவிட்ட திருப்தியுடன் எல்லாருக்கும் நன்றி தெரிவித்தான்.

"இப்பொழுது நம்முடைய முஷைராவை ஆரம்பிக்கலாமே!" என்றொரு குரல் கேட்டது.

"சுரேஷ்தான் ஆரம்பிக்க வேண்டும்.”

சுரேஷ் தன் கவிதையை ஆரம்பிக்கு முன்பு ஸ்கூட்டரிலிருந்து இறங்கி நின்று கொண்டான். இதுவரை இல்லாத அமைதி திடீரென அங்கு நிலவியது. நாலுபுறமும் கார்களும் மனிதர்களும் திரிகிற அந்தக் கார்டன் ஹோட்டலில் இங்கு மட்டும் தனியே வளையம் கட்டி அந்த அமைதி நின்றது!

மரக்கிளையில் ஒரு காக்காய் வந்து அமர்ந்து, 'இந்தக் கவிதையை நாமும் கேட்போமே' என்பது மாதிரி தலையை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்க்க எனக்குச் சிரிப்பு வந்தது.

சுரேஷ் தன் கையிலிருந்த ஒரு பத்திரிகையை எடுத்து அனைவருக்கும் அதன் முகப்பில் இருந்த படத்தைக் காண்பித்தான். அதில் ஒரு பீரங்கியின் வாயில் ஒரு பறவை கூடுகட்டி உட்கார்ந்திருப்பதுபோல் சித்திரிக்கப்பட்டிருந்தது.

'... திஸ் வாஸ் தி இன்ஸ்பிரேஷன்' என்று தான் சொல்லப் போகிற ஆங்கிலக் கவிதைக்கு அறிமுகம் சொல்லி விட்டு ஒவ்வொரு வரியாய் ஆங்கிலம் தெரியாதவர்க்கும் புரியும்படியாகச் சொன்னான் சுரேஷ்.

... Birds build nests

what else they can do

best

a wild wind from west

may blow them into the

dust...!

'முற்காலத்தில் போர்கள் மூண்டால் படைவீரர்கள் மட்டுமே கொல்லப்படுவர். இக்காலப் போர் எழுந்தால் பறவை முதல் நீர் வாழ்வனவரை பூண்டும் புல்லும் அற்று அழிந்து போகும். அணு ஆயுதக் கதிரால் இரவு நேரம் நீண்டு ஆண்டு ஒன்றாகிவிடும்' என்று அவனது ஆங்கிலக் கவிதையை மனத்துள் மொழி பெயர்த்தவாறே நான் கேட்டேன்.

கடைசி அயிட்டமாக அடுத்தவாரம் நடக்கப் போகிற சமாதானப் பேரணியில் எங்கள் குழு கலந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை விவாதித்தோம்.

நிகாராகுவா நாட்டில் என்ன நடக்கிறது என்பது குறித்து ரவி ஒரு ரிப்போர்ட் வாசித்தான். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவது குறித்து ஒருவர் நெஞ்சம் கொதித்துக் கவி பாடினார்.

கூட்டம் முடிந்து புறப்படுகிறபோது யார் யார், யார் யாருடன் போவது என்று பிரித்துக் கொண்டோம். வாணி ரவியுடன் ஸ்கூட்டரில் வந்தாள் போலிருக்கிறது. இப்போது நானும் இருப்பதால் இருவரும் அவள் வீட்டுக்குப் பஸ்ஸில் போவது என்று தீர்மானித்தோம்.

மறுநாள் வாணியின் வீட்டில் வந்து என்ன சந்திப்பதாகச் சொல்லி சுரேஷ் என்னிடம் விடைபெற்றுக் கொண்டான். நண்பர்களெல்லாம் போன பிறகு எனக்கு வெறிச்சென்றிருந்தது.

"கனவில் கிள்ளிப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று தோன்றுமே ஒரு உணர்ச்சி அதுபோல் உணர்கிறேன். நிஜமாகவே நான் அனாதையாகி விட்டேன். நல்லவேளையாய் நண்பர்களின் உதவி மூலம் நான் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன்" என்று வாணியின் கைகளைப் பற்றிக்கொண்டு நான் உணர்ச்சிபூர்வமாகச் சொன்னேன்.

வாணி சிரித்துக் கொண்டே சொன்னாள்: “உன்னை அனாதை ஆக்கியதே நண்பர்களான நாங்கள்தானே? அனாதையாம் ஆதரவாம்! மனிதர்களிடையே சகோதரத்துவம் தானடி முக்கியம். அது சகோதரர்கள் மத்தியில் கூட ஏற்பட முடியாமல் இருக்கலாம். அநேகமாக சகோதரர்களிடம்தான் அது சாத்தியமில்லை போலிருக்கிறது! நண்பர்களிடையே சகோதரத்துவம் இருக்கவேண்டும். அந்தச் சகோதரபாவம் கெட்டால்தான் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இளமையின் பெருமை பாழாகிவிடுகிறது. சுயநலமும் பரஸ்பரச் சுரண்டலும் காதல் என்ற பெயரால் சகோதரத்துவத்துக்கு எதிராகச் சதி புரிந்துவிடுகிறது" என்றெல்லாம் என்னிலும் பெரியவளான வாணி சொல்லுவதை நான் முழு மனத்துடன் ஆமோதித்தவாறு அவளுடன் நடந்தேன்.

வாணியின் வீடு ஒரு நவநாகரிக பங்களா. வாசலில் கன்றுக்குட்டி மாதிரி அல்ஸேஷன். அங்கிருந்த ரோஜாச் செடிகளைப் பார்த்தபோது நான் நிராதரவாக விட்டு விட்டு வந்திருக்கிற என்னுடைய அந்தச் செடிகளின் நினைவு வந்தது.

வீட்டை விட்டு வந்த முதல் வாரத்தில் நாள்தோறும் வாணியின் வீட்டிலிருந்து கிளம்பி சுரேஷின் அவுட் ஹவுஸுக்குப் போய்விடுவேன். அங்கே அவன் படம் வரைந்து கொண்டிருப்பான். அவனுக்கு நான் உதவி செய்வேன். சுரேஷின் வீடு நிஜமாகவே சினிமாவில் பார்க்கிற மாளிகை மாதிரி இருந்தது. அவன் வீட்டு

மனிதர்கள்கூட ஏதோ ஹிந்தி சினிமாவில் வருகிற பாத்திரங்கள் மாதிரி இருந்தனர். ஆனால், நல்லவேளை எல்லாரும் தமிழ் பேசினார்கள்.

நாள் பூராவும் அவன் ஒரே முனைப்பாக வரைந்து கொண்டிருந்தான். எல்லாம் சமாதானப் பேரணிக்கு வேண்டிய பதாகைகளும் படங்களும்தான். அவனது அந்தக் காரியங்களுக்கு உதவியாக இருப்பது மனசுக்கு நிம்மதியாக இருக்கிறது.

"உன்னிடம் இருக்கின்ற ஓவியங்களுக்கு நீ ஒரு எக்ஸிபிஷன் நடத்தலாமே" என்று நான் யோசனை சொன்னேன்.

"முதலில் இந்தக் கோபால் வீடு பார்த்து முடிக்கட்டும். அந்த வீட்டுக்கே 'சகோதரத்துவம்' என்று பெயர் வைத்து நாம் குடியேறுகிற முதல் நாள் அங்கே ஒரு எக்ஸிபிஷன் வைக்கலாம் என்று யோசிக்கிறேன்" என்றான் சுரேஷ்.

மத்தியானம் மூன்று மணிக்குக் கோபால் வந்தான். வரும்போதே மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டான். சரி, வீடு கிடைத்துவிட்டது என்று தெரிந்து கொண்டேன்.

வாணியின் அப்பா அவள் வர்ணிக்கிற மாதிரி ஊழல் பேர்வழியாக இருந்தாலும் ரொம்ப அன்பானவராகக் காணப் பட்டார். வாணிக்கு மூன்று சகோதரர்கள்! எல்லோரும் கல்யாணமானவர்கள். வீடு நிறையப் பேரக் குழந்தைகள்! இவர்களில் ஒருத்தியாக நானும் அங்கேயே இருந்துவிட வேண்டுமாம். "சுதந்திரமான பறவைகள் கூடப் பொழுது போனால் கூட்டுக்கு வந்துடுது இல்லையா? அதுபோல் பெண்கள் இருக்க வேண்டும்" என்று காலையில் அவர் சொல்லியிருந்தார். இந்தப் பறவை வந்து அவர் வீட்டுப் பறவையையும் இழுத்துக் கொண்டு போகப் போகிறது என்று அவருக்குத் தெரியாது.

கோபாலும் சுரேஷும் வீட்டைப் பார்த்து அட்வான்ஸ் கொடுக்கப் புறப்பட்டார்கள். நான் வாணியின் வீட்டுக்குப்

போய் அவளிடம் விஷயத்தைச் சொல்லி அங்கே காத்திருக்க வேண்டும். சாயங்காலம் இவர்கள் இரண்டு பேரும் அங்கே வந்து எங்களை அழைத்துக் கொண்டு போவார்கள்.

சுரேஷின் வீட்டிலிருந்து நான் திரும்பி வந்தபோது மணி நான்கு ஆயிற்று. பங்களாவுக்கு முன்னால் உள்ள புல்வெளியில் வெள்ளைப் பிரம்பு நாற்காலியில் வாணியின் அப்பா உட்கார்ந்திருந்தார். அவர் முன்னே அதே மூங்கிலாலான ஒரு டீபாயும் ஒரே மாதிரியான மூன்று நாற்காலிகளும் கிடந்தன. வீட்டுக் குழந்தைகள் அல்சேஷனோடு சேர்ந்து பந்தை உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

வீடு கிடைத்த செய்தியை அவரிடம் சொல்லலாமென்று நான் அவரை நோக்கிப் போனேன்; என்னைப் பார்த்துவிட்டு உள்ளேயிருந்து வாணியும் வந்தாள். என்னைப் பார்த்ததும் வரவேற்று உட்காரச் சொன்னார் வாணியின் அப்பா. அவருக்கு நன்றி சொல்லிவிட்டு நான் சந்தோஷமாய் அவரிடம் தெரிவித்தேன்:

"எனக்கு வீடு கிடைத்துவிட்டது. இன்னும் சில தினங்களில் உங்களுக்கு நன்றி சொல்லிவிட்டு நான் போய் விடுவேன்" என்றேன்.

"எனக்கென்னமோ உங்க போக்கே புரியலைம்மா... எல்லாம் வயசு... நிச்சயம் நீங்க மாறுவீங்க. இப்ப சின்னஞ் சிறுசுகள்... உங்களுக்குத் தெரியலே... கல்யாணம் வேண்டாம்; நாங்கள் இப்படியே இருப்போம்னு சொல்லுவீங்க... ஆமாம் இப்படியே பெண்களெல்லாம் கல்யாணம் வேண்டாம்னுட்டீங்கன்னா உலகம் என்னம்மா ஆகும்?" என்று ரொம்பவும் யோசித்து ஒரு கேள்வியைக் கேட்டார்.

"நீங்கள் ஒன்றும் பயப்படாதீர்கள். எங்கள் கொள்கையை எல்லாரும் ஏற்றுக் கொள்வதில்லை. நாங்கள் ஒன்றும் வாழ்க்கையை மறுத்தோ, சந்நியாச மனம் கொண்டோ

இந்த முடிவுக்கு வரவில்லை. நிலைமைகள் இளைஞர்களான எங்களை இந்த முடிவுகளுக்கு வர நிர்ப்பந்தம் செய்கின்றன. எங்கள் வீட்டில் இருக்கின்ற இரண்டு பெண்களில் நான் மட்டும் தானே இப்படி ஆனேன்? என் தங்கை வசந்தா காலேஜுக்கு எப்படித் தயாரோ அதுபோலவே கல்யாணத்துக்கும் தயாராக இருக்கிறாள்."

"இளைஞர்களான எங்களைச் சுற்றிலும் மக்கள் தொகை பிரச்சினையைக் கட்டுப்படுத்துவது எப்படி என்ற விவாத இரைச்சல் கேட்டுக் கொண்டே இருக்கிறது. மூன்றாவதாகப் பிறந்த ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் 'தான் பிறந்ததே ஒரு குற்றமோ' என்று மனம் புழுங்குகிறார்கள். இந்த நிலையில் இளைஞர்கள் எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம் இந்த மக்கட் பெருக்கத்திற்கு அடிப்படையான காதல், கல்யாணம் இவற்றைத் தள்ளிப் போட்டால் என்ன? என்று நினைக்கிறோம்?" என்று நான் வாணியின் அப்பாவுக்கு விளக்கமாய்ச் சொன்னேன்.

"ஆமாம்... ஆமாம்! இளைஞர்கள் காதல் பைத்தியம் பிடித்து அலைவது அருவருப்பாய்த்தான் இருக்கிறது. ஆனால் கல்யாணத்தையும் மறுத்துவிட்டால் வாழ்க்கை வறண்டு போய்விடாது? மனுஷ வாழ்க்கையில் காதலே அற்றுப்போய் விட்டால் எப்படி இருக்கும்" என்று அவர் ரொம்ப வருத்தத்துடன் கேட்டார்.

"நீங்கள் சொல்லுகிற காதலை விடவும் மனிதர்களுக்கு நட்புதான் முக்கியம் என்று நாங்கள் நினைக்கிறோம். நண்பர்களைக் காதலித்துத்தான் ஆகவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ய முடியாது. சொல்லப்போனால் நீங்கள் சொல்லுகிற இந்தக் காதல்தான் நட்புக்கே பகையாகி விடுகிறது. அது நண்பர்கள் மத்தியில் பொய்யையும் ஏமாற்றுகிற புத்தியையும் ஏற்படுத்துகிறது. நண்பர்கள் மத்தியிலே, ஏன் மனிதர்கள் மத்தியிலேயே மிகவும் வேண்டப்படுவது சகோதர பாசம்! மெய்யான சகோதர பாசம் சகோதரர்களிடம் கூடக் கிடைக்க மாட்டேனென்கிறது!

நண்பர்களிடம்தான் கிட்டுகிறது. அதைப் போய்க் கெடுத்துக் கொள்ளலாமா...?" என்றேன்.

"அதுவுமல்லாமல் சுயமரியாதை இருக்கிற எந்த இளைஞனும் இந்தக் காலத்தில் காதல் விவகாரங்களில் இறங்க மாட்டானென்று நினைக்கிறேன். நாங்கள் ஒன்று கூடிச் செய்வதற்கு வேறு காரியங்கள் சமூகத்தில் நிறைய இருக்கின்றன!" என்றாள் வாணி.

"என்னமோ அம்மா, நீங்கள் பேசுவதையெல்லாம் கேட்டால் நாங்கள் வாழ்க்கையில் ஏதோ தப்பு செய்து விட்டோமோ என்று பெரியவர்களான எங்களுக்கு உறுத்துகிறது. ஆனாலும் உங்களைப் பற்றி நம்பிக்கை வருகிறது. நீங்கள் எப்படியெல்லாம் யோசிக்கிறீர்கள்!" என்று சந்தோஷத்துடன் எங்களை ஆசீர்வாதம் செய்வதுபோல் பாராட்டினார், வாணியின் அப்பா.

அப்போது இரண்டு ஸ்கூட்டர்களில் கோபாலும் சுரேஷும் வந்து வாசலில் நின்றனர். நாங்கள் வீடு பார்க்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு வாணியின் அப்பாவிடம் விடை பெற்றோம்.

சுரேஷும் கோபாலும் வாணியின் அப்பாவைப் பொருட்படுத்தி உள்ளே வந்து அறிமுகம் செய்து கொள்ளவில்லை.

இரண்டு ஸ்கூட்டர்கள் வந்திருப்பதால் நான் சுரேஷின் ஸ்கூட்டரை வாங்கிக் கொண்டு அவனைக் கோபாலின் ஸ்கூட்டரில் வரச் சொன்னேன். சுரேஷைப் பின்னால் ஏற்றிக் கொண்ட கோபாலின் ஸ்கூட்டர் வழிகாட்ட, நான் எனக்குப் பின்னால் வாணியை அமர்த்திக் கொண்டு ஸ்கூட்டரைச் செலுத்தினேன். பிறகுதான் தோன்றியது: பேசாமல் ஜாலியாகப் பின்னால் உட்கார்ந்து கொண்டு போயிருக்கலாமே! என்று...

இவர்கள் பார்த்திருக்கும் வீடு அப்படிப்பட்ட ஏரியாவில் இருந்தது. பல சந்து பொந்துகளில் திரும்பி, ஒரு குப்பை

மேட்டின் மீது ஏறி இறங்கி, மிகக் குறுகிய பாதையில், குறுக்கே ஓடி விளையாடிக் கொண்டிருக்கிற குழந்தைகளின் மேல் மோதிவிடாமல் சமாளித்து, ஒரு மணி நேரப் பிரயாணத்துக்குப் பின் மொட்டை மாடி உள்ள அந்த வீட்டை வந்து அடைந்தோம்.

வீட்டுக்கு முன்புறம் காம்பவுண்ட் சுவரும் தோட்டம் போடுவதற்கான இடமும் இருப்பதைப் பார்த்து நான் குதூகலமடைந்தேன். இரண்டு பெரிய ஹால்கள், இரண்டு அறைகள், சமையலறை, பின்புறம் தோட்டம் எல்லாம் வசதியாகவே இருந்தன.

அந்தப் புதிய வீட்டில் எங்களை இறக்கி விட்டுவிட்டு, கோபாலும் சுரேஷும் இரண்டு ஸ்கூட்டர்களில் புறப்பட்டார்கள் - ஓவியக் கூடத்திலிருந்து சாமான்களை ஏற்றி வரத்தான்.

“சாயங்காலத்துக்கு மேல் எல்லா நண்பர்களும் வருவார்கள்" என்று போகும்போது என்னிடம் சொல்லி விட்டுப் போனான் சுரேஷ்.

இப்படியாக இந்த வாழ்க்கை தொடக்கம் பெற்றது, என் வாழ்க்கையில் புதிய அத்தியாயம் தொடங்கியது போல் எனக்குப் புதிய நம்பிக்கை தந்தது.

*****

# 2

இந்த வீட்டிற்குக் குடிவந்த இன்னொரு மாதத்திற்கெல்லாம் எனக்கு இன்னும் ஒரு வயது கூடிற்று. என் வீட்டில் இருந்த பொழுதுகூட எனது பிறந்த நாளை நான் இவ்வளவு குதூகலமாய்க் கொண்டாடியதில்லை. இந்தப் பக்கத்திலுள்ள எளிய மனிதர்கள் நாங்கள் வந்த சில தினங்களுக்கெல்லாம் எங்களுக்கு மிகப் பரிச்சயமான நண்பர்களாகி விட்டனர்.

வீட்டுக்கு முன் உள்ள வராந்தாவில் அந்தக் குடிசைப் பகுதியைச் சேர்ந்த சிறுவர்கள் வந்து பாடம் படிக்கலாயினர். எதிரே இருந்த டீக்கடைக்காரர் தனக்குப் புதிய வாடிக்கைக்காரர்கள் வந்துவிட்டார்கள் என்ற மகிழ்ச்சியில் நாள் முழுதும் நாங்கள் கேட்கும் போதெல்லாம் டீயும் பிஸ்கட்டும் அனுப்பினார்.

கண்ணாடி வளையத்தில் ஏந்திய டீ தம்ளர்களுடன் வருகிற பையன்கள் எல்லாருக்கும் ஏன் இந்த அரை டிராயர் பின்னாடி கிழிந்திருக்கிறது என்று தெரியவில்லை. நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து அந்தப் பையனுக்கு ஒரு ஜோடி டிராயரும் சட்டையும் வாங்கித் தந்தோம்.

அவன் பெயர் மம்மூது! நாங்கள் பேசிக் கொண்டிருப்பதையும் விவாதித்துக் கொண்டிருப்பதையும் அவன் ஊன்றிக் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தால் கொஞ்ச நாளில் இவனும் எங்கள் கோஷ்டியில் சேர்ந்து விடுவான் போல் தோன்றும்.

பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு முன்பு ஒரு நாள் நான் என் வீட்டு வாசல் வரைக்கும் போய்விட்டு வர வேண்டுமென்று ஆசைப்பட்டேன். வீட்டை விட்டு வந்து ஒரு மாதமாகிறதே...! எனக்கு ஒன்றும் 'ஹோம்ஸிக்' வந்து விடவில்லை.

பல சமயங்களில் இரவுகளைத் தனிமையில் கழிக்க நேர்கிறது. அப்பொழுதெல்லாம் நினைவுகள்

தூங்கவிடாமல் மொய்க்கின்றன. உலக நிலவரமான அணு ஆயுதப் போர் அபாயம் முதல் உள்ளூர் பொறுக்கித்தன அரசியல் வரை சொந்த வாழ்க்கையைப் பாதிக்கின்ற கவலைகளாக மனத்தில் கனக்கின்றன.

லட்சியமுடைய இளைஞர்கள் நிறையப் பெருகி வருவது நம்பிக்கை தருகிறது. இதற்கு மத்தியில் நான் வளர்த்த ரோஜாச் செடிகள் என்ன ஆயினவோ! - என்ற கவலை வந்து மனசைக் கவ்வுகிறது. நல்லவேளை, நான் ஒரு நாய் வளர்க்காமல் இருந்தேன். இருந்தால் அதையும் கூடவே இழுத்துக் கொண்டு வந்திருப்பேன்!

அதைப்போல் நான் வளர்த்த இந்த ரோஜாச் செடிகளையும் அங்கேயிருந்து வேரோடு பறித்துக் கொண்டு வந்து இங்கு நட்டுவிட்டால் என்ன என்று நினைத்தேன். ஒவ்வொரு நாளும் போக நினைத்தும் போக முடியாமல் இங்கே நண்பர்களின் கூட்டம் பகலெல்லாம் சூழ்ந்து கொண்டிருக்கும்.

சில சமயங்களில் சுரேஷ் மட்டும் தனியாக வந்து இங்கு ஓவியம் தீட்டிக் கொண்டிருப்பான். ஒரு மாதிரியாக சுரேஷ் தன் வீட்டு அவுட்ஹவுஸில் இருந்த ஓவியக் கூடத்தை இங்கேயே மாற்றிக் கொண்டு விட்டான்.

ஒருநாள் சுரேஷ் மட்டும் இருந்தபோது அவன் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு என் வீட்டுக்கு வந்தேன். அங்கே நான் பார்த்த காட்சி வயிற்றெரிச்சலாய் இருந்தது.

நான் வளர்த்த ரோஜாச் செடிகள் காய்ந்து தீய்ந்து பட்டுப் போய் கிடந்தன. ஒரு தோட்டக்காரக் கிழவர் நான் போன நேரம் பார்த்து அவற்றைச் செதுக்கி எடுத்துக் கூடையில் கொட்டிக் கொண்டிருந்தார்...

அடுத்த ஆச்சரியம்... கதவைத் திறந்து வசந்தாதான் வருகிறாளோ என்று பார்த்தால் யாரோ முகம் தெரியாத வயதான கிழவர்!

நான் அப்பாவின் பெயரைச் சொல்லி விசாரித்தேன். “அவர் வீடுதான் இது. நாங்கள் வாடகைக்கு இருக்கிறோம்...” என்றார்.

"இப்போது எங்கிருக்கிறார்கள் என்று தெரியுமா?”

"அட்ரஸ் தெரியாது. அவர்களுக்கே இன்னொரு வீடு இருக்கிறதாமே அங்கே... அந்த வீட்டுக்குப் போயிருக்கிறார்கள்... அட்ரஸ் கூட...” என்று எதையோ துழாவி எடுப்பதற்காக உள்ளே செல்லத் திரும்பியவரைத் தடுத்து நிறுத்தினேன்.

"அவசியமில்லை... எனக்கு அந்த வீடு தெரியும்" என்று ஸ்கூட்டரில் ஏறி ஸ்டார்ட் செய்யும்போது, "பைரவி" என்று ரகசியக் குரலில் யாரோ கூப்பிடுவதுபோல் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தால் பக்கத்து வீட்டு சீதாலட்சுமி மாமி. "என்ன மாமி! சௌக்கியமா?” என்று அவர்கள் வீட்டுக்குள் நுழைய நேர்ந்தது. அவள் குறுகுறுத்த பார்வையோடு அடிக்கடி முகம் சிவந்து என்னிடம் பேசினாள். ஒரு தம்ளர் காபி கலந்து கொடுத்தாள். அதற்குள் அவள் பேசியதிலிருந்து நான் புரிந்து கொண்டது

என்னுடைய செய்கையால் என் வீட்டாருக்கு ரொம்பத் தலைகுனிவாகப் போய்விட்டதாம்! 'இந்தத் தெருவிலே இருக்கற எல்லாருக்கும் தெரிஞ்ச குழந்தையாச்சேடி நீ!' என்று அடிக்கடி சொன்னாள். யார் என்ன சொன்னாலும் இந்த சீதாலட்சுமி மாமிக்கு மட்டும் என்னை ரொம்பப் பிடிக்குமாம்! - கடவுளுக்கு நன்றி!

"இந்தப் பக்கம் வந்தால் எட்டிப் பார்த்துட்டுப் போ” என்று வாசல் வரை வந்து வழியனுப்பினாள்.

வரும் வழியெல்லாம் என் மனத்தில் நான் நட்டு வளர்த்த அந்த ரோஜாச் செடிகளைப் பறிகொடுத்த சோகம் கனத்தது. அந்த வருத்தம் எனக்கே குழந்தைத் தனமாகத் தான் இருந்தது.

குழந்தைப் பருவம் முதலே ரோஜாக்களைப் பற்றிய எனது அனுபவங்கள் ஒரு பெண்ணின் சொந்த வாழ்க்கை போல் இருக்கிறது!

நானே ஒரு ரோஜாவாகி விட்டதுபோல் தோன்றுகிறது. இந்த ஸ்கூட்டர் சத்தம் வண்டின் ரீங்காரம் போல்...

யோசித்துப் பார்க்கிறேன்... நான் எப்போது முதன் முதலாக ஒரு ரோஜாவை அறிவேன்? அது எனக்கே தெரியாது. நினைவு தெரியாப் பருவத்திலேயே ஒரு ரோஜா என் தலையில் ஏறி அமர்ந்துவிட்டது. ரோஜாப்பூ என்று நினைத்து அதே நிறத்தில் இருந்த இன்னொரு பூவை வாயில் வைத்தபோது, "அது ரோஜாப் பூ இல்லை... அரளிப் பூ" என்று பதறி என் வாயைத் துடைத்துவிட்டாள் அம்மா.

ரோஜாப்பூ திங்கலாமாம், அரளிப்பூ விஷமாம்... ஆனாலும் துப்பத் தகுந்த விஷம்தான். வாயில்பட்ட மாத்திரத்தில் உயிர் போய்விடுகிற மாதிரி பதறுவானேன்? நான் ரோஜாப்பூவா, அரளிப்பூவா என்று கண்டுபிடிக்கிறதே அப்படித்தான். ஒரு இதழை எடுத்து வாயிலிட்டு முன் பல்லால் நசுக்கியவுடன் பிடித்தமான பழக்கப்பட்ட ருசியும் மணமும் வந்தால் அது ரோஜாப்பூ! மாற்று ருசியாயிருந்தால் தூ, தூ!

ரோஜா ஒரு நிறம், ஒரு மணம், ஒரு குணம், ஒரு ருசிகூட...

வீட்டுக்குப் பூக்காரி வருவாள். கதம்பத்தில் ஒரு முழத்துக்கு ஒரு ரோஜாப்பூ அளந்து வைத்தாற் போலிருக்கும். அந்த ரோஜாப் பூப் பகுதியைத்தான் எனக்கு வைக்க வேண்டும். கொஞ்ச நேரம் தலையிலும் வைத்துக் கொள்ளலாம். அப்புறம் பிய்த்தும் தின்றுவிடலாம்.

உதிர்ந்த ரோஜா இதழ்களை வாழை நார்ப்பட்டையில் வட்டமாக ரோஜா மாதிரி அடுக்கி ஊசியால் தைத்துச் செண்டு மாதிரி பூச்சூட்டி விடுவார்கள்... அதெல்லாம் ரொம்பச் சின்ன வயதில்... அப்புறம்தான் நான் 'பாப்' வெட்டிக் கொண்டுவிட்டேனே.

பூ ஆசை தலையில் வைத்துக் கொள்வதில் மட்டும் தானா? வீட்டைச் சுற்றிலும், ஜன்னல் ஓரத்திலும், நடுக் கூடத்திலும் பார்க்கும் இடமெல்லாம் ஒரு ரோஜாப்பூ இருந்தால் பரவசம்தான்.

ஒரு தடவை கண்கள் சிவந்து எரிச்சலாயிருந்தபோது பூஜை அறையிலிருந்து கொண்டு வந்த பன்னீரைச் சிறிது கண்களில் ஊற்றி அலம்ப வைத்தாள் அம்மா.

எவ்வளவு குளிர்ச்சியாக வாசனையாக இருந்தது அந்த அனுபவம்! அம்மா சொன்னாள்: பன்னீர்கூட ரோஜாவிலிருந்துதான் செய்கிறார்களாம்.

ஒரு தடவை எதையோ அல்வா மாதிரி வாயில் கொண்டு வந்து போட்டாள் அம்மா... ஒரே ரோஜாப்பூ வாசனை! அதன் பெயர் குல்கந்து.

ஒரு ரோஜாப்பூவைச் செடியில் பூத்திருந்த நிலையில் அதன் முழு உயிர்ப்போடு எப்போது நான் பார்த்தேன் என்று என்னால் நினைவுபடுத்திக் கொள்ள முடிகிறது.

எனக்கு ஆறு அல்லது ஏழு வயதிருக்கும். எங்கள் ரோஸி டீச்சர் வீடு எங்கள் தெருவிலேயேதான் இருக்கிறது என்று வசந்தாதான் வந்து சொன்னாள். முதல் காரியமாக அதைக் கேட்டதும் டீச்சர் வீட்டுக்கு ஒரு கும்பல் ஓடினோம்.

வீடுவரைதான் ஓட முடிந்தது. அனுமதியில்லாமல் டீச்சர் வீட்டுக்குள் நுழைவதற்குக் கால்கள் தயங்கின. வெளியில் இருந்தவாறே தலையை நீட்டி வீட்டுக்குள் எட்டிப் பார்த்தோம்.

ஓ ரோஜாப்பூ! கதம்பமாகவும், வாழைப்பட்டையில் தொடுத்தும், அப்புறம் குல்கந்தாகவும், பன்னீராகவும் மாறுவது இதுதானா? - என்ற ஆச்சரியத்தில் அந்த ரோஜாவே அந்த வீட்டின் தலைவி போலவும், அது என்னை அழைப்பது போலவும் அதன் அருகே ஓடினேன்.

மண் தரையே இல்லாத அந்த வீட்டில் முற்றத்தின் நடுவே ஒரு பெரிய செம்மண் தொட்டியிலும், அதைச் சுற்றி வட்டமாய் வைத்திருந்த தகர டின்களிலும் ஒரே ரோஜா மயம்!

ரோஸி டீச்சர் செடிகளைத் தொடாமல் பார்க்குமாறு எங்களிடம் சொன்னார். நடுவில் உள்ள அந்தப் பெரிய தொட்டியில் இருந்த அந்தச் செடியின் கிளைகள் சுற்றிலும் இருக்கும் இந்தத் தகர டின்களில் பதியன் போடப் பட்டிருப்பதாகவும், அந்தக் கிளைகள் இப்போது வேர் பிடித்துப் பூத்திருப்பதாகவும் ரோஸி டீச்சர் தாவர இயல் பாடமே நடத்தினாள்.

பாடம் புரியாவிட்டாலும் ரோஜாச் செடிகளும், ரோஸி டீச்சரும் என்னைப் பரவசப்படுத்திய அனுபவத்தை மறக்க முடியவில்லை. அன்றைக்கு நடந்த பாடத்தில் நான் கற்றுக் கொண்ட ஒரே விஷயம் ரோஜாச் செடியில் முள் இருக்கும் என்பதுதான்.

எங்கள் வீட்டைச் சுற்றிலும் பெரிய ரோஜாத் தோட்டம் போடலாம். அப்போதுகூட நிறைய வாழை மரங்கள், கீரைப் பாத்திகள், பவளமல்லி மரம், செம்பருத்திச் செடிகள், நந்தியாவட்டை... ஏன், அகத்திக்கீரை மரம்கூட இருந்தது. ஏன் நம் வீட்டில் ரோஜாச் செடி மட்டும் வைக்கவில்லை.

ரோஸி டீச்சர் இப்போது எங்கேயோ மாற்றலாகிப் போய்விட்டார். இல்லாவிட்டால் அந்த டீச்சரின் உதவியோடேயே நான் ரோஜாச் செடி இங்கே வைத்திருப்பேன். எங்கள் வீட்டுக்கு ரோஜாச் செடியை அறிமுகப்படுத்தியதே நான்தான் என்று சொல்லவேண்டும்.

அப்போது நான் ஹைஸ்கூலில் சேர்ந்திருந்தேன்.

பள்ளிக்கூடம் போகிற வழியில் ஒரு வீட்டின் காம்பவுண்ட் சுவர் ஓரமாக ரோஜாச் செடி இருந்தது. இடுப்பளவே உள்ள அந்தச் சுவருக்கு மேல் ஓரடி உயரம் வளர்ந்த ஒரு கிளையின் உச்சியில் ஒரு கொத்து சிறிதும் பெரிதுமான

மொட்டுக்களின் நடுவே ஒரு பெரிய ரோஜா! அடர்த்தியாய் இதழ்கள்... அவ்வளவு பெரிய ரோஜாப் பூவைப் பார்த்தது அதுதான் முதல் தடவை!

அவ்வளவுதான்! அதைப் பறிக்க வேண்டுமென்று என்கூட வந்த வசந்தாவுக்குக் கை துறுதுறுக்கிறது. அந்தச் சுவரின் மீது காலை வைத்து ஏறி, அதைப் பறிக்கப்போன வசந்தாவை நான் தடுத்து நிறுத்தினேன். சுவரில் தொற்றிக் கொண்டு எட்டின மட்டும் கையை நுழைத்துக் கிளையைப் பிடித்துக் கொண்டிருந்த வசந்தா எனது அதட்டலால் பிடியை விட்ட வேகத்தில் ரோஜாக் கிளை மறுபடியும் உல்லாசமாக உயர்ந்து தலையாட்டியது.

எவ்வளவு அழகாக இருக்கிறது! என்று நாங்கள் வியந்து நின்ற நேரத்தில் அந்த வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த வீட்டுக்கார அம்மாள் எங்களைப் பார்த்துப் புன்னகையுடன் அழைத்தாள்.

அந்தப் பூக்களைப் பறித்து எனக்கும் வசந்தாவுக்கும் அந்த அம்மாளே அன்போடு சூட்டிவிட்டார்கள். அந்த அம்மாள் தன் தலையில் பூ வைத்துக் கொள்ளாதது எனக்கு உறுத்தலாக இருந்தது. பேதைத்தனமாக அதை நான் அவர்களிடம் கேட்டபோது அந்த அம்மாளின் கண்கள் கலங்கின... அவர்கள் வைத்துக் கொள்ளக் கூடாதாம்! இப்போதுகூட அந்த அம்மாளின் நெற்றிப் பொட்டு இல்லாத வெறிச்சென்ற முகம் நினைவுக்கு வருகிறது.

மறுநாள் முதல் நாங்கள் பள்ளிக்குச் செல்கையில் ஒரே கிளையில் கொத்தாக அடைத்துக் கொண்டு, பூத்து, காம்பவுண்டு சுவருக்கு வெளியிலேயே நின்று நாங்கள் பறித்துக் கொள்ளத் தகுந்த மாதிரி காற்றில் தழைந்து தழைந்து ஆடிய அந்த ரோஜாக்களைச் சுதந்திரமாகப் பறித்துக் கொண்டோம். சில சமயங்களில் நாங்கள் ரோஜாப்பூ பறிக்கிற அழகை வாசற் கதவைத் திறந்து கொண்டு வந்து நின்று அந்த அம்மாள் வேடிக்கை பார்ப்பாள். நாங்கள் அண்ணாந்து பார்த்தபடி எப்போது

ரோஜாக் கிளை காற்றில் தழைந்து கீழே வரும் என்று காத்திருப்போம்.

அன்றைக்கு ஏதோ ஒரு அவசரம். நான் எம்பிக் குதித்துக் கிளையைப் பிடித்தேன். கையில் முள் குத்தியது. முள் குத்திய வலியில் இழுத்துப் பிடித்திருந்த கிளையைச் சட்டென்று விட்டுவிட்டேன். விடுபட்ட வேகத்தில் அடர்ந்த ரோஜாச் செடியின் கிளைகள் என் கைகளிலும் வலது கன்னத்திலும் உராய்ந்தவாறு மேலே போயின. அந்த வீட்டுக்கார அம்மாள் பதறி அடித்து ஓடிவந்து, முகத்தில் முள் பலமாகக் கீறிவிட்டதைப் பார்த்து வீட்டுக்குள் அழைத்துச் சென்று ஆயின்ட்மென்ட் போட்டு விட்டார்கள்.

அந்த அம்மாளுக்கு ஏனோ கோபம் வந்து பறித்த ரோஜாக்களைக்கூட என் தலையில் வைத்துவிடாமல் ஒரு பக்கம் விட்டு எறிந்தார்கள்.

வகுப்பறையில் உட்கார்ந்திருந்த எனக்கு நேரம் ஆக ஆகக் கைகளிலும் கன்னத்திலும் முள் கீறிய இடம் வலித்தது. அந்த இடத்தில் கடுத்தது... எரிச்சல் தாங்க முடியவில்லை. அழகிய ரோஜாவின் முள் கீறினால் இப்படியா வலிக்கும். எனக்கு ஜூரம் கண்டிருக்கிறது என்று டீச்சர் கண்டு பிடித்தார்.

சாயங்காலம் பள்ளியிலிருந்து நான் வீடு திரும்பிய போது அந்த வீட்டின் வெளியே நான் கண்ட காட்சி என் நெஞ்சை அடைத்தது.

ரோஜாப்பூக்களும் மொட்டுக்களும் கொத்துக் கொத்தாய்ப் பூமியில் நசுங்கிக் கிடந்தன. கண்ணைப் பறிக்கும் கரும்பச்சை இலைகளோடு கிளைகள், சேற்றிலும் செம்மண்ணிலும் குழம்பி, கட்டி தட்டிய வேர்கள் ஈர மண்ணோடு அண்ணாந்து ஆகாசத்தைப் பார்த்தன. வெறும் குப்பை மாதிரி அந்தச் செடிகளை வெட்டிக் கூடையில் அள்ளி இரண்டு மூன்று வேலைக்காரர்கள் கொட்டிக் கொண்டிருந்தார்கள்... அந்த அம்மாளைக் காணோம்!

அந்தக் காட்சி எனது ஜுர வேகத்தில் என்னுள் ஒரு பீதியை ஏற்படுத்தியது...

இப்போது அந்த வீட்டின் முன்னால் வரிசையாகக் கடைகள் கட்டிவிட்டிருக்கிறார்கள். ஒரு விதவையின் வீட்டின் முன்னால் இவ்வளவு புஷ்பச் செடிகள் எதற்கு என்று அந்த அம்மாள் ஒரு விரக்தியில் எல்லாவற்றையும் வெட்டியிருப்பார்கள் என்று இப்போது நினைக்கிறேன்.

அதன் பிறகு வெகுகாலம் ரோஜாச் செடிகளோடு எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை...

நானும் அதன்பிறகு என் கூந்தலைக் குட்டையாய் கத்தரித்து விட்டுக் கொண்டேன்; அதுதான் வசதியாயிருக்கிறது. கூந்தல் அழகிலும், உடை அழகிலும் மனம் பறி கொடுக்கிற பெண்களின் அசட்டுத்தனத்தைப் பார்த்து என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை - எனது உடைப் பழக்கத்துக்குத் தலையில் பூ வைத்துக் கொள்வது பொருந்தாது. ஆனாலும் என்னைச் சுற்றிலும் ரோஜாக்கள் நிறைந்திருப்பது எனக்கு எப்போதும் பிடிக்கிறது.

ஒரு ரோஜாவின் வரலாற்றை ஆராய்ந்து கொண்டு போனால் மனுஷகுல வரலாற்றையே கண்டுபிடித்துவிட முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. எவ்வளவோ புஷ்பங்கள் இருக்கின்றன; ஆனாலும் ரோஜா ரோஜாதான்!

'ரிங் கா ரிங் கா ரோஸஸ்' என்று நர்ஸரி வகுப்பில் இருந்து ஆரம்பித்த கற்பனை இன்றுவரை ரோஜாவின் மூலமாக எவ்வளவோ விஷயங்களைக் கற்றுத் தந்திருக்கிறது.

'ஓவியங்களிலும் கவிதையிலும் காவியங்களிலும் கதைகளிலும் மட்டுமா? புவியியலிலும் தாவர இயலிலும் ரசாயனத்திலும் இந்தப் பாரத தேசத்தின் அரசியலிலும் இந்த ரோஜாவுக்கு எத்தகையதொரு இடமுண்டு!' என்று எண்ணுகையில் இந்த ரோஜா வெறும் மலர் மட்டுமல்ல; இது ஒரு Symbol என்றே கொள்ளலாம். கவிநயமும் கலை

நயமும் படைத்த வாழ்க்கைக்கு ரோஜா ஓர் அடையாளம். ஓர் உருவகம். சமூக வாழ்க்கையில் மதங்களிலும் மனிதரின் பெருமையிலும் இன்பத்திலும், ஏன் துன்பமாகிய மரணத்திலும்கூட இந்த ரோஜா மலர்கள் தமக்கென ஓர் இடத்தைப் பெறுகின்றன.

மொகலாய மன்னர்களும் அவரது பட்டத்து அரசிகளும் கைகளில் இந்த மலரையே ஏந்தியிருந்தனர்.

நவீனமயமான ஆலைகளையும் அணைகளையும் கோயில்களெனக் கருதிய நமது தேசத்தின் புதிய வரலாற்றின் நாயகனான 'சாச்சா' நேரு கூட இந்த ரோஜாவைத்தான் தமது இதயத்துக்கு மிக அருகாமையில் வைத்திருந்தார்.

தோட்டக்கலையில் ரோஜாவுக்கு உரிய இடம் சர்வதேச முக்கியத்துவம் உடையது.

நான் ஹைஸ்கூல் படிப்பை முடிப்பதற்கு முன்பே எங்கள் வீட்டில் ரோஜா தோட்டம் வைக்க ஆரம்பித்தேன். ரோஜா வளர்ப்புக் கலை என்பது எனக்கொரு ஆத்மார்த்தமான ஈடுபாடு ஆகியது.

நான் வளர்த்த அந்தச் செடிகள் என் மனதுக்குள் வளர்கிற எண்ணங்களைப் போலவே, அவற்றுக்கு ஏற்பவே, பூப்பதுபோல் அவற்றுடன் உணர்வுபூர்வமான ஆத்மநேயம் எனக்கு உருவாயிற்று. தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதை நாம் அறிந்திருக்கிறோம், எனில் அவற்றுக்கு ஆத்மாவும் உண்டு.

தாவரங்களை நிலை பெற்ற மனிதர்கள் என்றும், மனிதர்களை நடமாடும் தாவரங்கள் என்றும் நான் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறேன்.

நடமாடும் தாவரங்களான மனிதர்களுக்குக் கலாசாரம் என்பது வேர். அந்த வேர் நன்கு பதிந்திருக்குமென்றால் முட்களுக்கு நடுவே எப்படி ரோஜாக்கள் சேதாரமின்றிப் பூத்துச் சிரிக்கின்றனவோ அப்படி, பல்சக்கரம் போல்

சுழன்று வரும் இந்த வாழ்க்கைச் சகடத்தின் பற்களில் சிக்கிக் கொள்ளாமல், உருமாறாமல், ஊனப்படாமல் மனிதர்களும் சிரிக்க முடியும்! என்ற தைரியத்தை இந்த மெல்லிய ரோஜாக்கள் எனக்குத் தந்திருக்கின்றன...

ரோஜாக்களைப் பற்றிய யோசனையில் மூன்று கிலோ மீட்டர் தூரம் நான் எப்படி ஸ்கூட்டர் ஓட்டிக் கொண்டு வந்தேன் என்றே தெரியாமல் வீடு வந்து சேர்ந்தபோது வீட்டில் சுரேஷ் மட்டும் தனியாக இல்லை! வேறு சில நண்பர்களும் வந்திருந்தார்கள்.

நான் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உள்ளே நுழைவதைப் பார்த்ததும் "ஏய்... எங்கே ரோஜாச் செடி? ஸ்கூட்டரிலேயே கட்டிக் கொண்டு வருகிறேன் என்று போனாய்?" என்று சுரேஷ்தான் முதலில் கேட்டான்.

எனக்கு அழுகை அடைத்துக் கொண்டு வந்தது. முகத்தை மூடிக்கொண்டு தனியாகப் போய் உட்கார்ந்து கொண்டேன். எனது நிலைமையைப் புரிந்து கொண்டு நண்பர்கள் மௌனமாய் இருந்தனர்.

"ஏன்? உங்க வீட்டிலே செடியையே தொடவிடலையா?" என்று சுரேஷ் கேட்டான்.

"இல்லை... அங்கே ஒரு செடியையும் காணோம்! எல்லாவற்றையும் வெட்டிப் போட்டு விட்டார்கள்..." என்று குரலில் வருத்தம் அடைக்கச் சொன்னேன்.

"எங்கள் வீட்டில் நிறைய ரோஜாச் செடிகள் இருக்கின்றன. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தொட்டிகளைக் கொண்டு வந்து இறக்கிவிடலாம். அது என்னுடைய பரிசளிப்பாக இருக்கட்டுமே!" என்று ஒரு புதிய குரல் கேட்டது.

யாரோ ஒரு புதிய நபர் வந்திருக்கும்போது அதைத் தெரிந்து கொள்ளாமல் நான் குழந்தை மாதிரி நடந்து கொண்டதும் அதற்கு அந்தப் புதியவர் ஒரு குழந்தையைச் சமாதானப்படுத்துவதுபோல் தன் ரோஜாச் செடிகளைக்

கொண்டு வந்து தருவதாகச் சொல்வதையும் கேட்க எனக்கு வெட்கமாக இருந்தது.

“இவனை உனக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். மிஸ்டர் கண்ணன்; நான் கொஞ்ச நாள் திருச்சியில் படித்துக் கொண்டிருந்தபோது என்னோடு படித்தவன். இப்போது இங்கேயே வந்துவிட்டான். நம் கோஷ்டி, ஆனால் உத்தியோகம் இல்லாதவன் அல்ல. சொந்தத் தொழில். இங்கே அம்பத்தூரில் ஒரு 'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டரி' தொழிற்சாலை வைத்திருக்கிறான்...” என்று அறிமுகம் செய்து வைத்தான் சுரேஷ்.

"பைரவி” என்று என் பெயரைச் சொல்லிக் கொண்டு அவனோடு கை குலுக்கினேன். நம் கோஷ்டி என்று சுரேஷ் சொல்லிவிட்டதால், பார்த்த மாத்திரத்தில் கண்ணன் மீது நம்பிக்கை ஏற்பட்டது எனக்கு.

கண்ணன் சொன்ன மாதிரியே ஒரு வாரத்துக்குள் எனக்கு வேண்டிய ரோஜாமலர்த் தொட்டிகளைக் கொண்டு வந்து இறக்கினான். அவன் ரொம்ப 'பிஸி'யாக இருப்பவன். இருந்தாலும் கூடத் தன் ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்கு இங்கே வந்துவிடுவான்.

நான் என் வீட்டில் இருந்தது போலவே இந்த வீட்டிலும் தோட்டம் போடும் கலையில் ஆர்வம் காட்டினேன். அதனால் வருமானமும் வந்தது. இங்கே வந்து பாடம் கற்றுக்கொள்கிற சிறுவர்களும் தோட்ட வேலையில் எங்களோடு கலந்து கொண்டனர்.

தோட்டத்து மண் நல்லவாகு. காய்கறிகளும் ரோஜாக்களும் வேறு பலவகைப் பூக்களும் ஆறு மாதத்தில் வீட்டைச் சுற்றிச் செழித்துத் தழைத்துவிட்டன.

கண்ணன் எல்லா மாலை வேளைகளிலும் தொழிற் சாலையிலிருந்து நேரே இங்கே வந்து விடுகிறான். நண்பர்கள் கூட்டமும் ஒட்டு மொத்தமாகச் சில சமயங்களில் தோட்ட வேலையில் கலந்து கொள்வதும் உண்டு. யாரும்

வராத நாட்களில்கூடக் கண்ணன் மட்டும் தனியாக வந்து என்னோடு பேசிக் கொண்டே உதவி செய்கிற நல்ல நண்பனாகி விட்டான்.

அவன் ஒரு சின்ன கார் வைத்திருக்கிறான். பழைய காலத்து 'மோரிஸ்'... ஒரு நாளைக்கு அவன் என்னை அந்தச் சின்ன காரில் அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்த் தன் அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைப்பானாம்!

'அதற்கென்ன ஒருநாள் போகலாம்' என்று சொல்லி மேலும் ஆறு மாதமாகிவிட்டது. கண்ணன் எதையும் யோசனையாகச் சொல்வானே தவிர வற்புறுத்த மாட்டான். அடங்காப்பிடாரிகள் என்று பெயர் எடுத்துவிட்ட எங்கள் கோஷ்டியில் அடக்கமானவன் கண்ணன் ஒருவன் மட்டுமே! அவன் அதிகமாகப் பேசுவது கூட இல்லை. அப்படிப் பேசினாலும் இந்த அறிவாளிகள் கூட்டத்தின் தரத்துக்கு வராது என்று அமைதியாக இருந்தாலும் எங்களோடு ஒத்துப்போகிற அளவுக்கு அவன் சிந்திக்கிறவனாயிருக்க வேண்டும்!

எங்கள் நண்பர்கள் கூட்டத்தில் அனைவருமே ஒரு மாதிரியான நாஸ்திகர்கள்தான். எங்கள் மத்தியில் கடவுள் நம்பிக்கை, ஆசார நம்பிக்கை எல்லாம் உடையவன் கண்ணன். ஒரு நம்பிக்கை என்ற அளவில்தான் அவன் அவற்றை அனுசரித்தானே தவிர, நடை, உடை, பாவனைகளில் எங்களைப் போன்ற இளைஞர் கூட்டத்தைச் சேர்ந்தவன்தான் அவனும்.

ஒருநாள் பூவாளியால் நான் செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு வேப்பமரத்தில் சாய்ந்து கொண்டு நின்றிருந்த கண்ணன் திடீரென்று என்னிடம் கேட்டான்.

“நாமெல்லாம் எவ்வளவு காலத்துக்கு இப்படி இருப்பது?”

வெகுநேரம் குனிந்து செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றியதால் இடுப்பு வலித்தது. நன்றாக நிமிர்ந்து

வளைந்து கைகளை உதறிக்கொண்டு சொன்னேன். "எவ்வளவு நாள் இருப்போமோ அவ்வளவு காலத்துக்கு...”

“அது சாத்தியமில்லை பைரவி...”

"எல்லாருக்கும் இது சாத்தியப்படாது என்று எங்களுக்குத் தெரியும். அப்படி சாத்தியப்பட்டவர்கள்தான் அதை நிரூபிப்பதற்காக இங்கே சகோதரத்துவம் தழைக்க வாழ்கிறோம். இதைச் சந்தேகிப்பவர்களும் உண்டு; அவர்களை நாங்கள் நன்கு புரிந்து கொள்வோம்."

"இது எல்லாருக்கும் - அதாவது உங்களுக்கும்கூட இது எப்போதும் சாத்தியமில்லை என்று சொல்லுகிறேன்.”

“ஏய்... இந்த ‘உங்க’ளுக்கு என்ன அர்த்தம்?”

இவ்வளவு காலப் பழக்கத்தில் எங்கள் கோஷ்டியில் இருப்பவர்கள் ஒருவரை ஒருவர் அழைப்பதுபோலப் பரஸ்பரம் நானும் கண்ணனும் ஒருமையில் பேசப் பழகி விட்டோம். அதை நினைவுபடுத்தி நான் கேட்டது அவனுக்குப் புரியவில்லை.

"உங்களுக்கேகூட சாத்தியமில்லை என்றாயே, எனக்குச் சாத்தியமில்லை என்பதை உனக்கு என்பதற்குப் பதிலாக உங்களுக்கு என்று மரியாதையாகச் சொல்லுகிறாயா? அல்லது இந்தக் கோஷ்டியில் இருப்பவர்களாகிய எல்லாருக்கும் என்று சொல்கிறாயா? இல்லை பெண்களாகிய உங்களுக்குச் சாத்தியமில்லை என்று சொல்கிறாயா?” என்று விளக்கமாய்க் கேட்டேன். மெய்யாகவே இவன் மனத்துள் என்ன வைத்துக் கொண்டிருக்கிறான் என்று எனக்குப் புரியவில்லை.

"எனக்குச் சாத்தியமில்லை” என்றானே பார்க்கலாம்!

"என்னப்பா! வந்ததும் வராததுமாய்க் கொடியைக் கீழே போட்டு விட்டாய்? என்ன விஷயம்? சும்மா, பேச்சுக்கு அம்மா வற்புறுத்துகிறாள், பாட்டி வற்புறுத்துகிறாள் என்று வழக்கமான வசதியான பொய்களைச் சொல்லக்கூடாது”

என்று பரிகாசமாய்ச் சொல்லிப் பூவாளியில் இருந்த தண்ணீரைக் கையில் பிடித்து அவன் முகத்தில் வீசினேன்.

அவன் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தான். அந்த மாதிரிப் பார்வையைக் கண்டாலே எனக்குச் சிரிப்பு வந்து விடும்.

நான் வீட்டிற்குள் நுழைந்தபோது அவன் என் பின்னாலேயே வந்தான். சுரேஷ் பாதியில் விட்டுவிட்டுப் போன ஓவியங்கள் நாலுபுறமும் தாறுமாறாய்க் கிடந்தன. அவற்றையெல்லாம் நான் எடுத்து ஒழுங்குபடுத்தி வைத்தேன். கண்ணன் ஒரு நாற்காலியில் அமர்ந்து விவேகானந்தர் போஸில் கைகளைக் கட்டியவாறு என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் மனத்துள் என்னமோ யோசனை.

வெறும் ஜீன்ஸை அணிந்து கொண்டு நான் இந்த ஓவியக் கூடத்தில் வேலை செய்வது அவனுக்கு ரசிக்கத்தக்க காட்சியாயிருக்கிறதோ? இருக்கலாம். அதனால் ஒன்றும் தப்பு இல்லை! 'வடிவ அழகு எல்லா உயிர்களுக்கும் பொது! அதில் ஆண் - பெண் பால்களில் பேதமில்லை' என்பான் சுரேஷ் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

"நீ சொன்னது நிஜம்தான் பைரவி. அம்மா ரொம்ப நாளாய்ச் சொல்லிக் கொண்டுதானிருக்கிறாள். ஆனால் நானோ இங்குள்ள நண்பர்களைப் போலத்தான் மெய்யாகவே கல்யாண பந்தம் வேண்டாமென்றிருந்தேன். ஆனால் கொஞ்சம் நாளாக என் கருத்துக்கும் மனத்துக்கும் உணர்ச்சிகளுக்கும் ஒத்துப்போகிற ஒருத்தி கல்யாணத்துக்கு விரும்பினால் அம்மாவின் ஆசையையும் நிறைவேற்றலாம். என் வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் இருக்கும் என்று தோன்ற ஆரம்பித்திருக்கிறது" என்று அவன் சொன்னபோது அவன் முகம் ஏனோ சிவந்து கன்றியது.

"பெண்கள் போல் வளைத்து வளைத்துப் பேசாதே! உன் மனத்தில் இருப்பதைச் சொல்லு" என்றேன்: "யாரையாவது

பார்த்துப் பேசித் தீர்மானித்து விட்டாயா? அப்படியென்றால் நல்லதுதான்” என்று கலகலத்த சிரிப்புடன் சொன்னேன்.

"அப்படியெல்லாம் இல்லை பைரவி! உன்னைப் பார்த்து உன்னோடுதான் பேசிக் கொண்டிருக்கிறேன்” என்று அவன் சொன்ன அசட்டுத்தனம் எனக்கு அவன்பால் ஒரு பரிதாப உணர்ச்சியை ஏற்படுத்தியது.

நான் சற்று நேரம் மௌனமாய் யோசித்து, வார்த்தைகளைக் கோர்வைப்படுத்திக் கொண்டு அவனிடம் பேசலானேன்.

"உன் மனத்தில் என்ன வைத்துக் கொண்டு நீ பேசினாலும் என்னைப்பற்றி நான் சொல்வதைக் கேள். இந்தச் சமூக மனிதனை, ஒருத்தி என்னதான் அறிவுபூர்வமாகக் காதலித்து, தன்னைச் சமத்துவமாக, ஏன் மிக மேன்மையாக நடத்துகிற ஒருவனையே புருஷன் என்று தாலிகட்டி ஏற்றுக்கொண்டு விட்டாளானால்... அத்தோடு போச்சு எல்லாம்! அவள் சமூக ரீதியாக சட்டப்படி சாஸ்திரப்படி, அவளுடைய மனச்சாட்சிப்படி அவனுக்கு அடிமைதானே...?"

“அவளுடைய சுதந்திரத்துக்கு அவளுடைய லட்சியங்களுக்கெல்லாம் அவன் குறுக்கே வராமல் இருந்தால்கூட அவள் அடிமைதானா?” என்று பரிதாபமான குரலில் கேட்டான் கண்ணன்.

"அவன் தலையிட வேண்டுமென்பதில்லை. அந்த உறவு பல வடிவங்களில் தலையிடும். கண்ணா! நானும் நீயும் கல்யாணம் செய்து கொள்கிறோம் என்று வைத்துக்கொள். முதலில் நமது கோஷ்டியிலிருந்து நம்மை விலக்கி வைத்து விடுவார்கள் என்பது உனக்குத் தெரியுமா? ஆனால் ஒன்று கண்ணா, நாங்கள் யாரையும் வற்புறுத்துவதில்லை. உன் கருத்துக்கும் உன் மனத்துக்கும் பிடித்த ஒரு பெண்ணைப் பார்த்து நீ கல்யாணம் செய்து கொண்டால் நமது நண்பர்கள் எல்லாரும் கோஷ்டியாக வந்து உனக்கு வாழ்த்துக் கூறுவோம்" என்று நான் அவனிடம் சொல்லிக்

கொண்டிருந்த நேரத்தில் வழக்கமாய் அங்கே படிக்க வருகிற சிறுவர்கள் வந்து எங்களுக்குக் 'குட்ஈவினிங்' சொல்லிவிட்டு வரிசையாக வராந்தாவில் அமர்ந்தனர்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு எப்போதும் போலவே அவன் என்னிடம் நடந்துகொண்டான். ஆனாலும் அவன் கண்களில் சுடர்விடுகிற ஏக்கத்தை எப்போதாவது நான் காண்பதுண்டு. காலப்போக்கில் தனது இந்த ஏக்கத்திற்காக அவனே ஏளன உணர்ச்சி கொண்டு சிரிக்கவும் செய்யலாம்!

சுரேஷும் ரவியும் கோபாலும் போலத்தான் இந்தக் கண்ணனும் எனக்கு. ஆனால் இந்தக் கண்ணன் அவர்களைப் போன்றவன் அல்லன். இவன் ஒரு சாதாரண சமூக மனிதன். உருவ அழகில் மனம் பறிகொடுப்பதைக் காதல் என்று நினைப்பவன். நான் ஏனோ அவனுக்காக மனத்துள் வருத்தப்பட்டேன். ஒரு பொருத்தமான பெண் கிடைத்து, அவன் கல்யாணம் செய்து கொண்டு அவன் அம்மாவின் மனசைக் குளிரவைத்துக் குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டும் என்று ஒரு பொறுப்புள்ள தமக்கையைப் போல் நான் விரும்பினேன்.

*****

# 3

இந்த வீட்டில் எனது இரண்டு பிறந்த நாட்களைக் கொண்டாடி விட்டேன். அநேகமாக மாதத்திற்கு ஒரு பிறந்த நாள் விழா இந்த வீட்டில் நடக்கிறது. சில சமயங்களில் இரண்டு விழாக்கள் கூட ஒரே மாதத்தில் நடந்து விடுவதுண்டு.

எங்கள் நண்பர்களின் எண்ணிக்கையும் எங்கள் சமூக நடவடிக்கைகளும்கூடப் பரவலாகி வருகின்றன. உலக நிலவரங்களைக் குறித்து நாங்கள் கருத்தரங்குகள் நடத்துகிறோம். நம்முடைய மக்களுக்காக மட்டுமல்லாமல் அண்டை நாடுகளிலும் உலக நாடுகளிலும் அடிமைத் தனத்தையும் இனக் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடும் இளைஞர்களின் உணர்ச்சிகளையும் குறித்து நமது மக்களின் மனச்சாட்சியைத் தூண்டி வருகிறோம்.

எங்களில் சிலர் தேர்ந்த சமூகவியலாளராய் உருவாகியிருக்கின்றனர். எங்களில் பலர் சிறந்த கலைஞர்கள். சுரேஷ் இன்னும் கொஞ்ச நாளில் ஒரு ஓவியப்பள்ளியே ஆரம்பித்து விடுவான்.

இதற்கிடையில் துளசி என்னும் பெயருடைய எங்கள் கோஷ்டி சிநேகிதிகளில் ஒருத்தி என் தங்கை வசந்தாவோடு கூடப் படித்தவள் என்று எனக்குத் தெரிய வந்தது.

துளசியின் மூலம் வசந்தாவைப் பற்றி விசாரித்தேன். வசந்தா படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டாளாம். அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க அப்பாவும் அம்மாவும் முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்களாம். துளசியின் அப்பா பிரபல ஜோசியராம். அவரிடம் வந்து ஜாதகம் பார்த்தார்களாம். அவளுக்கு என்னமோ ஏதோ தோஷமாம். ஐயோ! எனது அருமைப் பெற்றோர்களின் நிலையை எண்ணிப் பார்க்கிற பொழுது வசந்தாவின் பால் எனக்கு இரக்கம் ஏற்பட்டது.

பாவம்! பெண்... எங்கே போய் எவனுக்கு அடிமைப் பட்டு என்ன பாடுபடப் போகிறாளோ? நான் என்ன செய்ய முடியும்? அவளது இயல்பும், மனோபாவனையும், வளர்ப்பும், வளர்த்தவர்களின் மரபும் 'என்னவாயிருந்தாலும் புருஷனுக்குப் பெண்ஜாதி அடிமைதானே' என்ற சூத்திரத்தை வகுத்து இந்தப் பெண்களின் மண்டையில் எல்லாக் காலங்களிலும் சமூகம் ஏதோ ஒரு முறையில் திணித்து வருகிறது.

வசந்தாவுக்கு அவள் விருப்பப்படியே அவளை அடிமை கொள்கிற - அதாவது அவளது அடிமைத் தனத்தில் மோகம் கொண்டு ஒரு சமூக மனிதன் தேவை.

இதோ! ஏக்கம் சுடர்விடும் கண்களோடு மார்பின் மீது கைகளைக் கட்டிக்கொண்டு என் எதிரே வெறிக்க வெறிக்கப் பார்த்து நின்றுவிட்டுப் போகிறானே... இவனைப் போன்ற ஒரு சமூகமனிதன் தேவை... ஏன், அது இவனாகவே இருக்கக் கூடாது? - என்ற எண்ணம் எனக்குக் கண்ணனைப் பார்த்ததும் ஏற்பட்டது.

அதுகுறித்து அடிக்கடி நான் யோசிக்கலானேன்.

வெகுநாட்களாக நிறைவேற்றாமல் வைத்திருந்த அவன் கோரிக்கையாகிய - அவன் வீட்டுக்கு நான் போதல் என்னும் காரியத்தை நிறைவேற்றுவது என்று தீர்மானித்தேன்.

"ஏய்! கண்ணா! நீ எங்கள் கோஷ்டிக்கு நண்பனாக இருக்க முடியுமே தவிர எங்களில் ஒருவனாக முடியாது. நீ ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்புகளும் கவலைகளும் ஓர் குடும்பத்தின் அவசியத்தை நாளுக்கு நாள் உனக்கு உணர்த்தி வருகிறது. நீ ஏதோ எங்கள்பாலுள்ள கவர்ச்சியால் எங்களுடன் ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. உன்னைவிட வயதில் சின்னவளாயிருந்தாலும் ஒரு பெண்ணைப் பார்த்து உனக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டுமென்று முடிவு செய்துவிட்டேன். உனக்கு

ஒண்ணும் அரேஞ்ச்டு மேரேஜில் ஆட்சேபணை இல்லையே? என்று பேசிப் பார்த்தேன்.

"வேறு என்ன செய்வது? காதலித்தவர்களையே எல்லாரும் கல்யாணம் செய்துகொள்ள முடிகிறதா? காதல் நிறைவேறாத பொழுது ஏதோ பெரியவர்களாகப் பார்த்து ஆசீர்வாதம் பண்ணி வைப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். அதுபோலத்தானே இதுவரை பெரும்பாலானவர்களின் வாழ்க்கை இருக்கிறது? பைரவி! உன்னைப் பார்த்த பிறகுதான் எனக்கு இப்படி ஒரு அசட்டுத்தனமான எண்ணமே தோன்றியது. அது ஏன்?" என்று குழந்தைத் தனமாகக் கேட்டான் கண்ணன்.

"அதுதான் சொன்னேனே... நீ ஒரு சமூக மனிதன் என்று... பெண்களின் தோற்றத்தை, அவர்களது பேச்சை, குரலை, அழகை, எதையெதையோ பார்த்து மனத்தைப் பறிகொடுத்து விடுகிறீர்கள். ஆண்களின் மனத்தை அப்படிப் பறித்துக் கொள்வதில் பெருமைப்படுகிற, பெண்களும் இருக்கிறார்கள்...! நான் இன்றைக்கு உன் வீட்டுக்கு வரப் போகிறேன். உன் கல்யாண விஷயமாக உன் அம்மாவிடம் நான் பேசப்போகிறேன். இப்பொழுதே புறப்படலாம்..." என்று இருவரும் புறப்பட்டோம்.

நான் எதிர்பார்த்தபடியே ரொம்ப நவீனமான வீடு; வீட்டைச் சுற்றிலும் அழகிய பூந்தோட்டம். கண்ணனின் வயதான தாயார் பரவசத்துடன் என்னைப் பார்த்தார்.

கண்ணன் என்னை அவனுடைய தாயாருக்கு அறிமுகம் செய்து வைத்தான். பையனுக்கு அடங்கிய தாய் என்று தெரிந்தது.

"ஆழியூர் அண்ணாவி என்று பிரபல ஜோசியர்... கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"ஆமாம்... கேள்விப் பட்டிருக்கேன்... என்ன அவருக்கு...?"

"அவரோட பொண்ணு எங்க சிநேகிதி. நீங்க என்ன செய்யணும்னா உங்க மகனை அழைச்சிக்கிட்டு போய்

அவரைப் பார்க்கணும். உங்க பையனுக்கு ஜாதகம் இருக்கோன்னோ... அதைக் குடுத்து, நான் ஒரு பெண்ணோட விலாசம் தரேன்... அவர் ஜாதகத்தைப் பொருத்தம் பார்த்துக்குங்கோ... முக்கியமான விஷயம்: உங்க மகனோடு போய் அந்தப் பொண்ணை நீங்க பார்க்கணும்" என்றெல்லாம் அந்த ஒரு மணி நேர சந்திப்பில் அவர்களைத் தயார் படுத்திவிட்டு வந்தேன். பிறகு கண்ணனிடம் தனியே சொன்னேன்.

"நீ எங்க வீட்டுக்குப் பெண் பார்க்கப் போகும்போது சில விஷயங்களை ஞாபகம் வெச்சுக்கோ... அவர்கள் தங்களுக்கு ஒரே பொண்ணு வசந்தாதான் என்று சொல்லுவார்கள். ஏன்னா அவாளுக்கு என்னைப் பத்தி சந்தோஷம் இல்லை. பெரியவங்க பேச்சை மதிக்காதவள் என்கிறதனாலே என்னைத் தப்பா நினைச்சிண்டிருக்கா, எனக்குத் தோண்றது - உனக்கு என் தங்கையைப் பிடிக்கும்னு... தோற்றத்திலே என்னை மாதிரியே இருப்பாள்... என்னை விட எல்லா விதத்திலேயும் ஒசத்தின்னு எங்க அம்மா சொல்லுவா. அதுக்கு மேலே ஒரு குடும்பப் பெண்ணுக்கு வேண்டிய குணங்களெல்லாம் உண்டு. நீ போய்ப் பார்த்து விட்டு வாயேன். எங்க வீட்டுக்குப் போய் எங்க அப்பா, அம்மா, தங்கை யெல்லாம் எப்படியிருக்கான்னு பார்த்துக்கிட்டு வந்து சொல்லேன்" என்று நான் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அவனிடம் வெகு நேரம் பேசிச் சம்மதிக்க வைத்தேன்.

"இது என் குடும்பத்துக்கு, என் தங்கைக்கு, என்மீது வெறும் ஆசை கொண்டுவிட்ட ஒரு நல்ல நண்பனுக்கு நான் செய்ய வேண்டிய உதவி. இதன் மூலம் அநாவசியமாக விரோதம் கொண்டிருக்கும் என் குடும்பத்தோடு, குறிப்பாக என் அன்புக்குரிய தங்கையோடு நான் நட்புக் கொள்ளலாம் என்கிற நோக்கம் தான்" என்றேன்.

ஒரு வாரத்துக்குப் பிறகு நிறைய செய்திகளைச் சுமந்து கொண்டு வந்து சேர்ந்தான் கண்ணன்.

முதல் விஷயம் என் அப்பாவுக்கு உடல் நலமில்லையாம். வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கிக் கொண்டாராம். அதற்காகவே அவருக்கு உடம்பு சரியில்லாமல் போயிருக்குமோ, என்னமோ! பார்த்தால் திடகாத்திரமாகத் தான் இருக்கிறாராம்.

"அம்மா, எப்படி இருக்கிறாள்?" என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

"அம்மா... எல்லா அம்மாக்களையும் போல் இருக்கிறாள்."

"உன்னை அவளுக்குப் பிடிச்சிருக்குமே... என்ன சொன்னாள்?"

"எல்லாம் O.K. என்னைப் பிடிச்சிருக்கு! ஜாதகம் பொருந்தியிருக்கு! அந்தஸ்து பொருந்தியிருக்கு. ஆனால் அபாண்டமா ஒரு பொய் சொல்றாங்க... அதைத்தான் தாங்க முடியவில்லை... வசந்தா ஒருத்திதானாம்... ஏகபுத்திரியாம்... அப்படிச் சொல்லுவாங்கன்னு நீ ஏற்கெனவே சொல்லியிருந்தது வாஸ்தவம்தான். அதை நான் நம்பலை... ஆனால் ஒரு பொய்யை நேருக்கு நேர் சந்திக்க வரும் போது 'பகீர்'ங்கறது! இவங்க எதற்குத்தான் துணிய மாட்டாங்க? நல்லவேளை! எங்க அம்மாவுக்கு இது உங்க வீடுங்கிற விஷயம் தெரியாது... தெரிஞ்சிருந்தால் அங்கேயே போட்டு உண்மையை உடைச்சிருப்பாள்..."

“எனக்கு நீ எங்கே உண்மையைப் போட்டு உடைச்சிருப்பியோன்னுதான் பயம்...”

“இதோ பார் பைரவி! இந்த விஷயத்திலே நீ சொல்றதை அணு அளவும் பிசகாமல் கேட்டு நடக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன்... அதுதான் எனக்கு முக்கியம். இல்லேன்னா என்னோட குணத்துக்கு உண்மையைச் சொல்றதோட இல்லாமல், உங்க சம்பந்தமே வேண்டான்னு சொல்லிட்டு வந்திருப்பேன்.”

"வசந்தாவைப் பார்த்தியா...? என்ன நினைக்கிறே அவளைப் பத்தி?" என்றதும் நாணிக் கோணுகிறான்.

நான் சொன்ன மாதிரியே இருக்காளாம்... அவனோட அம்மாவுக்கும் பிடிச்சுடுத்தாம்... இதையெல்லாம் சொல்லி விட்டுச் சொன்னான்:

"எனக்குத்தான் பயம், எங்கே, 'அன்னிக்கு நீ கூட்டிண்டு வந்தியே, பைரவி - அவளை மாதிரியே இருக்காடா'ன்னு எங்க அம்மா சொல்லிடுவாளோன்னு."

இதைக் கேட்க எனக்குச் சந்தோஷமாக இருந்தது. யாருக்கும் இன்னொருத்தர் - அதுவும் தன் கூடப் பிறந்தவர் - தன்னை மாதிரியே இருக்கிறார் என்பதில் சந்தோஷம் இருக்கத்தானே செய்யும்?

எல்லா ஆண்களையும் என்று சொல்லக்கூடாது - ஆனால் இந்தக் கண்ணனைப் போலத்தானே எல்லா ஆண்களும்? நல்ல ஆண்கள் கூட இவர்களுக்கு என்னையும் பிடிக்கும்! - என்று எண்ணிக் கொண்டிருந்தபோது கண்ணன் சொன்னான்:

"உன் தங்கை வசந்தா உருவத்தில்தான் உன்னைப் போல் இருக்கிறாள்! குணத்தில் எப்படி இருக்க முடியும்? 'இந்தப் பொய்யர்களின் ஒரே பெண்' என்று பொய்யைத் தானே சொல்ல முடியும்?"

"அதெப்படி தீர்மானமாகச் சொல்ல முடியும்? அவளுக்கு உன் மேல் ஏற்படுகிற நம்பிக்கையில் அவளே என்னைப் பற்றி உன்னிடம் பின்னால் பேசலாம். அவ்வளவு தானே அவள் செய்ய முடியும்? பெற்றோரே மனமறிந்து ஒரு பொய் சொல்லுகிறபோது, அதற்கு உட்பட்டிருக்கும் வரை ஒரு பெண் அவர்களைக் காட்டிக் கொடுக்க முடியா தல்லவா? அதனால் அவளையும் பொய்காரி என்று நினைக்கலாமா?" என்று நான் கேட்கிறபொழுது என் தங்கைமேல் எனக்கிருக்கிற அன்பையும், நம்பிக்கையையும் கண்டு அவன் பார்வையால் என்னைப் பாராட்டினான்.

நானே தொடர்ந்து அவனிடம் பேசினேன்: "நான் சொல்வதைக் கேட்பதாக வேறு நீ வாக்களித்திருக்கிறாய்..."

"சொல்லு... கேட்கிறேன்..."

"என் வீட்டில் அந்தப் பொய்யைச் சொல்லுவார்கள் என்று நான் ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். அதனால் அது குறித்து நீ உணர்ச்சி வசப்பட வேண்டாம். வசந்தாவை உனக்குப் பிடித்திருக்கிறது! உன் அம்மாவுக்கும் சம்மதம் என்கிறாய். சரி, என்ன மேலே நடந்தது சொல்லு" என்று இவ்வளவு நேரம் நான் குறுக்கே புகுந்து பேசியதால் தடைபட்டு நின்ற, அவன் சொல்ல வந்த விஷயங்களை விசாரித்தேன்.

"நானும் வசந்தாவும் கூடப் பேசிக் கொண்டிருந்தோம். ஆனால் நீ சொல்லுகிற மாதிரிதான் - இப்பொழுது அவள் தன் குடும்ப விஷயங்களை என்னிடம் சொல்லிவிட வேண்டும் என்று நானும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் குறுகுறுத்த பார்வையுடன் அவள் நெஞ்சத்தையே குடைவது மாதிரி என்னால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அந்தப் பார்வையை எனக்கு அவள் பால் ஏற்பட்ட கவர்ச்சி என்று அவள் நினைத்திருக்கக் கூடும். அதுவும் ஓரளவு உண்மைதான். உங்கள் வீட்டில் நான் இருந்த அந்த நேரத்தில் ரேடியோவில் பைரவி ராகத்தில் சங்கீதக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அப்பொழுதும் எங்கே உன் பெயர் வந்துவிடுமோ என்று நான் திக்திக் என்று பயந்து கொண்டிருந்தேன். எதிரி பொய் சொல்லுவது நம்மை எந்த அளவுக்குச் சிரமப்படுத்துகிறது பார்த்தாயா?" என்று சொல்லிச் சிரித்தான்.

சற்று நேரம் ஒரு குறும்புத்தனமான சிறுவன், தான் செய்த விஷமத்தை எண்ணித் தனக்குள் சிரித்துக் கொள்வது போன்ற பாவனையில் மௌனமாக இருந்தான்.

"நான் உன் தங்கை வசந்தாவிடம் கேட்டிருக்கிறேன்: 'இன்னொரு நாள் நான் வருகிற பொழுது என்னோடு சற்று நேரம் நீ வெளியே வருவதை உன் பெற்றோர்

அனுமதிப்பார்களா?' - என்று. 'நிச்சயமாக அனுமதிப்பார்கள், நான் வருவேன்' என்று அவளும் சொல்லியிருக்கிறாள். நாளைக்கு நான் போவேன். காரில் ஏற்றிக்கொண்டு வருகிற வழியில் 'எனக்கு ஒரு சகோதரி இருப்பதாகவும், அவளிடம் அழைத்துக் கொண்டு போய் உன்னை அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன்' என்றும் சொல்லி இங்கே அழைத்து வரப் போகிறேன்" என்று கூறி அப்போது நடக்கப் போகிற Surprise சந்தோஷத்தைக் கற்பனை செய்து கையைத் தட்டிக் கொண்டு சத்தமாய்ச் சிரித்தான் கண்ணன்.

ஓ! இந்தக் கண்ணன் எவ்வளவு நல்லவன்... என் மீது எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறான் என்கிற நல்லுணர்ச்சியும் மூன்று வருஷத்துக்குப் பிறகு, எனக்கும் என் குடும்பத்துக்கும் நேர்ந்த தப்பெண்ணத்தை இவன் மாற்றிவிடப் போகிறான் என்ற நன்றி உணர்ச்சியும் பொங்க நான் அவனுக்கு நல்வாழ்த்துக் கூறினேன்.

அடுத்த நாள் மாலையை நோக்கி என்னைப்போல் எந்தக் காதலனும் காதலியும் காத்திருக்க முடியாது என்று தோன்றியது; அப்படி ஒரு பரவசம்.

இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. வீட்டை எப்படி எப்படியெல்லாம் அலங்காரம் செய்ய வேண்டும்? யார் யாரையெல்லாம் சொல்லி அனுப்பி அழைக்கவேண்டும் என்று சுரேஷிடம் ஒரு பட்டியல் கொடுத்தேன்.

வாணியிடம் சொல்லி அவள் வீட்டிலிருந்து சந்தனக் கிண்ணம், பன்னீர்ச்செம்பு, குத்துவிளக்கு, வெள்ளித் தட்டுகள் எல்லாம் அள்ளிக் கொண்டு வரச் சொன்னேன். நமக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, ஒரு கல்யாணம் என்றால் இதெல்லாம் வேண்டுமே!

அவள் தன் வீட்டில் ஒரு ரத்தினக்கம்பளம் இருப்பதாகச் சொன்னாள். அதையும் கொண்டுவரச் சொன்னேன்.

எங்கள் குரூப்பில் ரஜினா என்றொரு கிறிஸ்தவப் பெண். அவள் தன் இஷ்டத்துக்குக் கிறிஸ்துமஸ் அலங்காரம் போல் வண்ணக் காகிதப் பூத்தோரணங்களை ஹாலெல்லாம் வளைத்து வளைத்துக் கட்டினாள். அதிக பட்சம் முப்பது நண்பர்கள் வரலாம்; எல்லாருக்கும் இனிப்பு, காரம், காபி, நிச்சயமாக ஐஸ்கிரீம் என்று திறந்தவெளி மாடியில் மேஜையிலேயே பரிமாறுவதற்கான ஏற்பாடுகளுடன், ஒரு ஹோட்டலில் ஆர்டர் கொடுக்கச் சொல்லியாயிற்று.

இங்கே வந்து படிக்கிற சிறுவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு, உங்களுக்குக் கல்யாணமா? என்று கேட்கிறார்கள். "கல்யாணம்தான்... எனக்கில்லை... சாயங்காலம் வந்து பார் தெரியும். சாயங்காலம் எல்லாரும் வந்துடுங்க" என்று அவர்களுக்கு வேறு அழைப்புக் கொடுக்கிறேன்.

சாயங்காலம் நாலுமணியிலிருந்தே நண்பர்கள் வர ஆரம்பித்துவிட்டனர். பாரேன் இந்த வாணியை! தானே அந்த ஸ்கூட்டரில் அந்த ரத்தினக் கம்பளத்தைச் சுருட்டி வைத்து ஆளுயரத்திற்கு நிமிர்த்திக் கட்டிக்கொண்டு வந்து நிற்கிறாள்! எப்படித்தான் ஓட்டிக்கொண்டு வந்தாளோ! சுரேஷும் ரவியும் போய் இறக்கித் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்.

"இதை எங்கே போடுவதாம்?"

"மாடியில் திறந்த வெளியில்தான்" என்று யோசனை கூறுகிறேன்!

ஒரு கூடை நிறையப் பூக்கள்... ஏற்கனவே பறித்து வைத்திருக்கிறேன். 'சரமாகத்தான் தொடுக்க முடியும்... மாலைபோல் கட்ட நமக்குத் தெரியாதே!'

எனக்குத் தெரிந்த மாதிரி இரண்டு மாலைகள். கட்டுகிறேன். இரண்டு பூச்செண்டுகள். இவையெல்லாம் ஒரு சகோதரனுக்கும் சகோதரிக்கும் செய்வது போலத்தான், ஒரு சகோதரனையும் சகோதரியையும்

வரவேற்பதற்குச் செய்வது போலத்தான் இருக்கிறதே தவிர ஒன்றும் 'கல்யாணக்களை கட்டவில்லையே' என்று தோன்றுகிறது.

ஒரு நாதஸ்வர இசையுள்ள கேஸட்டை எடுத்து ரிக்கார்டரில் போடுகிறேன்... தடதடவென்ற தவில் ஓசையைத் தொடர்ந்து பைரவி ராகத்தை உச்சஸ்தாயியில் முழங்குகிற நாதஸ்வரத்தின் நாதத்தில் ஒரு கல்யாணக்களை கட்டிவிடுகிறதே!

கடிகாரத்தைப் பார்க்கிறேன். இதோ! இன்னும் கொஞ்சம் நேரத்தில் கண்ணனும் வசந்தாவும் வந்து விடுவார்கள். இந்நேரம் வழியில் வந்து கொண்டிருப்பார்கள். வரும் வழியில் அவர்கள் என்னென்ன பேசிக் கொண்டிருப்பார்கள் என்று நான் கற்பனை செய்து பார்க்கிறேன்.

இவன் அவள் மனத்தில் என்னைப் பற்றிய எண்ணங்கள் எழுமாறு வீட்டைவிட்டு ஓடிப்போன தனது இல்லாத சகோதரியைப் பற்றி அளந்து கொண்டிருப்பான். இவ்வளவு அந்நியோந்நியம் ஆன பிறகு தனக்கு ஏற்பட்ட மாதிரியான அனுபவமே சகோதரி விஷயத்தில் இவனுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்ற எண்ணத்தில் வசந்தாவும் உண்மையை ஒப்புக்கொண்டு விடுவாள் - தனக்கும் ஒரு சகோதரி இருப்பதாக!

இதுவரை பெற்றோருடன் சேர்ந்து பொய் சொல்லிக் கொண்டிருக்கும் இவள் தன்னை நம்பி உண்மையைச் சொல்லிவிட்டதில் கண்ணனுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்!

அப்படி அவள் உண்மையைச் சொல்லிவிடுகிற பட்சத்தில், இவனுடன் இங்கே வருவதற்குள் என்னைப் பற்றிய உண்மையைச் சொல்லிவிடுவானோ? - என்றெல்லாம் கற்பனை செய்துகொண்டு மாலையைக் கட்டி முடித்தேன்.

வாசலில் கார் வந்து நின்றது.

வெளியில் நின்றிருந்த நண்பர்கள் கண்ணனைக் குதூகலமாக வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள்.

காரிலிருந்து இறங்கிய வசந்தா முதலில் என்னைப் பார்த்தாள். அவளைப் பார்த்தவுடன் எனக்குச் சந்தோஷமாக இருந்தது. "வா, வசந்தா” என்று நான் அவளை வரவேற்க முன்னேறினேன்.

அவள் முகம் பயந்து வெளிறியது. தன்னை ஏதோ ஏமாற்றி மிக வஞ்சகமாக இந்த இடத்துக்குக் கண்ணன் அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். தனது பெற்றோருக்கு எதிராக இவர்கள் எல்லோரும் சூழ்ச்சி செய்து தன்னை அவமானப்படுத்தப் பார்க்கிறார்கள் என்று நினைத்தவளே போன்று, 'வெடுக்'கெனத் திரும்பிப் பின்வாங்கி வேகமாய் நடந்து அந்த முனையில் திரும்பி ஓடவே ஆரம்பித்தாள் வசந்தா.

எல்லாம் ஒரு நொடியில் நடந்தது. நாதஸ்வர ஓசை பைரவி ராகத்தில் இன்னும் இழைந்து கொண்டிருக்கிறது.

ஜன்னல் வழியாக வசந்தா போய்க் கொண்டிருப்பதைப் பார்த்த கண்ணன் பதறி ஓடிவந்தான்.

“அவளைக் கூப்பிடாதே... அவள் போகட்டும். வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்து வளர்க்கப்பட்டவள் அவள்... அந்த அடிமை இப்போது பெற்றோரின் உடமையாக இருக்கிறது... கண்ணா! உனக்கு ஒரு அடிமையா வேண்டும்? வேண்டாம்" என்று சொல்லி அவன் கையைப் பிடித்துக் கொண்டேன்.

அவன்தான் நான் என்ன சொன்னாலும் கேட்பவனாயிற்றே...

"இன்று யாருக்குப் பிறந்த நாள்?” என்று ஒரு குரல் கேட்டது. எல்லாருக்கும் என்ன விஷயம் என்று தெரியாமல் வைத்திருந்தது ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று என்று சமாதானம் அடைந்தேன்.

மாடியில் சிற்றுண்டி காத்திருக்கிறது. நண்பர்கள் வழக்கமாக இங்கு வந்து குழுமிக் கூத்தடிக்கிறவர்கள்தானே? அவர்களுக்கு ஒன்றும் ஏமாற்றமில்லை.

எல்லாரும் மாடிக்குச் சாப்பிடப் போனோம்...

மாடிக்குப் போகிறபோது கண்ணன் என்னைத் தனியே அழைத்துப் போய்ப் பேசினான்.

"நான் எதிர்பார்த்ததுதான் நடந்தது. அவள் உன்னைப். பார்த்த அதிர்ச்சியில் மிரண்டு மயங்கி விழப் போகிறாள் என்று தான் நினைத்தேன். அவள் இப்படி ஓடியதிலிருந்து அவள் இன்னும் சரியாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டாள்..." என்று கண்ணன் தொடர்ந்து பேசினான்:

"நான் காரில் அவளை அழைத்து வந்தபோது மெதுவாக ஆரம்பித்தேன். "நாம இப்ப எங்கே போகிறோம்னு உனக்குத் தெரியுமா?"

"பீச்சுக்கு" என்றாள் வசந்தா...

"இல்லை... என் சகோதரி ஒருத்தி இருக்கிறாள் அவளைப் பார்ப்பதற்கு..."

"உங்களுக்கு ஒரு சகோதரி இருக்கிறாள் என்று சொல்லவே இல்லையே... உங்கள் அம்மா பார்த்தால் இவ்வளவு ஆசாரமாக இருக்காங்க... அவங்களே கூட நீங்க ஒரே பிள்ளைதான்னு ஏன் பொய் சொன்னாங்க" என்று வசந்தா என்னை மடக்கினாள்.

"அதில் ஒரு சின்னக் குழப்பம். என் சகோதரி எங்களோடு இல்லை. கோபித்துக் கொண்டு தனியே இருக்கிறாள்... என்ன காரணமாக இருக்கும். சொல்லு பார்ப்போம்" என்றேன் நான்.

"யாராவது வேற ஜாதிக்காரனைக் காதலிச்சிருப்பாள்... ஓடிப்போயிருப்பாள். இந்த மாதிரிப் பெண்களை எனக்குப்

பிடிக்காது” என்றாள் அவள்.

"உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ அப்படி ஒரு சகோதரியை நீ இப்போது பார்க்கத்தான் போகிறாய்” என்று அழைத்து வந்தேன்... அதிர்ந்துபோய் இப்போது அவள் ஓடியதை நினைத்தால் எனக்குச் சிரிப்பு வருகிறது என்று சிரித்தான் கண்ணன்.

விருந்து மேஜையின் முன் எல்லாரும் வந்து அமர்ந்து எங்களுக்காகக் காத்திருந்தனர்.

மேஜையின் முன்னால் நின்று நண்பர்களுக்கு விளக்கம் சொல்வதுபோல் நான் பேசலானேன்:

"நண்பர்களே! உங்கள் அனைவரையும் எதிர்பார்க்காத ஒரு மகிழ்ச்சிக்கு இலக்காக்க வேண்டுமென்று நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் சிலரிடம் மட்டும் அதைப் பற்றி முன் கூட்டியே சொல்லி வைத்திருந்தேன். இப்போது அது பிசுபிசுத்துப் போய்விட்டது. ஆனால் இன்னமும்கூட உங்களுக்கு ஒரு 'ஸர்ப்ரைஸ்' காத்திருக்கிறது. - என்று சொல்லி சில விநாடிகள் அமைதியாய் நின்றேன்.

"கண்ணனும் நானும் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறோம்...” என்று பிரகடனம் செய்தேன்.

இதைக் கேட்டு யாரும் கைதட்டவில்லை. நான் ஒவ்வொருவர் முகத்தையும் உற்றுப் பார்த்தேன். அவர்கள் அதிர்ச்சியடைந்து அசையாமல் என்னையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தனர். அவர்களால் இதை நம்ப முடியவில்லை போலும்!

“உங்களால் இதை நம்ப முடியாது என்று எனக்குத் தெரியும். நானும் உங்களை இப்போதே இதை நம்பச் சொல்லவில்லை. நமது கொள்கைப்படி முப்பது வயதுக்குப் பிறகு தான் நாங்கள் இந்தத் திருமணத்தை உறுதி செய்வோம். அதுவரை இது ஒரு நிச்சயதார்த்தமே...” என்றேன்.

"யாருக்கு முப்பது வயதில்?" என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

என்னிலும் இரண்டு வயது மூத்தவனான கண்ணன் எழுந்து, "நாங்கள் அதை அப்போது பேசி முடிவு செய்து கொள்வோம்" என்று குறுக்கிட்டுச் சொன்னான்.

நண்பர்கள் அவனைப் பரிகாசம் செய்து சிரித்தனர். வாணி நான் தொடுத்து வைத்திருந்த அந்த ரோஜா மாலைகள் இரண்டையும் தட்டில் வைத்துக் கொணர்ந்தாள்.

அந்த மாலைகளை இருவரும் கைகளில் எடுத்து மடியில் வைத்துக் கொண்டோம்.

'இந்த மாலைகளை மாற்றி கொள்வதற்கு இன்னும் குறைந்த பட்சம் ஆறு ஏழு வருஷங்கள் ஆகவேண்டுமே! அதற்குள்ளாக இந்த சமுதாயத்தின் அடிப்படைகளை மாற்றிவிட முடியும் என்கிற நம்பிக்கையில்தான் இந்தத் தீர்மானம்' என்று என்னுள் நினைத்துக் கொள்கிறேன்.

இன்னமும் பைரவி ராக ஆலாபனை மெல்லென ஒலித்துக் கொண்டிருக்கிறது.

*****

# அந்த அக்காவைத் தேடி...

## 1

முதலில் என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தப் பெரிய நகரத்தில் இருக்கிற ஒரு பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மிக முக்கியமான பொறுப்பில் இருக்கிற, இருபத்திரண்டு வயதாகிற ஒரு மத்தியதர வர்க்கத்துப் பெண் நான். எப்போதும் எனக்குள் இருந்து வழி காட்டுகிற என் அப்பா சில வருஷங்களுக்கு முன் இறந்து போனார்.

பிறந்தது முதல் மிக எளிமையாகவே வாழ்ந்து எளிமையாகவே இறந்துபோன ஒரு பிறவி குமாஸ்தா அவர். அப்பா இருந்தபோது நாங்கள் வாழ்ந்த முறையே வேறு. அவர், தான் ஒரு ஏழை குமாஸ்தா என்கிறதனாலே சொந்தக்காரர்கள் யாரிடமும் எதையும் எதிர்பாராமல் ஒதுங்கியே இருந்து வாழ்ந்தவர். அவருடைய அந்த ஒதுக்கம் அம்மாவுக்குப் பிடிக்காது; அவரை அலட்சியம் செய்வாள்.

அவளுக்கு, தான் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள் என்கிற எண்ணம், இந்த குமாஸ்தாவுக்கு வாழ்க்கைப்பட்டதால் கொஞ்சமும் மாறவில்லை. பெரியக்கா, சின்னக்கா, நான், அம்பி கிச்சு ஆகிய நால்வரில் நான் மட்டுமே அப்பா கட்சி.

பெரியக்கா அப்பா இருக்கும்போதே காலேஜ் படிப்பை முடித்துவிட்டு அப்பாவின் கையை எதிர்பாராதவளாக 'ரிசர்வ் பாங்கில்' உத்தியோகத்துக்குப் போய்விட்டாள். அவளை நான் 'ரிசர்வ் பாங்க்குக்கு வாழ்க்கைப்பட்டவள்' என்றே சொல்வதுண்டு.

அவள் சித்தாந்தம் இது: 'ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொருத்தருக்கும் அடிமையாகறதுக்கா பெண் ஜன்மம் எடுத்தோம்? போடி, போ! என்னமோ, 'அப்பா, அப்பா'ன்னு உருகறயே... அவர் பேச்சைக் கேட்டிருந்தால் சின்னவளுக்கு வந்த கதிதானே நமக்கும் ஏற்பட்டிருக்கும்? பிறந்ததிலிருந்து

தகப்பனுக்கு, அப்புறம் ஒரு புருஷனுக்கு, அப்புறம் பிள்ளைகளுக்கு அடிமையாக ஒருத்தி வாழறது எதனாலே...? கல்யாணம்ங்கிற கட்டிலே ஒருத்தி மாட்டிகறதுனாலேதானே?' என்ற வாதத்தில் இன்றுவரை கல்யாணம் இல்லாமலே நிலைத்துவிட்டாள் பெரியக்கா.

அப்பா போனபிறகு இந்த ரிசர்வ் பாங்க் அக்காவின் ஆட்சி கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்துவிட்டது.

ஆரம்பத்தில் அப்பாவோடு வாழ்ந்திருந்த சின்ன வீட்டை உதறி ஒரு பெரிய வீட்டை வாடகைக்குப் பிடித்தாள். இப்பொழுது சொந்த வீடே கட்டிவிட்டாள்! வீட்டை டம்பமாக 'ஃபர்னிஷ்' பண்ணி வைத்திருக்கிறாள். டி.வி., ரேடியோ, வாஷிங் மிஷின், கிரைண்டர், டேப் ரிகார்டர், வீடியோ... எல்லாவற்றுக்கும் மேலே ஊழியம் செய்ய இருக்கவே இருக்கிறான் அம்பி கிச்சு. வீட்டில் வராத பத்திரிகைகள் கிடையாது. இங்கிலீஷ் பத்திரிகைகள், தமிழ்ப் பத்திரிகைகள், இன்னும் கண்ட கண்ட புத்தகங்கள்! அப்பா இருந்தால் இவையெல்லாம் வீட்டுக்குள் நுழைய முடியாது.

இந்தக் கூத்துக்களுக்கெல்லாம் மேல் பெரிய கூத்தாக அப்பாவின் பெரிய போட்டோவை இந்த வீட்டு ஹாலில் மாட்டி வைத்திருக்கிறார்கள். இரவு பகல் எப்போதும் எரிகிற மாதிரி ஒரு சின்ன விளக்கு வேறு. அப்பா இறந்த போது - அப்போதுதான் பள்ளிப் படிப்பை முடித்திருந்தேன் என்னை மேலே படிக்க வைக்க அக்கா விரும்பினாள். நான் ஏதாவது வேலைக்குச் செல்வதாகச் சொன்னேன்!

"இந்த அரைகுறைப் படிப்புக்கு உனக்கு என்ன உத்தியோகம்டி கிடைக்கும்? எவனாவது பியூனோ, சமையல்காரனோ வரனாகக் கிடைக்கிற வரைக்கும் இந்தாத்துச் சமையற்காரியாய் இருக்கிறதுதான் உன் தலையில் எழுத்து" என்று அந்த ஆபீசர் அக்கா சபிப்பதுபோல் சொன்னாள். அந்த சாபத்தையே நான் ஒரு ஆசீர்வாதமாக ஏற்றுக் கொண்டேன்.

'இந்த ஏழை குமாஸ்தாவின் பெண்ணுக்கு அந்தத் தலை எழுத்து வேறெந்த வீட்டிலாவது போய் விடியாமல் இருக்கட்டும்' என்று சந்தோஷமாக நான் இந்த வீட்டிலேயே ஒரு வருஷம் சமையற்கலையைக் கற்றுக் கொண்டேன்.

சமையல் என்றால் ரசாயனம், விஞ்ஞானம், மருத்துவம், தொழில் நுட்பம், கலை அழகு, செய்நேர்த்தி, பொருளாதாரம், உட்பட இன்னும் என்னென்னவோ சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் அல்லவோ?

நடுவில் கொஞ்சநாள் ஹிந்தி படித்தேன். அதன்பிறகு ஒரு சிநேகிதியின் யோசனையைக் கேட்டு, ஹிந்தி வகுப்புக்குப் போவதையும், டியூஷன் எடுப்பதையும் விட்டுவிட்டு 'கேட்டரிங் கிளாஸ்' (சமையற்காலை வகுப்பு)க்குச் சென்று பயின்றேன். அதில் முதல் வகுப்பில் தேறினேன். அதன் பிறகு பெரிய வட்டாரங்களில் எனது பெயர் பிரபலமாயிற்று. பெரிய விருந்துகளுக்கு என்னை அழைக்கலானார்கள். 'ஆர்ட் ஆஃப் குக்கிங்' என்று ஆங்கிலத்தில் நான் ஒரு புத்தகம்கூட எழுதியிருக்கிறேன். எனது சிறப்புத் திறன் அசைவ உணவு வகைப் பக்குவங்களைக் கண்டு பிடிப்பது.

மீன்களைப் பார்த்த மாத்திரத்தில் அவற்றின் பெயர்களை எனக்குச் சொல்லத் தெரியும். அசைவ உணவு சாப்பிட்டே பழக்கமில்லாத எனக்கு இந்தக் கலையில் தேர்ச்சி பெறுவதற்குப் பல சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்தக் கலையில் இவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கும் நான், ஏன் ஒரு அசைவ உணவுக்காரியாக மாறிவிடக் கூடாது? என்ற எண்ணத்தில் நான் எவ்வளவோ முயன்றேன்; ஆனால் முடியவில்லை! இதை யார் நம்புவார்கள்?

என் அம்மாவே என்னைப் பார்த்து அடிக்கடி புலம்புவாள்: "இப்படி ஊரறிஞ்ச அநாசாரம் ஆயிட்டாளே, இவளுக்கு எப்படி ஒரு வரன் தேடுகிறது?" என்று.

"நீ ஒன்றும் கவலைப்படாதே என்னைப் போலவே ஒரு ஊரறிஞ்ச அநாசார வரனைத் தேடிப் பார்த்துக் கொள்கிறேன்” என்று பதில் சொல்லுவேன்.

இப்போது என் கையிலும் நாலுகாசு சேர்ந்திருக்கிறது; ஸ்கூட்டர் வாங்கியிருக்கிறேன்; பாங்க்கில் பணம் வைத்திருக்கிறேன்; அக்கா கட்டிய வீட்டின் மாடியில் எனக்கென்று ஒரு அறை கட்டியிருக்கிறேன்...

கல்யாணத்துக்கு ஒன்றும் அவசரமில்லை. தேடாமலேயே தேடிவந்த வரன் மிஸ்டர் மணி, எனக்கு நண்பராகி விட்டார். நான் எப்போதோ அம்மாவிடம் விளையாட்டுக்குச் சொன்னேனே: “அம்மா! நீ நினைக்கிற மாதிரி என்னைப் போல் ஒரு 'நான்- வெஜிடேரியன்' பிராமண வரனைப் பார்த்து வெச்சால் வேண்டாம்னா சொல்றேன்" என்று.

உடனே அம்மா சொன்னாளே: "என்னடீது யக்ஷிணி சொல்ற மாதிரி இருக்கு...! உனக்குத் தெரியுமோ? என்னோடு பாட்டுக் கிளாஸ்லே படிச்சவள். செல்லம்னு பேர். இவ்வளவு காலமாக பம்பாய்லே இருந்தாளாம். அயோத்தியா மண்டபத்திலே நேத்து சாயங்காலம் பார்த்துட்டு என்னை அடையாளம் தெரிஞ்சுண்டு 'அடி இவளே'ன்னு வந்து கட்டிண்டாள். அட்ரஸெல்லாம் கேட்டுத் தெரிஞ்சிண்டாள். அவளுக்கு ஒரே பிள்ளையாம். பேர் மணி; பெரிய படிப்பாம். பம்பாய்லே இருக்கறச்சே ஹாஸ்டல்லே சேர்த்துப் படிக்க வெச்சாளாம். சின்ன வயசிலேருந்தே அசைவம் பழக்கமாயிடுத்தாம்...”

- இப்படித்தான் ஆரம்பமாச்சு எனக்கும் மிஸ்டர் மணிக்கும் அறிமுகம்...

மிஸ்டர் மணியும் அவர் அம்மாவும் என்னைப் பெண் பார்க்க வந்தபோது நான் 'ஜீன்ஸ்' போட்டுக் கொண்டு ஸ்கூட்டரை வைத்துக்கொண்டு வாசலில் காத்திருந்தேன். என்னைப் பார்த்தவுடன் மிஸ்டர் மணி ஒரு 'ஹலோ' சொன்னார்.

நாங்கள் இருவரும் தனித்தனியே ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டு வெளியில் புறப்பட்டோம்...

நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். என் அப்பாவைப் பற்றி என் குடும்பச் சூழ்நிலை பற்றி, என்னைப் பற்றி நான் சொல்ல வேண்டியதனைத்தையும் சொன்னேன். செத்துப் போன என் சின்னக்காளின் கதையைக் கேட்டு அவர் கண்ணீர் சிந்தினார்.

அப்பா அவசரப்பட்டுக் கல்யாணம் செய்து வைத்ததனால்தான் சின்னக்காளின் வாழ்க்கை பாழாகிவிட்டது என்று இப்போதும் பெரியக்கா நினைக்கிறாள். நடந்தது என்னவோ அப்படித்தான்.

சின்னக்காவுக்குப் புருஷன் வீட்டில் நேர்ந்த கொடுமைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் வறுமை, மாமியாரின் அவமதிப்பு. தொடர்ந்து பட்டினி கிடந்து தானே வரவழைத்துக் கொண்ட நோய். ஒரு மாதிரியாக யார் மீதும் பழிவராமல் அவள் தற்கொலை செய்து கொண்டுவிட்டாள்.

"யாருக்கும் தெரியாமல் ஒருவர் உண்ணாவிரதம் இருந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டால் யார் மேலும் பழி ஏதும் வராது. இது ரொம்ப சௌகரியமான வழி" என்று அவளே என்னிடம் சொல்லி அழுதிருக்கிறாள்.

"நீ ஒரு விநாடி இந்த வீட்டில் தங்க வேண்டாம்; உனக்குப் புருஷனோ, புருஷன் வீடோ வேண்டாம், அப்பா ஸ்தானத்தில் நான் இருந்து உன்னைக் கடைசி வரையில் காப்பாற்றுகிறேன். பிறந்த வீட்டில் உனக்குள்ள உரிமையையும் உடன் பிறந்தவர்களோடு உனக்குள்ள சொந்தத்தையும் யாரும் மறுத்துவிட முடியாது" என்று நான் அவளை வீட்டுக்குக் கூப்பிட்டேன். ஆனால் சின்னக்கா அந்த அழைப்பை மறுத்துவிட்டாள். மனம் கைத்துச் சிரித்தவாறு அவன் சொன்னது என்னுள் இப்போதும் ரீங்கரிக்கிறது.

"பெற்றவர்கள் துணையோ உடன் பிறந்தவர்கள் துணையோ ஒரு பெண்ணுக்கு வாழ்க்கைத் துணையாகி விடாது. வாழ்க்கைத் துணை என்று ஒன்று நேர்ந்து, அந்தத் துணை சரியானதாக அமையாவிட்டால் ஒரு பெண், 'தனக்கு இவ்வளவுதான் வாழ்க்கை' என்று முடித்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். உங்கள் ஆதரவில் வாழ்வது எனக்கு ஒருபோதும் சந்தோஷத்தைத் தராது. அவ்வளவுதான் பிராப்தம் என்று விட்டுவிடுங்கள்...”

"அருமைத் தங்கையே! என்னைப் பற்றி ஒருநாள் சேதி வரும், உன் சின்ன அக்காள் செத்துப் போய் விட்டாளென்று" என்று கடைசிச் சந்திப்பில் அவள் சொன்ன வார்த்தைகளின்படி சில தினங்களில் அந்தச் சேதி வந்தது.

எல்லாரும் போய்விட்டு வந்து சின்ன அக்காவுக்காக அடித்துக்கொண்டு அழுதார்கள்.

நல்லவேளை! இதையெல்லாம் பார்ப்பதற்கு அப்பா இல்லை. இப்படிப்பட்ட ஒரு குடும்பத்தில் அன்பு செலுத்துவது என்றால் என்னவென்றும், துரோகம் செய்வது என்றால் என்னவென்றும் நடுநிலையில் இருந்து என்னால் காண முடியும். அதனால்தான் எப்போதும் அப்பாவின் மனச் சாட்சியாக நான் இந்த வீட்டில் இந்த மனிதர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

இந்த வீட்டில் உள்ள மற்றவர்களெல்லாம் - அம்மா உட்பட - அப்பாவை ரொம்ப சௌகரியமாக மறந்து விட்டார்கள். ஹாலில் மாட்டி வைத்திருக்கிற அந்தப் படத்தைப் பார்க்கும்போதுகூட அப்பாவின் நினைவு இவர்களுக்கு வருவதே இல்லை என்று தெரிகிறது. ஹாலில் சோபாவில் உட்கார்ந்து கொண்டு அந்தப் போட்டோவுக்கு எதிரேதான் கிச்சு சிகரெட் பிடிக்கிறான். அம்மா டி.வி. பார்த்துவிட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறாள்.

அப்பா இருந்தால் சின்னக்காவின் சோகம் ஒன்று மட்டுமே அவரை உருக்குலைத்திருக்கும்... இவர்களுக்கு அதெல்லாம் ஒன்றுமே நினைவில் இருப்பதில்லை.

நான்தான் அப்பா உயிரோடிருந்தால் எப்படி ஒவ்வொன்றுக்கும் அவரிடம் ஆலோசனையும் அறிவுரையும் உத்தரவும் கேட்பேனோ அதேபோல் இந்த நிமிஷம் வரை ஒவ்வொன்றுக்கும் அவரிடம் மானசீகமாக உத்தரவு கேட்டு நிற்கிறேன். அவரும் என்னுள் இருந்து எனக்கு நல்வழி காட்டுகிறார். அவர் அவ்வப்போது சொன்ன அறிவுரைகளையெல்லாம் தவறாமல் கேட்டு நடக்கிறவள்னு எனக்கு என்னைப்பத்தி ஒரு நம்பிக்கை, கர்வம் உண்டுதான்.

மிஸ்டர் மணியும் நானும் நல்ல நண்பர்களானோம். இன்னமும் எங்கள் கல்யாணம் பற்றிப் பேசுவது குறித்து நாங்கள் இருவருமே தயக்கம் காட்டுகிறோம். கல்யாணம் என்று செய்து கொண்டால் அது எனக்கும் அவருக்கும் தான் என்கிற அளவில் நாங்கள் மனம் ஒத்திருக்கிறோம்; ஆனால் கல்யாணம் பற்றிய கருத்தரங்கம் எங்களிடையே தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கிறது!

அம்மா சொல்வதுபோல் மிஸ்டர் மணி, பெரிய படிப்புப் படித்தவர்தான். கல்யாணம் என்பது சமூகம் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், தெளிவாகச் சொன்னால் பிள்ளைப் பேறு சம்பந்தப்பட்டது என்பதால் நமது வாழ்க்கையில் அது பெரிய பிரச்னை என்பதால் நாங்கள் அது குறித்து ரொம்பவும் யோசிக்க வேண்டித்தான் இருக்கிறது.

மிஸ்டர் மணி சிவில் எஞ்சினீயரிங் படித்துப் பாஸ் பண்ணி இருக்கிறாரே தவிர எஞ்சினீயராக எங்கும் வேலை செய்து கொண்டிருக்கவில்லை. ஏதோ அப்பா சேர்த்து வைத்த சொத்து இருக்கிறது. அதுகூட அவர்கள் குடியிருக்கிற அந்த வீடு மட்டுமாகத்தான் இருக்கும் பெரிய வீடு. ஒரு பகுதியில் இருந்து வாடகை வருகிறது. இதையெல்லாமா வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொள்ளமுடியும்? - என்று கேட்கிறார் மிஸ்டர் மணி. நானும் அவரோடு சேர்ந்து 'ஆமாம், அதெப்படி முடியும்?' என்கிறேன். நாங்கள் ஒருவருக்கொருவர் ஒளிவுமறைவில்லாத நண்பர்களாயிருப்பது குறித்தே மிகவும் மகிழ்ச்சி

அடைகிறோம். இந்த நட்பு நீடிக்கட்டுமே! கல்யாணம் என்ன வேண்டிக் கிடக்கிறது கல்யாணம்! நானும் மிஸ்டர் மணியும் பார்த்துப் பார்த்து ரசிக்கிற காட்சி இந்தக் கல்யாணம் ஆனவர்கள் அடிக்கிற கூத்துதான்.

முதலில் நாங்கள் விவாதித்தது இந்தத் தாலிகட்டிக் கொள்கிற சமாசாரம்தான். தாலி என்கிற வார்த்தையைக் கேட்டதும், "தூ... நான்சென்ஸ்" என்றார் அவர்.

காலம் முழுக்கக் கழுத்தில் கிடந்து உறுத்தாதோ? நான் நகையே போட்டுக் கொள்வதில்லை. எனக்கு நகை மீது மோகம் கிடையாது. நான் தலைபின்னிக் கொள்வது கூடக் கிடையாது. ரொம்பவும் மண்டிப் போனால் நானே கூந்தலை முன்புறம் இழுத்துப் பிடித்துக் கத்தரித்து எறிந்து விடுவேன். என்னுடைய இந்தப் பழக்கங்களெல்லாம் மிஸ்டர் மணிக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

போன மாதத்தில் ஒருநாள் மிஸ்டர் மணி வந்து ஒரு செய்தியைச் சொன்னார். அவருக்கு வேலை கிடைத்து விட்டதாம். மொரீஷியஸ் நாட்டில் இந்திய அரசாங்கத்தின் சார்பில் ஏதோ ஒரு பெரிய திட்டத்துக்கு அனுப்பப்படுகிற வல்லுனர்கள் குழுவில் இவர் பெயரும் சேர்க்கப் பட்டிருக்கிறதாம். ஐந்து வருஷம் ஒப்பந்தம்.

இந்தச் செய்தியை மிஸ்டர் மணி என்னிடம் சொன்னவுடன் நான் 'கன்கிராஜுலேஷன்ஸ்' சொன்னேன். நாங்கள் ஒன்றும் பிரிவுக்குக் கலங்குகிற காதலர்கள் அல்லர்.

அவர் புறப்படுவதற்கு முதல் நாள் எங்கள் ஹோட்டலில் அவருக்கு ஒரு சிறப்பு விருந்து கொடுத்தேன். அசைவ உணவை அவர் ரசித்துப் புசிப்பதைப் பார்க்கிறபொழுது, நான் இந்தச் சமையற்கலையில் தேர்ச்சி பெற்றதற்காக இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஐந்து வருஷ ஒப்பந்தம் என்றாலும் அவர் இடையில் அடிக்கடி வருவார் என்று எண்ணிச் சமாதானம் அடைகிறேன்.

மிஸ்டர் மணி மொரீஷியஸுக்குப் பயணமாகி இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன. இந்த இரண்டு வாரங்களில் அவரிடமிருந்து இரண்டு நீண்ட கடிதங்கள் வந்திருக்கின்றன. அந்தக் கடிதங்களில்தான் அவர் எவ்வளவு விஷயங்கள் எழுதுகிறார்.

மொரீஷியஸ் ரொம்ப அழகான தேசமாம். அவர்கள் அநேகமாக பிரெஞ்சு மொழி பேசினாலும் அவர்களது பெயரிலும் கலாசாரத்திலும் நிறைய தமிழ் மணம் கமழ்கிறதாம். இது மாதிரி பொது விஷயங்கள் குறித்துச் சில பக்கங்கள் அப்புறம் அவர் தற்போது படித்துக் கொண்டிருக்கிற ஒரு புத்தகத்தைப் பற்றிய முழு விமர்சனம். அவர் அங்கு போய்ச் சேர்ந்த அன்று பொழுது போகாமல் போரடித்ததனால் போய்ப் பார்த்த ஒரு ஜப்பானிய திரைப்படத்தைப் பற்றிய முழுநீள வர்ணனை. அதைத் தொடர்ந்து நமது தமிழ் சினிமாக்களைப் பற்றிய நீண்ட, நெடிய சாபங்கள்! எப்படித்தான் அவரால் பேசுகிற மாதிரி எழுத முடிகிறதோ! நானும் அவருக்கு அது மாதிரி ஒரு நீண்ட கடிதம் எழுத முயற்சி செய்ய வேண்டும்... என்னத்தை எழுத...?

மிஸ்டர் மணி எனக்கு எழுதுகிற கடிதங்களை அம்மா, அக்கா, கிச்சு மூவரையும் வைத்துக் கொண்டு படித்துக் காட்டுவது பரமசுகமான அனுபவம். அடிக்கடி அவர் கடிதத்தை எடுத்து எந்தப் பகுதியை வேண்டுமானாலும் படித்து ரசிக்கலாம்.

இந்தப் பதினைந்து நாட்களாக - நானும் மிஸ்டர் மணியும் பிரிகிறபொழுது பெரிதாக ஒன்றும் அலட்டிக் கொள்ளாத போதிலும் - அவரைச் சந்திக்காமல் இருப்பதில் ஏதோ ஒரு வெறுமை என் மனசுக்கு மட்டும் தெரிகிறது. உத்தியோகத்துக்குப் போவது, வருவது எல்லாம் யாந்திரீகமாக நிகழ்கிறது. எங்கள் முதல் சந்திப்புக்குப் பிறகு நாங்கள் அநேகமாக ஒவ்வொரு நாளும் சந்தித்துக் கொண்டோம். மற்றவர்களைப் போல பொழுது போக்குவதற்கென்று நாங்கள் எங்கேயும் போகவேண்டாம்.

எங்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டலே அதற்குத்தானே இருக்கிறது. ட்யூட்டி முடிந்த பிறகும் நான் அங்கேயே இருப்பது குறித்து எங்கள் ஹோட்டல் நிர்வாகத்திற்கு ஏக திருப்தி.

மிஸ்டர் மணி அங்கிருப்பவர்களுக்கெல்லாம் நண்பராகி விட்டார். என்னோடு போட்டி போட்டுக்கொண்டு எங்கள் மானேஜிங் டைரக்டர் வேறு அவருக்கு ஒரு பிரிவுபசாரம் நடத்தினார்.

முன்பெல்லாம் என் செக்ஷனில் இருக்கும் டெலிபோன் மணி அடிக்கிற பொழுது, அது எனக்காகத்தான் அடிக்கிறதோ என்று ஆர்வத்தோடு ஓடுவேன். இப்பொழுதெல்லாம்கூட டெலிபோன் மணி அடிக்கிறது; அந்த நேரங்களில் மிஸ்டர் மணியின் நினைவு வருகிறது. ஒவ்வொரு முறையும் டெலிபோன் மணி ஒலிக்கும்போது, 'அவர் ஊரில் இல்லை, இந்த அழைப்பு உனக்காகவும் இல்லை' என்று சொல்லுவது போல் இருக்கிறது. எப்போது எனக்கு ட்யூட்டி முடிகிறது என்று அவர் டெலிபோனில் கேட்டுக் கொண்டு வருவாரே என்று நினைத்துக் கொள்கிறேன். ட்யூட்டி முடிந்ததும் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு நேரே வீட்டுக்கு வந்து விடுகிறேன்.

இவ்வளவு நாட்கள் நானும் மிஸ்டர் மணியும் எவ்வளவு நெருக்கமாகப் பழகியிருந்தபோதிலும் நானும் அவரும் ஒரு தடவைகூட ஒரே ஸ்கூட்டரில் ஜோடியாகப் போனது இல்லை. முன்னும் பின்னுமாக இருவரும் தனித்தனியே வேறு வேறு ஸ்கூட்டர்களில்தான் போவோம் என்று நினைக்கையில் எங்களைப் பற்றி எனக்கு ஏனோ பெருமையாக இருக்கிறது.

இந்தப் பதினைந்து நாட்களாய் ஏனோ பொழுதே போக மாட்டேனென்கிறது. அவர் எனக்கு எழுதிய மாதிரி ஒரு நீண்ட கடிதம் எழுதுவதற்கு மனத்துள் விஷயங்களை யெல்லாம் சேகரித்துச் சேகரித்துப் பார்க்கிறேன். அவரைப் போல் நானும் ஏதாவதொரு புத்தகத்தைப் படித்துவிட்டு அதைப்பற்றி நீளமாய் எழுதலாம்.

நான் எப்பொழுதாவது தேர்ந்தெடுத்த நூல்களைப் படிப்பதுண்டு. அப்பா சொல்லுவார், "புத்தகங்களில் சொல்வதையெல்லாம் நம்ப வேண்டுமென்பதில்லை. நமக்கு வேண்டியது - அதாவது நம்மை அபிவிருத்தி செய்து கொள்வதற்குத் துணையான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்" என்று.

அப்பா ஒரு சின்ன லைப்ரரி வைத்திருந்தார். அவர் மறைவுக்குப் பிறகு அந்த லைப்ரரியை நான் சுவீகரித்துக் கொண்டேன்.

இப்போது அந்த லைப்ரரியின் நினைவு வந்ததால் அதிலுள்ள ஏதாவதொரு புத்தகத்தை எடுத்துப் படித்து அதைக் குறித்து மிஸ்டர் மணிக்கு எழுதலாம் என்ற திட்டத்துடன் அந்த நூல் நிலைய அலமாரியைத் திறந்து குடைந்தேன்.

இதுவரை என் கண்களில் படாத அப்பாவின் டைரி ஒன்று கிடைத்தது. சரியாகப் பத்து வருஷத்துக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளை இதில் பின்னோக்கிப் பார்க்க முடியும் என்கிற ஆர்வத்தோடு புரட்டுகிறேன். ஏதோ மளிகை சாமான் கணக்குதான் முதலில் என் கண்களில் பட்டது.

ஒவ்வொரு பக்கமாகப் புரட்டியபோது பல தாள்கள் ஒன்றும் எழுதப்படாத வெள்ளைத் தாள்களாகவே இருந்தன. டைரியின் நடுவிலிருந்து ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ தென்பட்டது.

முதலில் பெரியக்காவின் போட்டோவாக இருக்குமோ என்று நினைத்தேன். ஒருவேளை என் படம்தானோ...? பத்து வருஷத்துக்கு முன் நான் இவ்வளவு பெரியவளாக இல்லையே...!

பளிச்சென்று நினைவுக்கு வருகிறது. இது அந்த ஜானகி அக்காவின் படம்...

ஜானகி அக்கா, அப்பாவின் இறந்து போன அண்ணாவின் மகள்; சின்ன வயதிலேயே அவள் தாயையும் இழந்தவள்.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் பத்து வயதாகும் வரை என் சகோதரிகளிலேயே மூத்த சகோதரியாக எங்களுடன்தான் வாழ்ந்தாள்.

அவளைப் பற்றி நினைக்கிறபொழுதெல்லாம், 'அந்த அக்கா ரொம்ப அழகு' என்கிற எண்ணம்தான் முதலில் ஏற்படுகிறது. அவள் எங்களுக்குத் தலைவாரிவிட்டதும், பாடப் புத்தகங்களுக்கு அட்டை போட்டுக் கொடுத்ததும், எங்களைக் கொஞ்சியதும், விளையாடியதும் ஒவ்வொன்றாய் நினைவுக்கு வருகிறது...

அப்பாவுக்குத் தான் பெற்ற பெண்களை விடவும் அவளிடம் பிரீதியும் கனிவும் உண்டு; அத்தனைக்கத்தனை அம்மா அவளைப் பாடாய்ப் படுத்தி வைத்தாள் என்பதும் நினைவுக்கு வருகிறது. அப்பாவின் மனசு யாருக்கு வரும்?

அந்த அக்கா இப்பொழுது எங்கிருக்கிறாளோ...?

அவளைப் பற்றி யாருமே ஒன்றுமே பேசுவதில்லையே! இந்தப் படத்தைப் பார்த்திருக்காவிட்டால் நான்கூட இவளைப் பற்றி நினைக்கப் போவதில்லையே... அது எப்படி...?

எங்களில் ஒருத்தியாக, எங்களோடு இருந்த ஒரு சகோதரியைப் பத்து வருஷ காலமாய்ப் பிரிந்து அவளை மறந்தே போனது எப்படி...?

நாங்கள் அனைவரும் மறந்துவிட்ட அவளை அப்பா மறக்காமல் இருந்திருக்கிறார். ஒருவேளை அப்பா இருந்திருந்தால் இந்தக் குடும்பம் அவளை மறக்காது இருந்திருக்குமோ...?

மிஸ்டர் மணிக்கு எழுதப் போகிற கடிதத்தில் இந்த அக்காவைப் பற்றி எழுதவேண்டும். அப்பாவைப் பற்றி, பெரியக்காவைப் பற்றி, அகாலமாய் மாமியார் வீட்டுக் கொடுமைக்குப் பலியாகிப்போன என் சின்னக்காவைப் பற்றி, என்னைப் பற்றி, இந்தக் கிச்சுவைப் பற்றியெல்லாம் தெரிந்திருக்கிற எங்கள் குடும்ப நண்பருக்கு இந்தக்

காணாமற் போன அக்காவைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும்.

ஆம்! அப்படித்தான் பேசிக்கொண்டார்கள். அவள் காணாமல் போய்விட்டாளாம். அதற்குமேல் அவளைப் பற்றி ஒன்றும் பேசக்கூடாது என்று எச்சரித்திருந்தார்கள். அப்பா அவளுக்காக ரொம்ப வருத்தப்பட்டிருப்பார். அப்பாவின் மன இயல்புக்குக் குற்ற உணர்ச்சிகூடக் கொண்டிருக்கலாம்... அம்மாவிடம் அவள் படுகிற பாட்டைக் கண்டு சகிக்க முடியாமல் அப்பாதான் அடிக்கடி அவளை அத்தை ஆத்துக்கு அழைத்துக் கொண்டு போய் விடுவார்.

அவள் அங்கேதான் இருக்கிறாள் என்று நாங்கள் நம்பிக் கொண்டிருந்தோம். அவளைப் பற்றிப் பெரியவர்கள் அக்காலத்தில் பேசிக்கொண்டது சின்னக் குழந்தையான எனக்கொன்றும் புரியவில்லை.

முன்பு ஒரு முறை சின்னக்காளைத் தேடிக்கொண்டு போனேனே, ஒரு நினைப்பில் - அதுபோன்ற நினைப்பும் ஆதங்கமும் இந்த அக்காவைப் பற்றி இப்போது என் நெஞ்சில் கனக்கிறது.

அப்பாவின் மனச்சாட்சி என்னுள் கிடந்து துடிப்பது போல் உணர்கிறேன். இவளைப்பற்றி - இந்த ஜானகி அக்காவைப் பற்றி - முதலில் இந்தக் குடும்பத்தில் உள்ள அம்மா முதல் கிச்சு வரை என்ன நினைக்கிறார்கள்? என்ன தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும்.

*****

# 2

அம்மாவும் அக்காவும் ஹாலில் உட்கார்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் கையில் அந்தப் போட்டோவுடன் நான் போய் நின்றேன்.

அக்காதான் முதலில் என் கையிலிருந்த போட்டோவைக் கவனித்தாள். "என்னடி படம் கையிலே?” என்று அக்கா கேட்டதும் நான் அதை மௌனமாக அவளிடம் தந்தேன்.

நான் பெரியக்காவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். எனக்குத் தெரிந்ததை விடவும் ஏதோ இவளுக்கு அதிகம் தெரியும் போல் தோன்றியது.

“எங்கே இருந்தது?” என்று கேட்டாள் அக்கா.

"அப்பாவின் டைரியில்" என்று நான் சொன்னதைக் கேட்டு அம்மாவும் வந்து அந்தப் படத்தைப் பார்த்தாள்.

"ஜானகி...! என்னவாம் அவளுக்கு இப்போ? ஏதோ டிராமா, சினிமான்னு வீட்டை விட்டே போய்ட்டாள். அவாளுக்கே எங்கே இருக்காள், என்ன பண்றாள்னு ஒண்ணும் சமாசாரம் தெரியாதாம்."

“எவாளுக்கு?” என்று எரிச்சலுடன் கேட்டேன்.

“உனக்கு ஒண்ணும் தெரியாது. அப்போ நீ சின்னக் குழந்தை... உங்கப்பா எவ்வளவோ செல்லமாத்தான் வெச்சிருந்தார். அவளுக்கு இங்கே இருக்கப் பிடிக்காமல் அத்தை ஆத்துக்கு ஓடினாள்... ஓடறவாளுக்குக் கால் எங்கேயும் தரிக்காது...” என்று அந்த அக்காவின் கதையையே ஒரு வரியில் முடித்துவிட்டு, அந்தப் போட்டோவை மறுபடியும் என்னிடமே திருப்பித் தந்தாள் அம்மா.

வெளியில் போயிருந்த கிச்சு அப்போது வந்தான். என்னைவிடச் சின்னவனான இவனுக்கு இவளை ஞாபகம் இருக்கிறதா? என்று தெரிந்து கொள்வதற்காக அந்தப்

போட்டோவைக் காட்டி, "இது யாருன்னு தெரியறதா உனக்கு” என்று கேட்டேன்.

"அட, தெரியாமல் என்ன...? டிராமாவெல்லாம் நடிப்பாளே, மிஸ் மாலா... டி.வி.யிலே பார்த்திருப்பேளே" என்றான் கிச்சு.

"யார் கண்டா...? ஒருவேளை பேரை மாத்தி வெச்சிண்டு நடிக்கிறாளோ என்னமோ...? நீ சொன்னப்பறம் தான் எனக்கே தோன்றது. மாலான்னு ஒருத்தி நடிக்கிறாளே அவளைப் பார்க்கறச்சே அசப்பிலே ஜானகி மாதிரி இருக்காளேன்னு நானே நினைச்சிருக்கேன்... அது ஆச்சேடி பத்து வருஷம்...” என்று சொல்லி ஏதோ தன் நினைவில் இருந்த டி.வி. நாடகத்தில் பார்த்த ஒரு முகத்தோடு பொருத்திப் பார்த்து, “ஆமாண்டி... இப்போ எனக்கு உறுதி ஆயிடுத்து... இந்த மாலா நம்ப ஜானகிதான்...” என்று சொன்னாள் அம்மா.

பெரியக்கா அழுத்தலுடன் ஒரு புன்னகை செய்து, "எனக்கு முந்தியே தெரியும்... அவளைப்பத்திப் பேசினாத் தான் உனக்குப் பிடிக்காதேன்னு நான் ஒண்ணும் சொல்லலை...” என்று அம்மாவிடம் சொன்னாள்.

"என்கிட்டே சொல்லி இருக்கலாமே” என்றேன் நான்.

"உனக்கு ஞாபகம் இருக்காதுன்னு நினைச்சேன். அதுக்கும் மேலே நம்ப சொந்தக்காராளெல்லாம் 'வேண்டாம்'னு தள்ளி வெச்சுட்ட ஒருத்தியைப் பத்தி என்னத்துக்கு அநாவசியப் பேச்சு?ன்னு எனக்குத் தெரிஞ்சதை மனசுக்குள்ளே வச்சிண்டு பேசாமல் இருந்துட்டேன்" என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கிச்சுவின் முகத்தில் ஒரு புது வெளிச்சம் உண்டாயிற்று. அவன் நினைவிலும் எங்கோ ஒட்டிக் கொண்டிருந்த ஜானகி அக்காவுடன் இந்த நடிகை மாலாவைப் பொருத்திப் புரிந்து கொண்டுவிட்டான் போலிருக்கிறது.

"நான் கண்டுபிடிச்சுட்டேன்... நம்பாத்திலே முன்னே இருந்தாளே ஜானகி அக்கா, அவள்தான் நடிகை மிஸ்

மாலா" என்று உரக்கக் கூவினான் கிச்சு.

"நாடகத்திலேயோ சினிமாவிலேயோ நடிச்சால் என்ன? அதுக்காக என்னத்துக்கு நம்ம மனுஷா அவளைத் தள்ளி வச்சாளாம்?" என்று நான் கடுமையாகக் கேட்டேன்.

"உனக்கு ஒண்ணும் தெரியாது... பெரிய விஷயத்திலே யெல்லாம் தலையிடாமல் வாயை மூடிண்டு இரு... நம்ப ஜாதியிலே இல்லாத வழக்கமா இவள் மேடையிலே ஏறி ஆடுவாளாம்... அவளைத் தள்ளி வைக்காமல் தலைமேலே வச்சிண்டு ஆடுவாளோ...? அவளுக்கும் அதுதான் வசதின்னு போய்ட்டாள். வசதியாகவும் இருப்பாள். நமக்கென்ன? விடு..." என்று அம்மா என்னை அடக்கினாள்.

அதற்குமேல் நான் அம்மாவிடம் வாதாடவில்லை. பெரியக்காவிடம் பிறகு பேசிக்கொள்ளலாமென்று இருந்து விட்டேன். ஆனால் கிச்சுவை நம்ப முடியாது. இப்படி சம்பாதித்துப் போடுகிற இரண்டு அக்காமார்களுக்கு மேலே பிரபலமும் புகழும் உடைய இன்னும் ஒரு அக்கா இருக்கிற விஷயம் தெரிந்தால் விடுவானோ? எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு போய்ச் சொந்தம் கொண்டாடிக் கொண்டு நிற்பான். ஒருவேளை எதற்கு வம்பு என்று அம்மாவோடு சேர்ந்து கொண்டு அலட்சியமாக இருந்தாலும் இருக்கக்கூடும். அவனையோ அவன் காரியத்தையோ சீரியஸாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஆனால் ஜானகி அக்கா விஷயமாக நான் தனியாகப் பெரியக்காவுடன் பேசுவேன் என்ற தீர்மானத்துடன் அன்றைக்கு அந்த விஷயமாகப் பேசுவதைவிட்டு அவளைப் பற்றி யோசிக்கலானேன்.

நாடகம், சினிமா இதுபோன்ற விஷயங்களிலெல்லாம் மற்றவர்களைப்போல் எனக்கு ஈடுபாடு இல்லாததால், மிஸ் மாலா என்ற புனைபெயரில் புகுந்து கொண்டிருக்கும், சின்ன வயதில் என்னை மிகவும் நேசித்த அந்த அக்காவை இவ்வளவு நாள் தெரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டேன்.

ஆனால் அதைத் தெரிந்து கொண்டும் தெரியாதவர்கள் போல் இருந்த அம்மாவைப் பற்றியும் அக்காவைப் பற்றியும் நினைக்க அவர்களது சுயநலத்திற்காக என் மனம் வருத்தப் பட்டது.

நான் அந்த அக்காவை எப்படியாவது தேடிக்கண்டு பிடித்துச் சந்திப்பது என்று முடிவு செய்தேன்.

உத்தியோக நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் என் சித்தத்தில் அப்பாவைப் பற்றிய, மிஸ்டர் மணியைப் பற்றிய நினைவுகளோடு இப்போதெல்லாம் இந்த அக்காவைப் பற்றிய நினைவுகள் வேறு வந்து கவிகின்றன.

குழந்தைப் பருவத்தில் அந்த அக்காவோடு கழித்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மனத்திரையில் அடிக்கடி கண்டு கொண்டிருக்கிறேன். ஸ்கூட்டரில் போகும்போது தெருக்களில் கண்களில் படுகிற போஸ்டர்களிலெல்லாம் இந்த மாலாவின் பெயர் எங்கேயாவது தென்படுகிறதா என்று தேடுகிறேன். டி.வி. நிகழ்ச்சி என்றாலே அந்த ஹாலை விட்டு எழுந்துபோய் விடுகிற நான் எப்போதாவது மிஸ் மாலா வருவாளா இந்த டி.வி.யில்... பார்த்து விடுவோம் என்று அப்படி ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

அப்படியொரு எண்ணமில்லாமலே அகஸ்மாத்தாக எங்கள் வீட்டுக் கூடத்தில் வந்து குவிகிற பத்திரிகைக் குப்பையில் ஏதோ ஒன்றை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

நடிகை மிஸ் மாலாவுடன் ஒரு பேட்டி - என்ற தலைப்பும் அந்த அக்காவின் படங்களும் அவள் குடியிருக்கிற வீடு, அவள் வளர்க்கும் பூஞ்செடிகள் உட்பட பிரசுரமாயிருந்த பேட்டிக் கட்டுரை எந்த நாடக அபிமானிக்காவது என் அளவு ஆவலைத் தூண்டியிருக்குமா என்பது சந்தேகமே!

அந்த அக்கா இப்போதும் அழகாகத்தான் இருக்கிறாள். டீஸண்ட்டாக இருக்கிறாள்... ஆர அமர அந்தப் பேட்டிக் கட்டுரை பூராவையும் தனியாகப் போய்ப் படிக்கிறேன்.

ஒவ்வொரு கேள்விக்கும் என்ன தெளிவாக, ஒளிவு மறைவில்லாமல் உயர்வாகப் பதில் சொல்லி இருக்கிறாள் என்று அந்தக் கட்டுரையைப் படிக்கும்போது என்னால் இடையிடையே வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

"மேடை நாடகங்களிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் ஏன், வானொலி நாடகங்களில்கூடப் பங்கேற்றுப் புகழ் அடைந்திருக்கும் நீங்கள் சினிமாவில் நடிக்காமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் உண்டா?" - என்றொரு கேள்வி.

இதைப் படிக்கும்போதுதான் எனக்கே தெரிகிறது. இவள் சினிமாவில் நடிக்கவில்லை என்கிற விஷயம்.

பதிலைப் படிக்கிறேன்:

"அந்தத் துறையில் நான் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் முக்கியக் காரணம். நடிப்புத் துறைக்கு இளம் வயதிலேயே வந்து சினிமா மூலம், பெரும் சாதனை புரிய வேண்டும் என்ற ஒரு சங்கல்பத்தோடு நான் நடிக்க வரவில்லை. ஏதோ அமெச்சூர் நண்பர்களோடு சேர்ந்து, அவர்களே போடுகிற பெண் வேஷங்களில் ஒன்றைக் கேட்டு வாங்கிக் கொண்டு நடிப்புத் துறையில் புகுந்தவள் நான். சினிமாவில் போட்டி இருந்தால்தான் ரசிகர்களுக்கு லாபம். நாங்கள் சபா ரசிகர்களுக்காகவும் எங்களுடைய சொந்த மனத்திருப்திக்காகவும் இந்த நிகழ்ச்சிகளிலேயே திருப்தி அடைந்து கொண்டிருக்கிறோம். ஒரு சினிமா நடிகை ஆவதாக எனக்கு உத்தேசமில்லை என்பது தான் நான் சினிமாவில் நடிக்காமல் இருப்பதற்குக் காரணம். ஒரு சினிமா எடுக்கவேண்டும் என்ற ஆசை எனக்கிருக்கிறது. அதில்கூட நான் நடிக்கமாட்டேன்."

- இந்தப் பதிலை நான் திரும்பத் திரும்பப் படித்தேன். எனது குழப்பத்தை நானே தீர்த்துக்கொள்ள முடியாது: அந்த அக்காவைச் சந்தித்துத்தான் தெளிவு பெறவேண்டும்...

"நடிப்பதற்கு முன்னால் நீங்கள் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள்?" என்று ஒரு கேள்வி.

"சிறு வயதிலேயே தாய் தந்தையாரை இழந்துவிட்ட நான் உறவினர்களின் ஆதரவில் படித்துக் கொண்டிருந்தேன். பத்தாவது படித்து முடித்தபிறகு வாழ்க்கை எப்படி வழி காட்டுகிறதோ, அதாவது என்னை ஆதரிப்பவர்கள் எந்த வாழ்க்கைக்கு என்னை உட்படுத்துகிறார்களோ அதை ஏற்றுக்கொள்வது என்ற தீர்மானத்தில் சில வருஷங்கள் அவர்களுக்குப் பாரமாக இருந்தேன். நண்பர்களும் என்னை ஆதரித்தவர்களும் எனக்கு வழங்கிய ஆலோசனைகள், உதவிகள் எல்லாம்தான் என்னை இப்படி ஒரு நடிகை ஆக்கி இருக்கிறது."

இந்தப் பதிலைப் படித்த பிறகு நான் மறுபடியும் யோசித்தேன். அப்படியென்றால் இவளைச் சேர்ந்தவர்களும் உறவினர்களும் இவளைத் தள்ளி வைத்திருப்பதற்கும் இவள் ஒதுங்கியிருப்பதற்கும் என்ன காரணம்?

- இவ்வாறு அந்தப் பேட்டிக் கட்டுரையைப் படிக்க படிக்க அந்த மிஸ் மாலா என்ற நடிகையைப் பற்றி, அவளது கருத்துக்கள் பற்றிப் பல தெளிவுகள் பிறந்த போதிலும், ஜானகி என்கிற அந்த அக்காவைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மேலும் அதிகரிக்கவே செய்தது.

அந்த வாரம் நான் மிஸ்டர் மணிக்கு எழுதிய கடிதத்தில் 'மாலா' என்கிற ஜானகி அக்காவைப் பற்றி நிறையவே எழுதினேன். அந்தச் சினிமா பத்திரிகையில் வந்திருந்த பேட்டிக் கட்டுரையைக் கத்தரித்துக் கடிதத்துடன் இணைத்தேன். எனது இளம் பிராயத்தில் அந்த அக்காவோடு கழித்த இனிமையான அனுபவங்களை நினைவு கூர்ந்து ஒவ்வொன்றையும் அந்தக் கடிதத்தில் கதை மாதிரி விவரித்தேன்.

அப்பாவின் அன்பிற்குரிய அந்த அநாதை அக்காவை நான் சந்தித்து அவளோடு உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளப்

போவது குறித்தும் அந்தக் கடிதத்தில் எழுதினேன். ஏனென்றால் இதையெல்லாம் குறித்து இந்த வீட்டில் உள்ளவர்களோடு பேச முடியாது; பேசினால் ஒரு வேளை காரியம் கெட்டுப்போகும்!

என்ன நடந்திருந்த போதிலும் அந்த அக்கா இப்போது பிரபலமாக இருக்கிறாள். அது குறித்து இந்த வீட்டில் உள்ளவர்களுக்கும் பெருமையாகத்தானிருக்கிறது.

"அப்பவே ரொம்ப நன்னாப் பாடுவாள்... வீணை வாசிப்பாள். ரொம்ப சூட்டிகை... யாராத்திலேயோ வாத்தியார் வச்சு அவாத்துப் பொண்ணுக்குப் பாட்டுக் கத்துக் குடுக்கப் படாதபாடு படுவா... இவ தேமேன்னு அங்கே தூண் ஓரமா நின்னுண்டிருந்துட்டு வந்து அப்படியே பாடிக் காட்டுவாள்" என்று அம்மா கூட அவளை நினைத்துப் பார்த்துப் புகழ்கிறாள்.

யார் கண்டது? ஒருவேளை அந்த அக்காதான் இவர்களையெல்லாம் வேண்டாமென்று ஒதுக்கிவிட்டுப் போய் விட்டாளோ, என்னமோ!

இப்படியாக அந்த அக்காவைப் பற்றி நினைத்துக் கொண்டே ஒரு மாதம் கழிந்துவிட்டது. நடுவில் தொலைக் காட்சியில் அவள் நடிக்கிற ஒரு தொடர் நாடகத்தை எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்து சொந்தத்தோடு பார்த்தாகி விட்டது. அவள் விலாசத்தைக் கண்டுபிடிப்பது ஒன்றும் சிரமமாயிராது. ஆனாலும் அவளைச் சந்திப்பதற்கு நான் ஏன் தயங்கிக் கொண்டிருக்கிறேன் என்று தெரியவில்லை.

நாள் பூராவும் எனது நேரம் ஹோட்டலிலேயே செலவாகி விடுகிறது. ஏதாவது ஒருநாள் ஒரு தியேட்டருக்குப் போய் அவளது நாடகத்தையும் பார்த்துவிட்டுப் பாராட்டுத் தெரிவிக்கிற எத்தனையோ ரசிகைகளில் ஒருத்தியாக என்னை அறிமுகம் செய்து கொள்ளலாம்... அநேகமாக நாடகம் நடக்கும் அதே நேரத்தில் நான் இங்கே ஹோட்டலில் பிஸியாக இருந்து விடுகிறேன்.

இதற்கிடையில் மிஸ்டர் மணியிடமிருந்து வந்த கடிதமும் அந்த அக்காவைப் பற்றி மிகுந்த அக்கறையுடன் விசாரித்தது. சகோதரிமார்கள் விஷயத்தில் ஒரு தகப்பனின் மனோபாவத்தைப் புரிந்து கொண்டு அவர் இறந்த பிறகு அவர் விருப்பப்படி நான் எல்லாரையும் ஒன்றிணைக்க முயல்வதாக மிஸ்டர் மணி என்னைப் பாராட்டியிருந்தார். அடுத்த கடிதத்தில் அந்த அக்காவை நான் சந்தித்த விவரங்களை எதிர்பார்ப்பதாக எழுதியிருந்தார்.

எனக்கு லீவு வருகிற நாட்களில் பத்திரிகையைப் புரட்டி எங்காவது அவளது குழுவினர் நடிக்கும் நாடகம் இருக்கிறதா என்று தேடிப் பார்க்கிறேன். நாடகம் இருக்கிற நாளில் எனக்கு லீவு இருக்காது; எனது லீவு நாட்கள் பொதுவாக விடுமுறை தினங்களில் வருவதில்லை.

கடைசியில் பிடிவாதமாக ஒருநாள் பர்மிஷன் எழுதிப் போட்டுவிட்டு அவளது நாடகம் ஒன்றைப் பார்க்க நான் போனேன்.

ஹோட்டலில் இருந்தே டிக்கெட் ரிசர்வ் செய்திருந்தேன்; வேண்டுமென்றே என்னுடன் யாரையும் அழைத்துப் போகவில்லை.

சல்வார் கமீஸ் அணிந்து, 'பாப்' செய்த சிகையோடு ஸ்கூட்டரில் அமர்ந்து கொண்டு அவளது தங்கை ஒருத்தி வருவாள் என்று அந்த அக்கா ஒரு போதும் எதிர்பார்த்திருக்க முடியாது. எனக்கும்கூட அந்த முதல் சந்திப்பில் என்னை யார் என்று அடையாளம் காட்டிக் கொள்ளாமல் அவளாக என்னை யாரென்று கண்டு பிடிக்கிறாளா? அந்தப் பத்து வயதுச் சிறுமியை இவளுக்கு நினைவிருக்கிறதா? என்று பார்க்க வேண்டுமென்று ஒரு ஆவல்.

அந்த நாடகம், கதை, உரையாடல் எல்லாவற்றையும் மறந்து, அவள் எப்போது மேடையில் தோன்றுவாள் என்ற ஆர்வ உணர்ச்சி நெஞ்சில் துடிக்க நான் இருக்கையில் தவித்துக்

கொண்டிருந்தேன். என்னைப் போன்ற மன உணர்ச்சியை அந்தத் தியேட்டரில் இருந்த அனைவருமே கொண்டிருந்தது போல அவள் முதல் காட்சியில் தோன்றியவுடன் கை தட்டி ஆரவாரம் செய்தனர். அவர்களது ஆரவாரம் ஓய்ந்த பின்னும் நான் கைதட்டிக் கொண்டிருந்தேன்.

அந்த நாடகத்தில் கதை, வசனம், காட்சி ஜோடனை, பாத்திர அமைப்பு, நடிப்பு - எதையும் நான் கவனிக்கவில்லை. மாலா வருகிற பொழுதெல்லாம் அவளைப் பார்த்து, அவளுக்காக ரசிகர்கள் ஆரவாரிக்கிற பொழுது, 'இவள் என் அக்காவாக்கும்.' என்று மனத்துக்குள் பெருமைப் பாட்டுக் கொண்டேன்.

ஏதோ ஒரு பிச்சைக்காரி வேஷம்... ரொம்பவும் 'ஸடயரான' வசனங்கள் போலிருக்கிறது! மேடையில் அவர்கள் சொல்வது காதில் விழாத அளவுக்கு ரசிகர்கள் ஆரவாரிக்கிறார்கள். ஆரம்பத்தில் இவ்வாறு ஏகக்களேபரமாக இருந்த காட்சியும் நடிப்பும் எங்கேயோ திடீரென ஸீரியஸாக மாறித் தியேட்டரில் சோகமயமான அமைதி நிலவ, இறுதிக் காட்சியில் எப்படி எல்லாரையும் அழ வைத்து விட்டாள் இந்த அக்கா! என்று எண்ணிப் பெருமிதத்தால் நான் நெஞ்சு கனக்கிறேன்.

நாடகம் முடிந்தது. ரசிகர் குழாம் நடிகர்கள் ஒப்பனை செய்து கொள்கிற 'கிரீன் ரூமை' நோக்கி முண்டியடித்துக் கொண்டு நிற்கிறது. ஒரு கதவைத் திறந்து கொண்டு நிற்கிற பணியாள் ஒருவன், எப்படியோ வருபவர்களை வேண்டியவர்கள் என்றும் வேண்டாதவர்கள் என்றும் இனம் கண்டு சிலரை உள்ளே போக அனுமதித்துக் கொண்டிருந்தான். அவன் என்னையும் உள்ளே செல்ல அனுமதித்தான்.

ஒளி மிகுந்த விளக்குகள் பொருந்திய நிலைக் கண்ணாடியின் முன்னால் உயரமான நாற்காலி ஒன்றில் அமர்ந்து மிஸ் மாலா 'மேக்-அப்’பைக் கலைத்துக் கொண்டிருந்தாள். எண்ணெயும் பவுடரும் குழம்பி இருக்கிற அந்தக் கிரீம் தலைமுடியில் படாமல் ஒரு கைக்குட்டையைக்

குல்லாய் போல் தலைக்கு மேல் கட்டி இருந்தாள். தன் பின்னால் சூழ்ந்து நின்று புகழ்ந்து கொண்டிருக்கும் ரசிகர்களைக் கண்ணாடி வழியாகவே பார்த்துப் புன்முறுவல் காட்டியும் நன்றி கூறியும் அவள் மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

நான் சுவர் ஓரமாய் நின்று அந்தக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தேன். அந்தக் கண்ணாடியினூடே அவள் என்னையும் பார்க்க முடியும். கூட்டம் சிறிதே கலைந்த பிறகு நான் அவளருகே போய் "உங்கள் நடிப்பை இப்போது தான் நான் முதல் தடவை பார்க்கிறேன். மற்றவர்களைப் போல் புகழ்ந்து சொல்ல எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை" என்று ஆங்கிலத்தில் சொன்னேன்.

மிஸ் மாலாவும் எனக்குப் பதில் உரைக்க வார்த்தைகள் அற்றவள் போல் மௌனமாகக் கண்களை மலர்த்தி என்னைப் பார்த்தாள். அவள் பார்வை குறிப்பாக என் முகத்தில் பதிந்து ஏதோ என்னை நெருக்கமாக அடையாளம் காண முயல்வது போல் எனக்குத் தோன்றியது.

"என் பெயர் மிஸ் ஜெ..." என்று என் பெயரையும் நான் பணிபுரியும் நட்சத்திர ஹோட்டலின் பெயரையும் எனது உத்தியோகத்தையும் சொல்லிக் கொண்டேன்.

"அவ்வளவு பெரிய ஹோட்டலுக்கெல்லாம் நான் போனதே இல்லை..." என்று அவள் சொன்னதும் நான் அவளை எங்கள் ஹோட்டலுக்கு எனது விருந்தினராக ஒருமுறை வர வேண்டுமென்று அழைத்தேன்.

அவள் மரியாதைக்கு ஒப்புக் கொண்டாள்.

"சமீபத்தில் உங்கள் பேட்டி ஒன்று படித்தேன். உங்கள் கருத்துக்கள் ஒவ்வொன்றும் எனக்கு உடன்பாடு. உங்களை நான் எப்பொழுதாவது உங்கள் இருப்பிடத்துக்கு வந்து சந்திக்கலாமா?"

"நிச்சயமாக...” என்று சொல்லிக் கைப்பையைத் திறந்து ஒரு காகிதத்தில் தனது விலாசத்தை எழுதிக் கொடுக்கும் போது என்னிடம் ஒரு புன்னகையுடன் சொன்னாள் மிஸ் மாலா: "ஒரு வேளை நீ வரும்போது நான் இல்லா விட்டாலும் பொருட்படுத்தாதே... அங்கே பல அருமையான கலைஞர்களை நீ சந்திக்கலாம். நிச்சயம் வர வேண்டும்!” என்று என்னை யாரென்று தெரியாமலேயே அவளது இயல்புக்கேற்ற அன்போடு அழைத்தாள்.

'மேக்- அப்'பைக் கலைத்துவிட்ட பிறகு அவள் முகம் 'பளிச்' சென்றிருந்தது. இடது கையில் ஒரு வாட்ச் தவிர வேறு அணிகலன்கள் இல்லை... மேக்-அப் சாமான்கள் நிறைந்த ஒரு கைப் பையை அவளே எடுத்துக் கொண்டு புறப்படும் போது மறுபடியும் என்னிடம் சொன்னாள்: "உன்னை நான் அவசியம் எதிர்பார்ப்பேன்."

ஒரு லொட லொட்டை டாக்ஸியில் அவளைப் போன்ற சக நடிக, நடிகைகளோடு நெருக்கியடித்துக் கொண்டு இவள் ஏறிச் சென்ற பின்னர்தான் யோசித்தேன். ஸ்கூட்டரில் ஒரு லிஃப்ட் கொடுத்திருக்கலாமே என்று...

தியேட்டரிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் வழியெல்லாம் என் மனம் அடிக்கடி பரவசத்தால் சிலிர்த்தது.

அம்மாவிடமும் அக்காவிடமும் அவளைச் சந்தித்தது பற்றியும் அந்த நாடகம் குறித்தும் இரவு வெகுநேரம் வரை பேசிக் கொண்டிருந்தேன். அம்மாவின் ஆர்வத்தையும் அக்கறையையும் பார்க்க எனக்கு மனத்துள் சிரிப்பு வருகிறது.

"ஏண்டி, உன்னை அவளுக்கு அடையாளம் தெரிஞ்சுதோ? அவளாகக் கண்டு பிடிச்சாளா? நீயே யாருன்னு சொல்லிண்டயா?” என்று விசாரித்தாள்.

“நான் ஒண்ணும் சொல்லிண்டுடலே... சும்மா என் பெயரையும் நான் உத்தியோகம் பண்ற ஹோட்டல் பெயரையும் சொன்னேன். அவள் என்னைப் பார்த்த

விதத்தையும், என் பெயரைச் சொன்னதும் கொஞ்சம் அவள் புருவம் சுளித்து யோசித்ததையும் நினைச்சுப் பார்த்தால் ஒருவேளை அடையாளம் கண்டுண்டு இருப்பாளோன்னு தோணறது. தன்னை யாருன்னு தெரியாத என்னைத் தனக்குத் தெரிஞ்சதாகக் காட்டிக்க வேண்டாம்னு நினைச்சாளோ என்னமோ! ஆனால் ரொம்ப அன்பாகப் பேசினாள்" என்று அவள் புன்னகையை நினைத்து மகிழ்ந்தவாறு சொன்னேன்.

"போறும் சமத்து! இவ்வளவு தூரம் தேடிக் கண்டு பிடிச்சுப் போய்ப் பார்த்தவள், நீ இன்னார்ன்னு சொல்லிக்க வேண்டாமோ?" என்று அம்மா கடிந்து கொண்டாள்.

பெரியக்காவுக்கு நான் நடந்துகொண்ட விதம் சரிதான் என்று பட்டது போலிருக்கிறது.

"என்னை வரச்சொல்லி அட்ரஸ் குடுத்திருக்காள்... இந்த வாரத்தில் ஒருநாள் போவேன்" என்று நான் சொன்னதை எங்கிருந்தோ கேட்டுக் கொண்டிருந்த கிச்சு, "நானும் வரேண்டி... உனக்கு அக்கான்னா எனக்கும் தானே அக்கா... நான் அவளோட பரம ரசிகனாக்கும்..." என்று உற்சாகமாகச் சொல்லிக் கொண்டு வந்தான்.

"நீ ஒண்ணும் வரவேண்டாம்... அவள் என்னை மாத்திரம்தான் 'இன்வைட்' பண்ணியிருக்கா... இன்னொரு நாள் நம்பாத்துக்கு நான் அவளைக் கூப்பிடுவேன். அப்போ நீ அவளைப் பார்த்துப் பேசலாம்..." என்று அவனை அடக்கினேன்.

சோபாவில் உட்கார்ந்திருந்த அக்கா புருவத்தைத் தேய்த்தவாறு யோசித்தாள். ஏதோ கைவேலையாக அம்மா கூடத்துக்கு வந்தாள். அவளிடம் திடீரென்று கேட்டாள் அக்கா.

"ஏம்மா... அவள் ஏன் இப்படித் தனியாக இருக்கணும் நம்ப வீடு, இல்லாட்டா அத்தை வீட்டில்தானே அவள்

இருக்கணும்? அத்தை வீட்டிலே இருக்காள்னுதானே நாம்ப நினைச்சுண்டிருந்தோம்" என்று அம்மாவை விசாரித்தாள்.

அம்மா சொன்னாள்: "இந்தக் காலம் போலவா... பத்து வருஷத்துக்கு முன்னே? இதோ பாரேன் இவளை..." என்று என்னைக் காட்டி "தடிப்பயல் மாதிரி கால்சராயும் சட்டையும் போட்டுண்டு நிக்கறாள்... நமக்கு ஒண்ணும் வித்தியாசமா இப்ப தோணலே, அப்போ அப்படி இல்லை... பத்து வருஷத்துக்கு முந்தி நாடகம், நடிப்புன்னு போய்ட்டவாளுக்கு வீடு சரிப்பட்டு வருமோன்னு என்னென்னமோ பேசினார். அதைப் பத்தியெல்லாம் என்னன்னு இப்போ ஆயிடுத்து... அவளுக்கும் வசதி, உங்களுக்கும் வசதின்னா அழைச்சிண்டு வந்து வச்சுக்கறது" என்று அம்மாவும் அனுமதி தந்துவிட்டாள்.

கிச்சு உற்சாகம் மேலிட்டுக் கூவினான்: "அந்த அக்கா இந்தாத்துக்கு வந்துட்டால் நான்தான் அவளுக்கு செக்ரட்டரியாக இருப்பேன்."

ஏனோ அவளைப் பற்றி நினைக்கிற பொழுதெல்லாம் தான் பத்து வயதுச் சிறுமியாகி விடுகிறேன். அவளை அந்த மேக் அப் ரூமில் முதலில் பார்த்ததிலிருந்து கடைசியில் டாக்சியில் கும்பலாக நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டு என்னை, அவள் பார்த்த பார்வை, அவளது புன்னகை தவழும் முகம், கையசைத்து விடை பெற்றுக் கொண்டது வரை என் மனதில் அடிக்கடி மலர்கிறது. அத்துடன் 'அந்தத் தனது குட்டித் தங்கைதான் இவள் என்று என்னை அவளுக்குத் தெரிந்திருக்குமோ? தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று கற்பனையில் மனம் லயிக்கிறது.

எப்படியும் இன்னும் ஓரிரு தினங்களில் அந்த அக்காவின் அழைப்பை ஏற்று நான் அவளைச் சந்திக்கப் போவது உறுதி!

*****

# 3

ஒரு விடுமுறை நாளில் மாலாவைப் பார்க்க நான் புறப்பட்டேன். ஜன நெருக்கடி மிகுந்த அந்தத் தெருக்களில் ஸ்கூட்டர் போவது சிரமமாக இருந்தது. நமது நகரத் தெருக்கள் எல்லாமே பீச் ரோடையும் மவுண்ட் ரோடையும் தவிர-ஒரே மாதிரி மோசமாகி விட்டது. இந்த நாட்டின் ஜனத் தொகையின் பெரும் பகுதி தெருவிலேயே வாழ்கிறது. அதற்குமேல் மொத்த ஜனத் தொகையே ஒரு நாளில் முக்கால்வாசி பாகத்தைத் தெருவிலேயே திரிந்தலைந்து கழிக்கிறது. ஏன் கூட்டம் தெரியாது?

இந்த ஜன நெரிசலையெல்லாம் கடந்து ஒரு புதிய குடியிருப்புப் பகுதிக்கு அவள் தந்த விலாசம் என்னை வழி காட்டி அழைத்துச் செல்கிறது.

வீட்டைக் கண்டுபிடிப்பது சிரமமாக இல்லை. நான் எதிர்பார்த்திருந்ததை விடவும் பெரிய வீடு. அதே மாதிரி நான் எதிர்பாராத அளவு மனிதர்களும் இங்கு நிறைந்திருந்தனர். நான் வரும்பொழுது வாசல் வராந்தாவில் பத்துப் பிள்ளைகள் உட்கார்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தனர். என் வயதொத்த ஒருத்தி அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அவள்தான் என்னை முதலில் வரவேற்றாள். நான் மாலாவைப் பற்றி அவளிடம் விசாரித்தேன். என்னை உள்ளே போகச் சொல்லிட்டு அவள் தொடர்ந்து பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தரலானாள். முன் ஹாலில் ரோஜா மலர் தரித்த அழகான நேருவின் படம் ஒன்று தைல வண்ண ஓவியம்-அலங்கரித்தது.

வீட்டுக்கு முன்னால் ஒரு கார், இரண்டு ஸ்கூட்டர்கள் நின்றிருந்தன. நான் முதலில் நுழைந்த கூடம் பார்த்த மாத்திரத்தில் ஒரு ஓவியக்கூடம் என்று புரிந்தது. அங்கே ஓர் இளைஞர் ஒரு மூலையில் அமர்ந்து பெரிய வண்ண ஓவியத்தைத் தீட்டுவதில் முனைந்திருந்தார். அழைப்பு

விடுத்த அன்றே மாலா கூறிய வார்த்தைகள் என் நினைவுக்கு வந்தன. "அங்கே பல அருமையான கலைஞர்களை நீ சந்திக்கலாம். நிச்சயம் வரவேண்டும்."

நான் சற்று நேரம் நின்று அந்த ஓவியத்தைப் பார்த்தேன். கரடுமுரடாய்த் தசை வலிமையுடைய ஒரு மனிதன் கசாப்புக்காக ஓர் ஆட்டை சைக்கிளின் பின் சீட்டில் வைத்துக் கட்டிக் கொண்டு போவதையும், ஒரு பெண்ணை உல்லாசமாக ஒருவன் ஒரு ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு போவதையும் ஒன்றன்மேல் ஒன்று 'ஸுப்பர் இம்ப்போஸ்' ஆவதுபோல் அந்த நவீன ஓவியம் வரையப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த ஓவியரையும் ஓவியத்தையும் கடந்து ஒரு மாடிப் படியை நோக்கி நான் நடந்தபோது, வீணை ஒலி கேட்டது. மாலாவாகத்தான் இருக்கும்! அந்தப் பேட்டிக் கட்டுரையில் வீணையோடு ஒரு படத்தில் அவள் இருந்தது நினைவுக்கு வருகிறது. அந்தப் பேட்டியில் அது குறித்துக் கேட்கப்பட்ட கேள்வியும் அதற்கு அவள் சொல்லியிருந்த பதிலும்கூட நினைவுக்கு வருகிறது.

"நீங்கள் வீணையை யாரிடம் பயின்றீர்கள்? கச்சேரி செய்திருக்கிறீர்களா?" என்பது கேள்வி.

அதற்கு மாலா சொல்லியிருந்தாள்:

"பத்து வயதுக்கு முன்னால் என் அம்மா எனக்குக் கற்றுக் கொடுத்ததுதான். என் அம்மாவின் வீணைதான் இது. அவளிடம் கற்றுக் கொண்டதை அவள் நினைவாகக் காப்பாற்றி வருகிறேன். மற்றபடி கச்சேரி செய்வது என்கிற அளவுக்கு எனக்கு ஒன்றும் சங்கீத ஞானம் கிடையாது."

நான் மாடிப்படியேறி மேலே போனேன். கீழேயுள்ள கூடத்தில் அந்த ஓவியர் ஒரு மூலையில் உட்கார்ந்து வரைந்து கொண்டிருக்கிறாரே, அதேபோல் அதற்கு நேர் மேலே உள்ள இந்த மாடியின் கூடத்தில் ஒரு மூலையில் விரித்த ஜமக்காளத்தின் மீது அமர்ந்து வீணை வாசித்துக்

கொண்டிருந்த மாலா, என்னைக் கண்டதும் வீணை வாசிப்பை நிறுத்தாமலே என்னை அருகே அழைத்து அமரச் சொன்னாள்.

நான் அவளுக்கு வணக்கம் தெரிவித்து ஜமக்காளத்தில் உட்கார்ந்தேன். அவள் எனக்கு வாசித்துக் காட்டுகிற மகிழ்ச்சியுடன் உற்சாகமாய் அந்தக் கீர்த்தனை முழுவதும் வாசித்தாள்.

அவள் பார்வை அடிக்கடி என் கண்களைக் குறுகுறுக்க வைத்தது. ‘இவளுக்கு நிச்சயம் நான் யார் என்பது தெரிந்திருக்க வேண்டும்; அவளது சந்தேகமெல்லாம் எனக்கு அவளைத் தெரிந்திருக்கிறதா என்பதே...'

அப்பாவின் டைரியில் இருந்த அவளது - பத்து ஆண்டுகளுக்கு முந்தைய - அந்தப் போட்டோவை நான் காரியமாகவே என் கைப்பைக்குள் வைத்திருந்தேன்.

இருவரும் என்ன பேசுவது என்று தெரியாமல் இருந்த மௌனத்தை மாற்றுவதற்கு எனக்கு ஒரு அரிய யோசனை பிறந்தது. அந்தப் படத்தை எடுத்து அவளிடம் நீட்டினேன். யாருடைய படத்தையோ பார்ப்பதுபோல் அதை வாங்கிச் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னை இவள் தெரிந்து கொண்டுவிட்டாள் என்கிற மகிழ்ச்சியில், தெரிந்தே தன்னைத் தேடி வந்திருக்கிறாள் என்னும் பெருமிதத்தில் பரவச உணர்ச்சிக்கு ஆட்பட்ட மாலா கண்கள் பனிக்க ஒரு புதிய சொந்தத்துடன் என்னைப் பார்த்துச் சொன்னாள்.

"உன்னைப் பார்த்த உடனேயே இது நம்ம ஜெ - குட்டின்னு எனக்குத் தெரிஞ்சது. நீ குழந்தையா இருக்கும் போது உன்னை நான் அப்படித்தான் கூப்பிடுவேன்; 'ஜெ - குட்டி'ன்னு... இப்போ நீ மிஸ் ஜெ... ஆய்ட்டே! வா... கீழே போகலாம்... எல்லாரையும் உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்” என்று சொல்லி வீணையை மூடி விட்டு எழுந்தாள் ஜானகி அக்காள்.

மாடிப் படியில் இறங்கி வரும்போது அவள் ஒருமுறை என்னைத் திரும்பிப் பார்த்துச் சொன்னாள்: "இப்போதுகூட நாம் இருவரும் ஒருவரை ஒருவர் மட்டுமே தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் ஒருவரைப் பற்றி ஒருவர் தெரிந்து கொள்ள நிறையவே இருக்கிறது."

நான் அவள் சொல்வதை ஆமோதித்துப் புன்னகையுடன் தலையசைத்தேன். எனக்கு முன்னால் படிகளில் இறங்கிக் கொண்டிருக்கிற அவளது விரிந்து பரந்த கருங்கூந்தல் அலைபாய்வதை நான் ரசித்தேன்.

ஒரு காலத்தில் இவள் அழகை வியந்து, இவள் அன்பில் லயித்து, அவள் பின்னாலேயே திரிந்து கொண்டிருப்பேனே, அது போலவே இவளை ஒட்டிக்கொண்டு நான் வந்து நிற்கிறேன்.

முதலில் கூடத்தில் இருந்த ஓவியருக்கு என்னை அறிமுகம் செய்து வைக்கிறாள். "மிஸ் ஜெ...யைச் சந்தியுங்கள். இவள் என் சித்தப்பாவின் மகள்... ரொம்ப வருஷத்துக்குப் பிறகு என்னை வந்து சந்திக்கிறாள். இவர் சுரேஷ்! ஓவியர் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை; சொல்லித் தெரிய வேண்டிய விஷயம் இவர் ஓர் ஆங்கிலக் கவிஞர் என்பதே..."

அந்த ஹாலில் இருந்த சோபாவில்-நான் முதலில் உள்ளே வரும்போது இல்லாத சிலர் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வந்து குழுமியிருப்பதைப் பார்த்தால் இங்கு ஏதோ ஒரு நிகழ்ச்சிக்கு ஒத்திகை நடக்க இருப்பது தெரிகிறது.

"மீட் மிஸ் பைரவி..." என்று அவள் அறிமுகம் செய்து வைத்தபோது நான் இந்த வீட்டுக்குள் நுழைந்தவுடன் சந்தித்தேனே, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த ஒருத்தியை - அவள்தான் பைரவி என்று அறிந்து கொள்கிறேன்.

அவளைத் தொடர்ந்து, மிஸ் வாணி, மிஸ்டர் ரவி, மிஸ் ரேகா, மிஸ்டர் கண்ணன்... என்று ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து கொண்டு, இவளது சகோதரி என்று

அறிமுகமாகிறேன். அனைவரும் ஒரு பத்து வயதுக்குள் வித்தியாசப்பட்டவர்கள்தான். இங்கு இருப்பவர்களிலேயே முப்பத்திரண்டு வயதாகிற மிஸ் மாலா என்கிற ஜானகி அக்காதான் மூத்தவள்; எனினும் எல்லாரும் சமத்துவமாகப் பழகுகின்றனர்.

"எங்கே கோபால் வரவில்லையா...? அவன் வராமல் எப்படி ஒத்திகை ஆரம்பிப்பது?" என்று யாரோ கேட்கிறார்கள்.

“உனக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டிய முக்கியமான நபர்... மிஸ்டர் கோபால்" என்று என்னிடம் சொல்லி விட்டு மாலா மற்றவர்களிடம் திரும்பி. "கோபால் வருகிற வரை நீங்கள் அரட்டைதானே அடிக்கப் போகிறீர்கள்? நான் என் தங்கையோடு கொஞ்சம் சொந்த விவகாரங்களைப் பேசவேண்டும்... நாங்கள் பார்த்து ரொம்ப நாளாச்சு..." என்று என் கையை ஆதரவாகப் பற்றிக் கொண்டு அந்த வீடு முழுவதையும் கடந்து வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்திற்கு அழைத்து வந்தாள்.

அந்த வீடும் தோட்டமும் அங்குள்ள நண்பர்கள் உடனிருப்பும் எனக்கு வாழ்க்கையிலேயே பிரகாசமிக்க அனுபவம் ஏற்படுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தின... எவ்வளவு பூச்செடிகள்... காய்கறித் தோட்டம்... கீரைப் பாத்திகள்... பசுமாடு வேறு கத்துகிறது... நான் எல்லாவற்றையும் வியப்புடன் பார்ப்பதை ரசித்துக் கொண்டு நிற்கிறாள், அக்கா.

"என்ன...? நாங்கள் ஏதோ நாடகம் மட்டும்தான் போடுகிறோம்னு நினைச்சியா...? இந்தத் தோட்டமெல்லாம் அதோ, படிச்சிண்டு இருக்கே- வாண்டுகள், அவங்க பயிர் பண்ணி வளர்த்துப் பாதுகாக்கிறதாக்கும்!" என்று பெருமிதத்துடன் சொன்னாள் மாலா.

"இது என்ன ஆசிரமமா?" என்று கேட்டேன்.

மார்பின் மீது கைகளைக் கட்டிக்கொண்டு நின்ற அக்கா அண்ணாந்து மந்தஹாஸமாகச் சிரித்தாள்!

"மூட நம்பிக்கைகளும் முரட்டுத்தனமான கட்டுப்பாடுகளும் இல்லாத சுதந்திரமான பறவைகள் கூடிச் சமூகப் பணி புரிந்து கொண்டு இருக்கிற, கலைப்படைப்புக்களை ஆக்கிக் கொண்டிருக்கிற இந்த இடத்தை ஓர் ஆசிரமம் என்று சொன்னால் தகும்; ஆனால் நடைமுறையில், வீட்டுக்கு, அடங்காமல் ஓடி வந்துவிட்ட தத்தரிக்கும்பல் - என்று தான் எங்களைப் பெரிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நினைக்கிறார்கள்...! சரி, நம் வீட்டைப் பற்றிப் பேசுவோம்... நம்ப அப்பா..." என்று அவள் ஆரம்பித்தவுடனே ஏற்பட்ட என் முகமாற்றத்தைக் கண்டு தெரிந்து கொண்டாள்.

சற்று நேரம் தலைகுனிந்த மௌனத்துடன் இருந்தாள்; அது வருத்தமில்லை; தான் அன்பும் மரியாதையும் கொண்டிருந்த ஒருவரின் நினைவுக்குச் செலுத்துகிற அஞ்சலி! அப்பாவை நினைத்துப் பார்க்கிறாள் போலிருக்கிறது.

இவள் எங்களோடு எங்களில் ஒருத்தியாக இருந்த காலத்தில் எங்களை விடவும் தனது அன்பிற்கு உரியவளாக இவளை நடத்தினார் அப்பா. எங்கள் மத்தியில் இவள் தனியாக ஒரு சுடர்மாதிரி இருந்தாள். அதனாலேயே அம்மாவுக்கு இவள்மேல் பொறாமை இருந்திருக்கக் கூடும்!

அப்பா போன சமாசாரமே தெரியாத இவளுக்குச் சின்ன அக்கா சமாசாரம் தெரிந்திருக்க முடியாது.

"இன்னொரு வருத்தமான விஷயம்... சின்னக்கா சாவித்திரி கூடப் போய்ட்டாள்..."

"ஓ! மை காட்! என்னடீது... ஐயையோ" என்று பதறிய அவள் உடம்பு மெய்யாகவே நடுங்கியது.

"ஐயோ! ரொம்ப நன்னா இருப்பாளே... எப்படி? கல்யாணமாகி இருந்ததோ...?" என்று கேட்டாள்.

"அதனாலேதான்..." என்றேன்.

“புரியும்படியா சொல்லு... உங்களையெல்லாம் நான் பிரிஞ்சு இருக்கேன்னுதான் நினைச்சேன்... நாம்ப ஒருத்தரை ஒருத்தர் இழந்துண்டும் இருக்கோமோ...?" என்று குரல் கம்மிச் சொல்லிக் கொண்டாள்.

"அப்பா இருக்கும்போதே ஏதோ தன்னாலே முடிஞ்ச அளவுக்குச் செலவு செஞ்சு சின்னக்காளுக்கு முதலிலே கல்யாணம் பண்ணினார். பெரியக்கா கல்யாணமே வேண்டாம்னு உறுதியா சொல்லிட்டாள். சின்னக்காவுக்கு அப்பா மாதிரியே ஒரு குமாஸ்தாதான் மாப்பிள்ளை... ஆனால் அப்பா மாதிரி குணம் வருமோ...? பெரிய குடும்பம்... மாமியார் கிராதகி... நல்ல வேளையாகக் குழந்தை ஒண்ணும் இல்லை... அப்பா இருக்கறச்சே அடிக்கடி வந்து அழுது புலம்பிட்டுப் போவாள்... அப்பா போனதுக்கப்பறம் இந்தப் பக்கமே வரலை. நானாக ஒரு தடவை தேடிண்டு போய்ப் பார்த்தேன். அப்போவே அவள் நிலைமை ரொம்ப மோசமாக இருந்தது. பெரியக்காவுக்கும் அம்மாவுக்கும் அப்பா போனது ரொம்ப வசதியாப் போயிடுத்து. அப்பாவுக்கு என்னென்ன பிடிக்காதோ, அதெல்லாம் செஞ்சா... அவர் கொண்டாடற சந்தோஷத்திலே சின்ன அக்காவை அவாமறந்தே போய்ட்டா..." என்று நான் சொல்லிக் கொண்டிருந்தபோது.

“அப்படி என்ன செய்வா... அப்பாவுக்குப் பிடிக்காததெல்லாம்?" என்று குறுக்கே கேட்டாள் மாலா...

"என்ன செய்வா... அக்கம்பக்கத்திலே கடன் வாங்குவா; குடுப்பா... எல்லாரும் முறை வச்சிண்டு சினிமாவுக்குப் போவா... புடவைக்கடை நகைக்கடையிலேயெல்லாம் பத்து வரவு வச்சுப்பா பாத்திரச் சீட்டுலேருந்து லாட்டரி டிக்கட் வரைக்கும் வாங்குவா... கண்ட நாவல்களைப் படிப்பா... ஊரிலே இருக்கற சினிமாக்காரா, கச்சேரி பண்றவா, காலட்சேபம் பண்றவா எல்லாரைப் பத்தியும் விவாதம், விமர்சனம், ஆளுக்கொரு அபிப்பிராயம், அதில் சண்டை... வீடு தூளிபடும். நான் இதிலேயெல்லாம் கலந்துக்க மாட்டேன். நான் தியேட்டருக்கு வந்து பார்க்கற நாடகம்,

அன்னிக்கு நான் வந்து பார்த்தேனே உங்க நாடகம் - அது தான் முதல்!" என்றதும் என்னை ஆச்சரியமாகப் பார்த்த மாலா அக்கா அதற்காக என்னைப் பாராட்டினாள்!

"நல்லது! இந்த மனோநிலையைக் காப்பாற்றிக்கொள். கிச்சு என்ன பண்றான்?" என்று அவள் திடீரென்று ஒரு குழந்தையை நினைத்துக் கொண்ட குதூகலத்தோடு கேட்டாள்.

"அவன்தான் இப்போ அம்மாவுக்குத் துணையாக வீட்டைப் பார்த்துக்கறான். நாங்க ரெண்டு பேரும் உத்தியோகத்துக்குப் போயிடறோமே! ஊரிலே இருக்கிற சினிமா, நாடகம் ஒண்ணு பாக்கி கிடையாது: உங்க ரசிகன் கூட..."

"அதைச் சொல்லு; நான் பார்க்கும்போது இத்துணூண்டு இருப்பான். ரொம்பச் சமத்து-"

"அத்தனைக்கத்தனை இப்போது அசடு" என்கிற விஷயத்தையும் சொல்லி வைத்தேன்.

"அப்படிச் சொல்லாதே...!" என்று ஒரு அக்காவின் தோரணையில் என் ஒன்னச் செல்லமாகக் கண்டித்தாள் மாலா.

ஹாலில் உள்ளவர்கள் சன்னல் வழியாகப் பார்த்தால் தெரிகிற இடத்தில்தான் நாங்கள் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தோம். இன்னும் அந்தக் கோபால் வரவில்லை.

"அப்பா சொல்லைக் கேட்டுச் சின்னக்கா கலியாணம் பண்ணிக்கொண்டு படுகிற கஷ்டங்களே பெரிய அக்காளுக்குத் தனி வாழ்க்கையில் விருப்பத்தை ஏற்படுத்திவிட்டது. நான் ஒரு அசைவ உணவுக்காரி என்று பேரெடுத்து விட்டேன். அந்தப் பெயருக்கு ஏற்ப அந்த அசைவ சமையற் கலையிலேயே தேர்ந்து அந்த உத்தியோகத்துக்கும் போய் விட்டேன். கல்யாணம் என்ற கட்டில் என்னை மாட்டி விடாமல் இருப்பதற்கு இது ஒரு

வசதியாக இருந்தது சமீப காலம் வரை..." என்று மிஸ்டர் மணிக்கும் எனக்கும் நேர்ந்த நட்பையும், கல்யாணத்தைத் தள்ளிப் போடுகிற எங்கள் தீர்மானத்தையும் நான் விவரிக்க எண்ணியபோது அவர்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த கோபால் வந்துவிட்டார்.

அவர்கள் ஒத்திகைக்குத் தயாரானார்கள். நாங்கள் இருவரும் தோட்டத்திலிருந்து பேசிக் கொண்டே அந்தக் கூட்டத்தில் கூடியிருந்த நண்பர்கள் குழுவில் வந்து கலந்து கொண்டோம்.

காலைநேர வகுப்பை முடித்துக்கொண்டு மிஸ் பைரவியும் வந்து கலந்து கொண்டாள்.

"உனக்கு சங்கீதத்தில் ஈடுபாடு உண்டா?" என்று என் காதருகே குனிந்து ரகசியமாகக் கேட்டாள் மாலா. நானும் அந்தக் கும்பலில் இருந்த வேறு யார் காதிலும் விழுந்து விடாதபடி ரகசியமாகச் சொன்னேன்: "ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது!"

புருவத்தை நெரித்துக் கொண்டு ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தாள் மாலா: "புஸ்தகம் படிப்பதில்...?"

"ஓரளவு..."

என்னோடு பேசிக்கொண்டிருந்த மாலா எப்படியோ அவர்களோடு சங்கமித்து விட்டாள். அவள் நடத்துகிற ஒத்திகையில் ஆரம்பமோ, முடிவோ ஏதும் எனக்குத் தெரியாததால் ஒன்றும் புரியாமல் அன்றைக்கு மேடையில் மாலாவைப் பார்த்துக் கொண்டிருந்ததுபோல் இன்றைக்கும் அவள் நடிப்பை ரசித்துக் கொண்டிருக்கிறேன். இடையில் ஒரு தடவை தூரத்தில் இருந்த என்னை இந்தக் கோபாலிடம் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள் மாலா. அவரும் என்னைப் பார்த்ததில் அதை நான் கண்டு கொண்டேன். மிஸ்

வாணியும் மிஸ் ரேகாவும் நடுவில் எல்லோருக்கும் காபியும் பிஸ்கட்டும் கொண்டு வந்து தந்தார்கள்.

அந்த இடைவேளையின்போது மாலா, கோபாலை என்னிடம் அழைத்துக் கொண்டு வந்து அறிமுகம் செய்து வைத்தாள்.

"இவன் மூலம்தான் இந்த நண்பர்களையெல்லாம் நான் அடைந்திருக்கிறேன். நம்ப அத்தை ஆத்திலே நான் இருந்தபோது பக்கத்து வீட்டிலே இருந்தான். இவனோட அப்பா, அம்மா எல்லோரையும் எனக்குச் சின்ன வயசிலிருந்தே தெரியும்..." என்று அவள் விவரித்துக் கொண்டிருந்தபோது கோபால் தனது பணிகளில் முனைய ஆரம்பித்தார்.

"உனக்கு ஒண்ணும் அவசரமில்லையே? இன்னிக்கிப் பூராவும் இங்கே என்னோடதானே இருக்கப் போறே..." என்று சொல்லிவிட்டு அவன் மறுபடியும் ஒத்திகை பார்க்கப் போனாள்.

அவர்கள் ஏதோ புதுமையான நாடக முயற்சியை அறிமுகம் செய்து வைக்கப் போகிறார்கள். மேடை, திரைச் சீலை காதுவும் இருக்காதாம். தெருவில் நாலுபுறமும் மக்கள் சூழ்ந்திருக்க, மக்களோடு மக்களாகவே இந்த நாடகப் பாத்திரங்கள் கலந்திருந்து, ஒவ்வொருவராகத் தங்கள் வசனத்தின் மூலம் வெளிக்கிளம்பி, காட்சியை உருவாக்குவார்களாம். அது எப்படியென்று கோபால் ஒவ்வொருவரையும் பல திசைகளில் நிறுத்திப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்.

நடப்பது நிஜமா, நாடகமா? - என்ற மயக்கம் ஒவ்வொருவருக்கும் தோன்றி, இது நாடகமே என்று தெளிவு பெறுவதன் மூலம் அந்த நாடகம் பார்க்கிறவர்களும் அதில் பங்கேற்பவர்கள் மாதிரி உணர்வார்களாம்...

இரண்டு மணி நேரம் நடந்த அந்த ஒத்திகை, நேரம் போவது தெரியாத அளவுக்கு ஒரு ரசனையுமில்லாத என்னையே ஈர்த்துவிட்டது என்றால் இந்த முயற்சி நிச்சயம் மாபெரும் வெற்றி பெறும் என்று நினைத்துக் கொண்டேன்.

"இந்த நண்பர்களைப் பற்றியும், எங்களது வாழ்க்கை முறை பற்றியும், லட்சியங்கள் பற்றியும் நீ தெரிந்து கொள்ள வேண்டும்" என்று சொன்ன மாலா, "அடிப்படையில் இங்கு இருப்பவர் அனைவரும் காதல், கல்யாணம் என்கிற சமூகக் கட்டுகளில் சிக்காமல் இருக்கும் லட்சியவாதிகள் ஆவர். இப்படி ஒரு கூட்டு வாழ்க்கையைச் சில வருஷங்களுக்கு முன்பு ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்தவள் இந்தப் பைரவிதான்!

"இவள் மீது மோகம் கொண்டு இவளைக் கல்யாணம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் இந்தக் கல்யாண மறுப்பு கோஷ்டியில் வந்து சேர்ந்தவன் கண்ணன்" என்று அங்கே யாரோடோ பேசிக் கொண்டிருந்த, காலையிலேயே அறிமுகம் செய்துவைத்த அந்தக் கண்ணனைக் காட்டினாள் மாலா.

"முப்பது வயது வரை கல்யாணம் கிடையாது" என்கிற தீர்மானத்தில் அவர்கள் இருவரும் நண்பர்களாக இருக்கிறார்கள். ஆனால் பைரவி சொல்கிறாள்: "இன்னும் எட்டு வருஷத்துக்குப் பிறகும் நமது சமூகத்தின் அடிப்படைத் தன்மைகள் மாறாது இப்படியே இருக்குமானால் இந்தக் கால வரையறையை இன்னும் தள்ளிப்போட வேண்டியிருக்கும் என்று!"

மத்தியான சாப்பாட்டுக்குப் பிறகு நானும் மாலா அக்காவும் மறுபடியும் தோட்டத்தில், மரநிழலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். ஒருவர் பின் ஒருவராகப் பைரவியும் வாணியும் எங்களுடன் வந்து உட்கார்ந்து கொண்டனர். அந்தப் பெரிய வேப்பமர நிழலில் உட்கார்ந்து பேசுவதற்கு வசதியாக ஆங்காங்கே சிமெண்ட் பெஞ்சுகள் இருந்தன.

"இங்கே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையைப் பழங்காலக் கண்ணாடி வழியாகப் பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியாது; புதியகாலப் போலி வெளிச்சத்தில் மயங்கியவர்களுக்கும் புரிந்துகொள்ள முடியாது; ஒரு கசப்பான உண்மையை நாமெல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இங்கே இருக்கிற நாமெல்லாம் கொஞ்சம் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதனால்தான் எங்கள் சுதந்திரத்தை எங்களால் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது. இந்தச் சமூகத்தை மாற்ற விரும்புகிறவர்கள், இந்தச் சமூகத்தின் பிடிகளில் சிக்கிக் கொள்ளக் கூடாது" என்று என்னிடம் சொன்னாள் பைரவி: "உங்களைப்போல் வீட்டோடு வாழ்கிற நல்ல பெண்களுக்கு எங்களைப் புரிந்து கொள்வது ரொம்பக் கடினமாக இருக்கும்."

"நாம் எல்லோரும் நல்ல பெண்கள்தான். சுயநலமாக இருக்கிற பெண்களுக்கும் சமூகப் பார்வை இல்லாத பெண்களுக்கும் - பெண்கள் என்ன, யாராக இருந்தாலும் - அப்படிப்பட்டவர்களுக்கு நம்மைப் புரிந்து கொள்வது கடினம்தான்" என்றாள் மாலா.

"எதன்பேராலும் பெண்ணை அடிமையாக்குகிற காரியம் தான் இந்தச் சமூகத்தில் நடக்கிறது. இதற்குப் பெற்றோர் என்ன பெரியோர் என்ன; உற்றார் என்ன; உறவினர் என்ன! - இவர்கள் பூட்டி வைக்கிற சிறைக்குள் மாட்டிக் கொள்ள மறுக்கிற ஒரு பெண் காண இவர்கள் அபவாதம் செய்வதற்கு அஞ்சுவதே இல்லை. இந்த அபவாதத்திற்கு நாமும் அஞ்சக்கூடாது. இந்த சுரேஷும் நானும் நர்சரி வகுப்பிலிருந்து நண்பர்கள், இவர்கள் நினைக்கிற காதலை விடவும் எங்களுக்கு நட்புதான் முக்கியம். நாங்கள் அனைவரும் நண்பர்கள். நண்பர்கள் மத்தியில் சகோதரத்துவம்தான் வேண்டும். இந்தக் காதல் என்று நீங்கள் சொல்லுகிற விஷயம்தான் நட்புக்கே பகையாகி விடுகிறது! லட்சியத்தாலும் ஒத்த கருத்தாலும் இணைந்த நண்பர்கள் மத்தியில் பொய்யையும் ஏமாற்றுகிற புத்தியையும் ஏற்படுத்துவது இந்தக் காதல் விவகாரம்தான்.

மனிதர்கள் மத்தியில், இளைஞர்கள் மத்தியில், இரண்டு நாடுகளுக்கு மத்தியில்கூட வேண்டப்படுவது சகோதரத்துவம்தான்! ஐயோ! என் அனுபவத்தில் நான் பார்த்துவிட்டேனே உடன்பிறந்த சகோதரர்கள் மத்தியில் நிலவுகிற சகோதர பாசத்தை...! உடன் பிறந்தோரிடையே சாத்தியப்படாத அந்தச் சகோதரத்துவம் ஒத்த கருத்துடைய நண்பர்களிடையேதான் கிட்டுகிறது. அதைப் போய்க் கெடுத்துக் கொள்ளலாமா, காதல், கீதல்னு..." என்று எவ்வளவு ஆணித்தரமாக வாதம் செய்கிறாள் மிஸ் பைரவி!

இந்த வீட்டில் இருக்கிற ஒவ்வொரு மனிதருக்குப் பின்னாலும் ஒரு கதை இருக்கிறது. இந்தப் பைரவியும் இவளது சிநேகிதர்களும் கூடி "இளைஞர்களான நாம் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது" என்று தீர்மானித்து வீட்டை விட்டு வெளியேறியிருப்பவர்கள்.

'ஆமாம். ஒரு பக்கம் இந்தத் தேசத்தில் ஜனப்பெருக்கம் அதிகமாகிக் கொண்டிருக்கிறதென்றும் அதைக் குறைக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் இந்தத் தேசமே இதனைச் சூழ்ந்துள்ள முக்கடலில் மூழ்கிவிடும் என்றும் விஞ்ஞான பூர்வமாகவே அச்சுறுத்துகிறார்கள்.

‘இன்னொரு பக்கம் ஆண்களும் பெண்களும் காதலோ, கல்யாணமோ என்று அலைகிறார்கள். ஒரு பக்கம் வறுமை தரித்திரம்; இன்னொரு பக்கம் இவர்களை ஆண்களும் பெண்களுமாய் மேலும் மேலும் இந்தத் தரித்திரத்திலேயே மூழ்கடிக்கச் செய்கிற காதல் கல்யாணம், ஆண்-பெண் சேர்க்கை...’

'அறிவார்ந்த இளைஞர்கள் இதில் சிக்கிக்கொள்ள முடியாது. தலைமுறைக்குத் தலைமுறை நியாயம் மாறுகிறது. இதுவரையில் மாறாதிருந்த அநியாயங்கள் இந்தத் தலை முறையினால் மாறத்தான் போகிறது.

'இவர்களுக்கு முன் தலைமுறையினர் இவர்களுக்குக் காட்டிய வழியைவிட இவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட வழி சிறப்பாகத்தான் இருக்கிறது’ என்று இவர்கள்

ஒவ்வொருவரையும் பார்த்துப் பழகிய அந்த ஒரு பொழுதில் என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

வாணியிடம் பேசிப் பார்த்ததில், இவர்கள் காதலையும் கல்யாணத்தையும் மட்டும் மறுத்தவர்களாகத் தோன்றவில்லை; உத்தியோக மறுப்புக் கொள்கை என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். இது எல்லோருக்கும் எப்படி சரிப்பட்டு வருமென்று நான் யோசிக்கிறேன். வாணி சொல்லுகிறாள்:

"தம்முடைய கொள்கைகள் எதுவுமே எல்லாருக்கும் ஒத்துவராது. அப்படி எல்லாருக்கும் பொருந்தி வருகிற கொள்கை உலகத்தில் கிடையாது. இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்."

"முதல் விஷயம்: ஒரு உத்தியோகத்துக்கு மனுப் போடுகிற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல நான், பைரவி, ரேகா போன்றவர்கள். நமது சமூகத்தில் உள்ள இளைஞர்களைப் பாதிக்கிற பிரச்னை 'வேலை இல்லாத் திண்டாட்டம்' அவர்களுக்குப் போட்டியாக வசதி படத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களான நாமும் போய் ஏன் நிற்க வேண்டும்? அதை மறுத்தால் உடனே, வசதி படைத்தவர்களான நமது பெற்றோர்கள் அவர்களது டம்ப வாழ்க்கைக்கும் செக்கு மாட்டு வாழ்க்கைக்கும் நம்மைப் பலி கொடுக்கப் பார்க்கிறார்கள். நம்மை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டிய பருவத்தில் நமது சுதந்திரத்தை நாம் முதலில் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தச் சுதந்திரத்திற்குக் காதல், கல்யாணம், பணத்தாசை, நகை மோகம் இவை பகை! தாங்கள் எந்த அளவுக்குச் சுதந்திரமானவர்களோ அந்த அளவுக்குச் சுயகட்டுப்பாடு உடையவர்கள்..."

வாணி சொல்வதை நான் வெகுவாக ரசித்தாலும் எனக்குக் குழப்பமாக இருந்தது. என் குழப்பத்தை அறிந்து வாணி மேலும் விளக்கினாள்; "கல்யாணம் செய்து கொள்கிறவர்கள் பற்றியோ, குழந்தை குட்டிகளைப் பெத்துக் கிட்டு வாழறவங்களைப் பத்தியோ இப்போ நாம்

பேசவில்லை. நாங்கள் 'காதல்' என்கிற பெயரில் இந்தச் சமூகத்தில் நிலவுகிற பைத்தியக்காரத்தனத்தையும் 'கல்யாணம்' என்கிற பெயரில் நடக்கிற தொழுவ வாழ்க்கையையும்தான் மறுக்கிறோம். தனிமனித, சமூகக் கடமைகளை நாங்கள் மறுக்கவே இல்லை; அடிமைப்படுகிற உத்தியோகத்தைத் தான் மறுக்கிறோமே தவிர, மேன்மை தருகிற உழைப்பை நாங்கள் மறுக்கவில்லை. எங்கள் சுதந்திரத்தின், நாங்கள் செய்கிற கடமைகளின், எங்கள் உழைப்பின் அனுபவ பூர்வமான பலனே இந்த வாழ்க்கை முறை! நாமெல்லாம் ஒன்று கூடிச் செய்வதற்கு இந்தச் சமூகத்தில் நிறையக் காரியங்கள் இருக்கின்றன."

வாணி தோட்டத்தில் உட்கார்ந்திருந்த எங்கள் அனைவருக்கும் காபி கொண்டுவர உள்ளே போனாள். அவளுக்கு உதவி செய்வதற்காக ரேகாவும் பின்னால் ஓடினாள். அந்த நேரத்தில் வாணியைப் பற்றியும் ரேகாவைப் பற்றியும் எனக்குச் சொன்னாள் மாலா.

"ரேகாவின் அப்பா ஒரு போலீஸ் ஆபீசர், வாணி ஓர் அரசியல் பிரமுகரின் மகள். என்னமோ ஒரு வாரியத் தலைவராம். பெரிய ஊழல் பேர்வழி என்று அவளே சொல்லுவாள்."

சாயங்காலம் காபி சாப்பிட்ட பிறகு அவர்களெல்லாம் தோட்ட வேலை செய்தார்கள். அவர்களோடு கலந்து கொண்டு அந்த வேலைகளில் பங்கு பெற்றது எனக்கும் சந்தோஷமாக இருந்தது. ஒரு பகற்பொழுது பூராவும் இவர்களோடு கழித்து விட்டேன். சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பவேண்டும். போகும்போது மாலாவும் என்னுடன் வந்து இந்தப் பகல் பொழுதை இவளோடு தான் கழித்த மாதிரி எஞ்சிய இரவு நேரத்தை இவள் என்னுடன் வந்து, அம்மாவையும் சந்தித்து அங்கே கழிப்பாளானால் எவ்வளவு நிறைவாக இருக்கும்! என்று எண்ணமிட்டு அந்த யோசனையை மாலாவிடம் தெரிவிக்கிறேன். அவளும் உடனே ஒப்புக் கொள்கிறாள். ஆனால் அதிகாலையிலேயே புறப்பட்டு வந்துவிட வேண்டுமாம். நாளைக்குக் காலையில்

குழந்தைகளுக்கு வகுப்பு எடுக்கிற வேலை மாலாவுடையதாம்.

மாலை ஆறுமணிக்கு மாலாவும் நானும் புறப்பட்டோம். அங்கிருந்த அனைவரோடும் இவ்வளவு சீக்கிரத்தில் இத்தகையதொரு ஆழமான சிநேகிதம் ஏற்பட்டுவிடும் என்று நான் இங்கே வரும்பொழுது நினைக்கவில்லை. என்னைத் தங்கள் கோஷ்டியில் ஒருத்தியாகச் சேர்த்துக் கொண்டு விட்டவர்கள் போல் அவர்கள் ஒவ்வொருவரும் என்னிடம், "நீங்கள் அடிக்கடி வரவேண்டும்" என்று வேண்டிக் கொள்கிறார்கள். நான் மட்டும் அல்ல; என் அம்மா, அக்கா, கிச்சு எல்லோரும் என்னுடன் வந்து இவர்களைப் பார்க்க வேண்டும். இவர்களோடு பழகி, இவர்களது பண்புகளைப் பாராட்டவாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொள்கிறேன்.

அப்பாவின் டைரியிலிருந்து அகஸ்மாத்தாகக் கிடைத்த அந்த போட்டோவினால் அல்லவா இவ்வளவும் நேர்ந்தது! இவர்களைத் தெரிந்துகொண்டதும், இந்த அக்காவின் மூலம் இவர்களின் நட்பு கிடைத்ததும் என் வாழ்க்கையில் மிகவும் அர்த்தமுள்ள விஷயம் என்று தோன்றுகிறது.

அம்மாவிடமும் அக்காவிடமும் நான் சொன்னது போல் இந்த மாலா அக்காவைத் தேடிப் பிடித்துக் கையோடு வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வருகிற பொழுது ஸ்கூட்டர் பயணம் காற்றில் மிதப்பது போல் இருக்கிறது!

*****

# 4

நான் மாலாவை அழைத்துக் கொண்டு வருவேன் என்று எதிர்பார்த்தவர்களே போல் வீட்டில் அனைவரும் காத்திருந்தனர்.

ஹொலில் இருந்து அம்மா, அக்கா, கிச்சு மூவரும் வெளியில் ஓடிவந்து எங்களை வரவேற்றனர். அம்மா, மாலாவைத் தழுவிக் கொண்டு உணர்ச்சி மேலிட, "எங்களையெல்லாம் மறந்துட்டியாடி... உன்னை நாங்கள் நினைக்காத நேரமில்லை. எங்கேயோ பகவான் உன்னை சௌக்கியமா வச்சிருப்பார்ங்கற நம்பிக்கையிலே இருந்தோம். இவ்வளவு காலமா நீ பட்டணத்திலேதானா இருந்தே. வேறெங்கேயாவது போயிருந்தியா...?" என்றெல்லாம் வரிசையாகக் கேட்டவாறே அவளை அழைத்துக் கொண்டு வந்து கூட்டத்தில் உட்கார வைத்துச் சற்றுத் தள்ளி நின்று அவளைத் தீர்க்கமாக ஒரு முறை பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டாள்: மாலாவின் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தாள் அம்மா.

பெரியக்காவும் மாலாவும் மௌனமாக ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டு, அடிக்கடி புன்னகை செய்தவாறு பழைய இளமைக்கால நினைவுகளில் லயிக்கின்றனர். இந்த மாலா அக்கா, பெரியக்காவைவிடச் சில மாதங்களே மூத்தவளாக இருப்பாள்.

"நீங்க எனக்கு அக்கான்னு தெரியாமலே நான் உங்களுக்கு ரசிகன். இப்போதுகூட டி.வி.யிலே ஒரு தொடர் நாடகம் வராதே... பார்த்திண்டிருக்கேன். ரொம்ப போஷா நடிக்கிறேள்..."

மாலாவின் பார்வை கூடத்தில் இருந்த அப்பாவின் படத்தில் பதிகிறது. எழுந்து சென்று, படத்தருகே நின்று கூர்ந்து பார்க்கிறாள்.

"ஏதோ கொஞ்ச காலமாவது எனக்கு அப்பா இல்லாத குறையே தெரியாமல் என் மீது அன்பு காட்டிய அப்பா...!

அவர் எவ்வளவோ நல்லுபதேசங்கள் எனக்குச் செய்திருக்கிறார். இப்போதுகூட அடிக்கடி நான் உரிய நேரங்களில் அவரது அந்த வார்த்தைகளை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.”

அப்பா அடிக்கடி சொல்லுவார்: "பெண்ணாகப் பிறந்துட்டமேன்னு தாழ்வுணர்ச்சி கொள்ளக்கூடாது; தாணிக்கோணிக் குறுகி ஒதுங்கப்படாது; அநாவசியமா வெட்கப்படக்கூடாது. ஒரு பெண்ணைப் பார்த்த மாத்திரத்திலே புதிய நம்பிக்கை வரணும்" - என்று அப்பா சொல்லுவது மாதிரியே சொல்லிக் காட்டினாள் மாலா.

பெரியக்கா என்னை ஆச்சரியத்துடன் பார்க்கிறாள்.

அவள் பார்வையிலிருந்து அவள் என்னிடம் சொல்வது எனக்குப் புரிகிறது. “அடியே! இவள் உன்னை மாதிரியே அப்பாவை ஞாபகம் வச்சிண்டிருக்காள்...!"

அப்பாவின் இந்தப் படம் இருக்க வேண்டிய இடம் அந்த ஆசிரமம் என்று நினைத்துக் கொள்கிறேன். அங்கே, அந்த ஆசிரமத்தின் முகப்பில் ஒரு படம் மாட்டப் பட்டிருந்ததே, ரோஜா மலரை மார்பில் அணிந்த ஜவஹர்லால் நேருவின் அழகான படம் - இப்போது நினைவுக்கு வருகிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு சிறந்த தந்தை! அவர் தமது மகளுக்கு எழுதிய கடிதங்களை தான் அப்பாவின் லைப்ரரியில்தான் படித்தேன்... அது என் அப்பாவின் மூலம் ஒரு அப்பா என்னிடம் பேசுவதுபோல் இருந்தது. அப்பாவின் சிறப்பே எங்களையெல்லாம் மதித்துப் பெரிய பெரிய விஷயங்களையெல்லாம் எங்களுடன் பேசிப் பகிர்ந்து கொண்டதுதான்.

பெரியக்காவுக்கும் அம்மாவுக்கும்தான் அவர் பேச்சு உகப்பதில்லை; அக்காவுக்கு எந்த விஷயமும் அச்சில் பார்த்தால்தான் - அதுவும் புதுப்புதுக் தகவல்களைத் தருகிற - தாற்காலிகக் கவர்ச்சியுடைய சஞ்சிகைகளாக

இருக்க வேண்டும்; எதிலும் ஒரு 'திரில்' வேண்டும் என்பாள்.

அம்மாவுக்கு அப்பா செய்கிற உபதேசங்கள் ஏதும் ஏறாது. மைக்குக்கு முன்னால் மாலை போட்டுக்கொண்டு உபந்யாசம் பண்ணுகிற கனபாடிகளின் வார்த்தைகளைத் தான் அம்மா பதிப்பாள்.

ஆனால், இப்போது இந்த மாலா அக்கா வந்தவுடன் எல்லாரும் பேசி உருகுகிற பொது விஷயமாக அப்பாவே ஆகிவிட்டார். இந்த அம்மா எவ்வளவு பொய்கள் சொல்லுகிறாள்! அப்பா சொல்கிற வார்த்தைகள் இப்போதும் என் காதில் ஒலிக்கின்றன; "பொய்களே சின்னத் தனமானவை, அற்பர்கள் பொய்யையே விரும்பிப் பொய் பேசுவதில் மகிழ்ச்சியடைவார்கள்."

ஆனால் அப்பா சொன்ன இன்னொரு விஷயத்தை நாங்கள் அடிக்கடி நினைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர் சொல்லுவார்:

- "யார் என்ன சொன்ன போதிலும் உன் அறிவுக்கும் மனத்துக்கும் சரி என்று பட்டதைப் பயப்படாமல் செய்!"

நான் மாலா அக்காவிடம் கேட்கிறேன்: "நீங்கள் மிகவும் மதிக்கிற நம் அப்பாவின் சிறப்பு என்ன?"

"அவர் பெண்களைப் பெற்றுவிட்டது மட்டுமல்லாமல், பெண்களைப் பெரிதாக மதித்தார். பாரதியார் அவாவிய புதுமைப் பெண்ணை அவர் பார்க்க விரும்பினார், இது தான் அவருடைய சிறப்பு என்று நான் நினைக்கிறேன்" என்றாள் மாலா.

இந்த இடத்தில் அம்மா நெற்றியைச் சுளித்துக் கொண்டாள்: "ஆமாம்... உங்க அப்பாவும், பாரதியாரும் இதைத்தான் உங்களுக்குக் கத்துக் குடுத்தா! குழாயும் குருத்தாவும் போட்டுண்டு குதிரை மாதிரி அலையச் சொன்னாளாக்கும்...? நீயே சொல்லுடி அம்மா..." என்று

புடவை அணிந்து கொண்டிருந்த மாலாவைப் பாராட்டி நியாயம் கேட்டாள் அம்மா.

"...நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணும் நற்குடிப்

பெண்ணின் குணங்களாம்..."

என்ற பாடல் வரிகளை நினைத்துக் கொண்டேன்.

கூடத்தில் கிச்சு டி.வி. பார்த்துக் கொண்டிருக்கிறான். அம்மாவும் எங்கள் அப்பா புகழ்ச்சியைத் தாங்க முடியாமலோ, டி.வி. நிகழ்ச்சி பார்க்கிற ஆர்வத்தாலோ எழுந்து போகிறாள்.

நாங்கள் மூவரும் என்னென்னவோ பேசித் தீர்த்துக் கொள்கிறோம். பெரியக்கா இன்னும் கொஞ்ச நாழிக்கெல்லாம் படுக்கப் போய்விடுவாள். நான் எங்கே தூங்கப் போகிறேன்? இரவெல்லாம் இவளுடன் பேசிக் கொண்டிருப்பேன் என்று தோன்றுகிறது.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு டி.வி யில் ஏதோ முக்கியமான காட்சி இருப்பதாகக் கிச்சு சொன்னான். நாங்கள் எல்லோரும் கூடத்தில் போய் உட்கார்ந்து கொண்டோம்.

டி.வி. திரையில் பூமிக் கோளம் சுழல்கிறது... கையில் ஒற்றைத் திகிரி கொண்டு ஏழுலகாளும் ஒருவன் சுழற்றி விட்ட சக்கரம் போல்... சுழன்று நம்மைக் கடந்து செல்கிறது. ஒரு குளோப் எப்போதுமே என் மனத்தைப் பரவசப் படுத்துகிறது. அப்பாவின் லைப்ரரியில் ஒரு குளோப் உண்டு. நான் மூன்றாம் வகுப்பில் படிக்கும்போது அப்பா பூகோள ஆசிரியராக மாறி எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக அதை வாங்கிக் கொண்டு வந்தபோது இந்த மாலா கூட இருந்தாள்!

அப்போது ஏழு வயதுச் சிறுமியான என்னுள் எழுந்த பரவசம் இப்போதும் பசுமை மாறாமல் இருக்கிறது.

டி.வி.யில் வானிலை அறிக்கை... இன்ஸாட்-பி இன்று பிற்பகல் நேரத்தில் படம்பிடித்த நிஜமான பூவுலகம்! இது 'குளோப்' அல்ல. இதில் எங்கோ ஒரு இடத்தில் இன்று மாலையில் இது படம் பிடித்தபோது நான் மாலாவோடு ஆசிரமத் தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்தேன். துல்லியமாகத் தெரியாவிட்டாலும் நிச்சயமாக நாம் இதில் எங்கோ இருக்கிறோம் என்பதை இந்த பூமிப்பந்து உணர்த்துகிறது!

ஆங்காங்கே திட்டுத் திட்டாகக் கனத்தும் சல்லாத் திரை போல் திரைத்து படர்ந்தும் இருக்கிற வெண்பஞ்சு மேகங்கள் சூழ நமது புவிக்கோளைப் படமாகப் பார்க்கிற பொழுது ஏற்படும் உணர்ச்சிக்கு என்ன பெயர்? வியப்பா? பிரமிப்பா! லோகாயத கர்வமா! மானுட நேசமா! இந்த மாபெரும் உண்மையின் முன் மனிதனை எளிதிலும் எளிதாக உணர வைக்கிற பணிவா! கடவுளையே இதன் வடிவில் காணும் இறை நம்பிக்கையா! இந்தப் பூமி நமக்கே சொந்தம் என்கிற பெருமிதமா! இப்படிப் பல உறவுகளுடன் கூடிய உணர்வும் விஞ்ஞானமாய் வேதாந்தமாய் - நானும் இந்தப் பூமியும் வேறு வேறு அல்ல என்கிற அத்வைதமாய்...

சரி, நம் ஊரில் மழை எப்படி என்று பார்ப்போம். இங்கே மழை மேகங்களே காணோம்; ஆயினும் என்ன? உலகமே மழை அற்றுப் போய் விடவில்லை. அமிர்தவர்ஷமாகப் பூமியின் மீது எப்போதும் எங்கோ மழை பொழிந்து கொண்டேதான் இருக்கிறது என்பதும் தெரிகிறது.

இதோ கண்முன் தெரிகிற இந்தப் பூமிக்கோளம் அனைத்து ஜீவராசிகளையும் சுமந்து கொண்டு எல்லையில்லா மோனப் பெருவெளியில் கற்பனைக்கு எட்டாத வேகத்தில் ஆனால் ஒரு கணக்கோடு, ஒரு கணமும் பிறழாத நியதியோடு இயங்கிக் கொண்டே இருக்கிறது. இதில் ஏதோ ஒரு புள்ளியில்தான் நான், எனது என்று கொள்ளும் அனைத்தும் நிறைந்துள்ளன.

பிரபஞ்ச வெளியில் உயரத்திலிருந்து இந்தப் புவிக் கோளைத் தனியாகப் பார்க்கும்போது, ஓ! இந்தப் பூமிதான்

எவ்வளவு சாந்தமும் எத்தகைய எழிலும் இடையறாத உயிர்ப்பும் கொண்டு இயங்குகிறது! இது ஒரு பொய்யா? மாயையா?

இதுவன்றோ சத்தியம்! இதுவன்றோ சாசுவதம்! இதன் மீது பொய்ம்மையின், அழிவின் கறை படிந்து விடக்கூடிய ஆபத்தும் இருக்கிறதாமே!

இந்தப் புண்ணிய பூமிக்கோளின் மீது பகைமையும் போர் வெறியும் ஆதிக்கப் பேராசையும், மனிதர்களை அடிமைப் புழுக்கள் ஆக்குகிற அக்கிரமங்களும் சுரண்டலும், கடவுளையும் மனிதனையும் ஒட்டு மொத்தமாக அழித்துப் போடுகிற அபசாரக் கலைகளும் வியாபார - லாப வேட்கையும், வறுமைக் கொடுமைகளும், நோயும் மண்டி, வளர்ந்து கொதித்துக் கொப்பளித்துக் கொண்டிருப்பது ஒரு அவமான கரமான யதார்த்தம்...

'மாகாளி பராசக்திக்கு ஓர வஞ்சனை ஏன்? எல்லாத் திக்குகளிலும் அவளது எழிற்பார்வை படுகின்ற நாள் எந்நாள்?' - என்றெல்லாம் அந்தப் புவிக்கோளின் படம் அங்கு நிலவிய மௌனத்தில் என்னை யோசிக்க வைக்கிறது.

நம் ஊர்ப்பக்கம் மேகத்திரள் ஏதும் காணப்படாததால் இங்கெல்லாம் மழை இருக்காது. தெளிந்த நீலவானம் காணப்படும்.

டி.வி.யில் அடுத்த நிகழ்ச்சி கிச்சு சொன்னானே, அந்த முக்கியமான நிகழ்ச்சி.

யுனைடெட் நேஷன்ஸ் புரொடக்ஷன்... படத்தின் பெயர் 'தி இம்ப்பாஸிபிள் ட்ரீம்' ( The Impossible dream )

"ஓ! யுனைடெட் நேஷன்ஸ் படங்களா...! இவர்களுடைய படைப்புக்கள் மனிதர்களின் வாழ்க்கைப் பிரச்னையை மையமாகக் கொண்டிருக்கும்" என்றாள் மாலா.

கார்ட்டூன் படம்... உரையாடல் ஏதும் கிடையாதென்பதால் மொழிப் பிரச்னைக்கே இடமில்லை. ஒலி உண்டு என்பதுபோல் ஒரு டைம்பீஸ் கடிகாரத்தில் அலாரம் அலறுகிறது.

ஒரு படுக்கை அறை, ஓர் ஆண்-ஆண் என்றாலே முரட்டு மனிதன்தானே- தெரிகிறான். வீட்டுத் தலைவன், தூக்கத்தைக் கடிகார சத்தம் கெடுக்கிறது. சோம்பலுடன் அந்தக் கடிகாரத்தைக் கவிழ்த்து வைத்துவிட்டுச் சௌகரியமாகத் திரும்பிப் படுத்துத் தூங்குகிறான்.

அடுத்த காட்சி சமையலறை.

அங்கே ஒரு பெண்! அவன் மனைவி. காலை உணவு தயாரிப்பதில் முனைந்திருக்கிறாள். மெலிந்த உடலும் ஒரு தேவதை போன்று சாந்த உணர்ச்சியும், சோபைமங்கிய முகமும் கொண்ட அந்தப் பெண், பெண்ணினத்தின் பிரதிநிதிபோல் தோன்றுகிறாள்.

சமையலறைக் காரியங்களில் முனைந்திருக்கிறபோது கைக்குழந்தை வீரிடுகிற சத்தம் கேட்கிறது. ஓடிப்போய்க் குழந்தையைக் கவனிக்கிறாள்.

குழந்தையை அமர்த்தி விட்டுத் திரும்பச் சமையலறைக்குள் வருகிறாள்; அடுப்பில் உள்ள பாத்திரம் புகைகிறது...

பதைபதைப்புடன் அதை இறக்கி வைத்து, வேறு பாத்திரத்தை அடுப்பில் ஏற்றுகிறாள். ஒரு கையால் இதைச் செய்து கொண்டே மறு கையால் பக்கத்து அலமாரியிலிருக்கும் டப்பாவை எடுத்துத் தயாரிக்கும் உணவுக்குச் சுவை கூட்டுகிறாள். கார்ட்டூன் படமாதலால் இந்தக் காட்சி அமைப்பு 'பளீ’ரென்று மனதில் படியும்படி அமைகிறது.

ஒரே சமயத்தில் நாலு வேலைகளை அவள் செய்கிறாள் என்பதைக் காட்ட - திசைக்கொன்றாய் இருக்கும் பொருட்களையும் பாத்திரங்களையும் எடுப்பதற்காக அவன் இருந்த இடத்திலிருந்தே கையை நீட்டுகிறாள். அவள்

கைகள் அறையின் மறுகோடி வரை நீண்டு பொருட்களை எடுக்கின்றன.

குழந்தையின் சத்தத்தில் விழித்த கணவன் குழந்தையை எடுத்துக் கொஞ்சுகிறான். அவள் காலை உணவருந்த மேஜையைத் தயார் செய்கிறாள். பன்னிரண்டு வயதுள்ள ஒரு பையன், எட்டு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் இருவரும் அறையில் விளையாடிக் குப்பை போடுகிறார்கள். அந்தப் புருஷன் பையனை அழைத்துச் சாப்பாட்டு மேஜையில் பக்கத்தில் அமர்த்திக் கொள்கிறான். அந்தத் தாய் தனக்கு உதவியாக மகளிடம் தட்டுக்களையும் கோப்பைகளையும் கொடுத்து மேஜைமேல் வைக்கச் சொல்கிறாள். அந்தச் சிறுமி எல்லாவற்றையும் போட்டு உடைத்து விடுகிறது.

பதற்றத்துடன் அந்தத் தாய் பம்பரம் போல் நாலு புறமும் ஓடி வேறு தட்டுக்களையும் புதிய கோப்பைகளையும் அள்ளிக் கொண்டுவந்து வைத்து மேஜை மேல் எல்லாருக்கும் உணவு பரிமாறுகிறாள்.

அப்பாவின் மடியில் அமர்ந்திருந்த குழந்தை நெளிகிறது. அவர் பொறுமையிழந்து மடியிலிருந்த குழந்தையைத் தாறுமாறாக இறக்கிக் கீழே விடுகிறார். குழந்தை தரையில் அசுத்தம் செய்து விடுகிறது.

உடனே ஒரே பாய்ச்சலில் கையில் ஒரு ஸ்டூலும் சுத்தம் செய்யும் துணியுமாய் அங்கே வருகிற தாய் குழந்தைக்கான பணிவிடைகளையும் செய்து, தரையைச் சுத்தமும் செய்கிறாள்.

அதற்குள் அப்பாவுக்கும் மகனுக்கும் அவசரம்! கோப்பைகளை ஸ்பூனால் தட்டி ஓசை எழுப்புகிறார்கள்: ஈரக்கையைத் துடைத்தபடி உணவு பரிமாற ஓடி வருகிறாள்.

அவளது நீண்ட கையில் ஒன்று குழந்தைக்கும் மற்றொன்று புருஷனுக்கும் பணிவிடை செய்கின்றன. பிறகு அவள் அவசர அவசரமாகச் சாப்பிடுகிறாள். வீட்டையும்

பொருட்களையும் சுத்தம் செய்து அதனதன் இடத்தில் சரியாக வைக்கிறாள். குழந்தைகளுக்குத் தலைவாருகிறாள். சீருடை அணிவிக்கிறாள். குழந்தைகளைப் பள்ளிக் கூடத்துக்குத் தயார் செய்துவிட்டு அவசர அவசரமாகத் தானும் அலங்காரம் செய்து கொள்கிறாள். கைக்குழந்தைக்கு உடை அணிவித்து, குழந்தைக்குத் தேவையான பொருட்களைக் கூடையில் எடுத்து வைத்துக்கொண்டு - இதற்கிடையில் கணவனுக்கு விடை கொடுத்து அனுப்புகிறாள்.

வீட்டைப் பூட்டிக்கொண்டு குழந்தைகளுடன், புத்தகப் பைகளையும் குழந்தையின் சாமான்கள் வைத்த கூடையையும் சேர்த்துக் கைக்குழந்தையையும் அள்ளிக்கொண்டு வேக வேகமாக பஸ் ஸ்டாண்டை நோக்கி ஓடுகிறாள்.

பஸ் ஸ்டாண்டில் பெரிய க்யூ வரிசையின் கடைசியில் குழந்தைகளுடன் நிற்கிறாள்.

ஜனங்களை வழிய வழிய ஏற்றிக்கொண்டு ஒரு பஸ் வருகிறது. பயணிகளோடு பெரிய குழந்தைகளை ஏற்றிவிட்டு அவளும் ஏறிவிடுகிறாள். பஸ் புறப்படுகிறது. ஐயையோ கைக்குழந்தை நழுவி பிளாட்பாரத்தில் தனித்து நிற்கிறது!

ஒரு கணத்தில் பஸ்ஸிற்குள் இருந்து அவளது கை ஜன்னல் வழியே நீண்டு குழந்தையைப் பத்திரமாக எடுத்துக் கொள்கிறது.

அடுத்த காட்சியில் பஸ் ஒரு தெருவில் நிற்கிறது. கைக் குழந்தையுடன் இறங்கி நடந்து ஒரு குழந்தைகள் காப்பகத்தின் முன்னே நின்று 'காலிங் பெல்’லை அழுத்துகிறாள். மணி அடிக்கிறது. கதவு திறக்கிறது. ஒரு மூதாட்டி வெளிப்படுகிறாள்.

அந்த மூதாட்டியிடம் குழந்தையையும் கூடையையும் ஒப்படைத்து விட்டுத் தான் பணிபுரியும் இடத்துக்கு

அவசரமாக விரைகிறாள்.

அடுத்த காட்சியில் அவள் கணவன்.

அவன் ஒரு கட்டிடத் தொழிலாளி. தரையிலிருந்து இரண்டுமாடி. உயரத்தில் ஒரு பாரந்தூக்கியை இயக்கிய படி 'கிரேனின்' மீது அமர்ந்திருக்கிறான். கீழே அகலமான வீதி.

கவர்ச்சியாக உடை அணிந்த ஒருத்தி நடந்து போய்க் கொண்டிருக்கிறாள். அந்தக் கணவன் கிரேனில் இருந்த படியே அந்தப் பெண்ணை வேடிக்கை பார்த்து விசிலடிக்கிறான்.

அவள் தன் போக்கில் அவனைக் கடந்து போகிறாள்.

அதே சமயம்

அவன் மனைவி உடைகள் தயாரிக்கும் ஒரு தொழிற் சாலையில் கண்ணிமைக்கும் நேரம்கூடத் தலைநிமிர முடியாதவளாகத் தையல் மிஷினின் முன் அமர்ந்து உடைகளைத் தைத்துக் கொண்டிருக்கிறாள்.

தொழிற்சாலை மேற்பார்வையாளர் ஒருவர் வந்து இதற்கிடையே ஜபர்தஸ்து பண்ணுகிறார். அவள் தைக்கும் மிஷின் தலைதெறிக்கும் வேகத்தில் இயங்குகிறது.

ஒரு பக்கம் தைத்த உடைகளின் அடுக்கு இருமடங்காக உயர்கிறது. கடினமான உழைப்பில் அந்தப் பெண்ணின் கண்களில் களைப்பும் சோர்வும் கனக்கிறபோது கடிகாரம் மணி ஐந்து காட்டுகிறது.

திரையில் ஓர் ஆணின் கையும் பெண்ணின் கையும் ஏந்தி நிற்கின்றன. ஆணின் கையில் இரண்டு நாணயங்கள் விழுகின்றன. பெண்ணின் கையில் ஓர் ஒற்றை நாணயம் விழுகிறது.

கையில் காசு விழுந்தவுடன் அந்தக் கணவன் மதுக் கடையை நோக்கிப் போகிறான்...

அந்த மனைவியோ காலையில் வேலைக்குப் போகும் போதிருந்த அதே அவசரத்துடன் ஓட்டமும் நடையுமாகக் குழந்தைகள் காப்பகத்துக்குப் போகிறாள்... வரும் வழியில் வீட்டுக்கு வாங்க வேண்டிய பொருட்கள் நினைவுக்குவர பல கடைகளில் நுழைந்து தேவையானவற்றை வாங்கிக் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வருகிறாள்.

ஒரு கையில் குழந்தை; மற்றொரு கையிலும் தோளிலும் கனக்கும் சுமை; பஸ் ஸ்டாண்டில் கூட்ட நெரிசல்...

ஜனங்களை வழிய வழிய ஏற்றிக் கொண்டு வரும் ஒரு பஸ், இந்த முறை குழந்தையுடன் அவள் பஸ்ஸில் முண்டியடித்து ஏறிவிடுகிறாள்... ஆனால் அவளது பொருட்கள் நிறைந்த கூடை பஸ் ஸ்டாண்டில் தங்கி விடுகிறது.

பஸ் புறப்படும்போது அவளது கரம் வெளியே நீண்டு வந்து கூடையை ஜன்னல் வழியாக எடுத்துக் கொள்கிறது.

அடுத்த காட்சி வீடு; சமையலறை, இரவு சாப்பாட்டுக்கான வேலைகள்... வாஷிங் மெஷினில் போட்ட துணிகளை துவைக்கிறாள். காலையில் சமைத்து சாப்பிட்ட பாத்திரங்களைத் துலக்குகிறாள். குழந்தைக்குப் பாலூட்டுகிறாள்.

பெரிய குழந்தைகள் இரண்டும் குப்பைக் காகிதங்களைக் கிழித்துப் போட்டும் பொருட்களை வாரியிறைத்தும் விளையாடுகின்றன.

குடும்பத் தலைவர் குடிபோதையில் தள்ளாடிக் கொண்டு வருகிறார்...

வாசற்படியருகே வந்து அலங்கோலமாய் நிற்கும் அவனை ஒழுங்குபடுத்தி உள்ளே அழைத்துச் செல்கிறாள் அந்த மனைவி.

கணவனுக்கும் குழந்தைகளுக்கும் உணவு பரிமாறுகிறாள்...

கணவன் மது அருந்திக்கொண்டே சாப்பிடுகிறான்...

உணவுக்குப் பிறகு பெரிய குழந்தைகள் தூங்கப் போய் விடுகிறார்கள்.

குடிபோதையில் அந்தப் புருஷன் டி.வி. பார்த்துக் கொண்டிருக்கிறான். திரையில் ஒருத்தியின் அரை நிர்வாணத் தோற்றம் பாடிக்கொண்டு ஆடுகிறது...

குடும்பத் தலைவி தன் வேலைகளில் முனைந்திருக்கிறாள்.

சாப்பிட்ட மேசையைச் சுத்தம் செய்துவிட்டு மறுநாள் குழந்தைகள் அணிய வேண்டிய துணிகளுக்கு இஸ்திரி போடுகிறாள்.

தன் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுக் கையில் ஒரு நூல்கண்டும் பின்னல் ஊசியுமாக அவளும் வந்து கூடத்தில் அமர்ந்து டி.வி. பார்க்கிறாள்.

இப்போது டி.வி.யில் வேறு ஒரு காட்சி ஆரம்பமாகிறது...

அதில் இவளைப் போலவே ஒரு இளம் பெண்... தன் குழந்தையை முதுகோடு துணியால் சேர்த்துக் கட்டிக் கொண்டு மண்ணைக் கொத்திக் கொண்டிருக்கும் ஒரு உழைப்பாளிப் பெண் அவளோடு சேர்ந்து ஐந்து வயதுக் குழந்தை ஒன்றும் வேலை செய்கிறது.

இவள் புருஷனைப் போன்ற ஒரு முரட்டு மனிதன் டிராக்டரை ஓட்டிக் கொண்டு அவள் அருகே வந்து அவளை மிரட்டுகிறான். அவள் மௌனமாகக் குனிந்த தலையுடன் வேலையில் ஈடுபடுகிறாள்.

- அந்தக் குடிகாரக் கணவனுக்கு இந்தப் படம் அலுப்புத் தட்டுகிறது. மனைவி அதில் லயித்திருப்பதை மதிக்காமலேயே டி.வி.யை நிறுத்திவிட்டுப் போய்ப் படுத்துக் கொள்கிறான்...

அடுத்த காட்சி; படுக்கையறை.

டி.வி.யில் கண்ட அரைநிர்வாண அழகியின் ஆட்டமும் இசையும் அவன் தலையைக் கிறுகிறுக்க வைக்க அப்படியே அவன் தூங்கிப் போகிறான்.

உழைத்துக் களைத்த அலுப்பில் அந்தக் குடும்பத் தலைவியும் கண்ணயர்கிறாள். அப்போது ஒரு கனவு மலர்கிறது.

அந்தக் கனவில் அவள் இளமைத் தோற்றத்தில் மிகவும் அழகியாகக் காட்சியளிக்கிறாள். அவள் கணவனும் இளமைப் பொலிவோடு மாறாத காதலுடன் திகழ்கிறான் அதே நிலையில் அவர்களுக்கு மூன்று குழந்தைகளும் பிறந்து விடுகின்றன; காதலும் இளமையும் அப்படியே மாறாமல் இருக்கிறது. கனவு தானே?

அவளது காதல் கணவன் வீட்டு நிர்வாகத்திலும் குழந்தைகளை வளர்ப்பதிலும் அளவோடு சமபங்கு ஏற்கிறான். அவள் சமையலறையில் வேலை செய்து கொண்டிருக்கும் போது அவன் கைக்குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறான்.

அவளது குழந்தைகள் சமர்த்தாக, குப்பைக் கூளங்கள் போடாமல் விளையாட்டுச் சாமான்களை வரிசையாக அடுக்கி வைத்துக் கொள்கின்றன. அந்தத் தாய் செய்யும் வேலைகளில் உதவியாகக் குழந்தைகளும் பங்கு பெறுகின்றன.

அந்தக் குடும்பத் தலைவன் மதுக்கடையைத் திரும்பிப் பார்க்காமல் நடக்கிறான்.

வீட்டுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் வாங்கிச் சுமந்துகொண்டு வருகிறான்.

இப்படியாக ஒரு குடும்ப ஸ்திரீ எப்படி எப்படியெல்லாம் ஒரு லட்சியக் குடும்பத்தை, கணவனை, குழந்தைகளைக் கற்பனை செய்வாளோ அவ்விதமான ஒரு கனவில் அவள் மிதக்கிறாள்.

- படத்தின் ஆரம்பத்தின்போது அடித்ததே அதே அலாரம் கடிகாரம் அலறுகிறது.

கனவு கலைந்து எழுந்து கடமைகள் என்னும் நுகத்தடியில் மறுபடியும் அந்தக் குடும்பத் தலைவி தன்னை மாட்டிக் கொள்கிறாள்.

படம் முடிகிறவரை அமைதியாக இருந்த நாங்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறோம்.

பெரியக்கா மிகவும் சந்தோஷத்துடன் சொன்னாள்: "ஒரு பத்து நிமிஷ கார்ட்டூன் படத்தில் எவ்வளவு விஷயங்களை அற்புதமாகச் சொல்லிவிட்டார்கள்! அந்தப் பெண் படுகிறபாடு படம் பார்க்கிற நம்மையெல்லாம் களைப்படையச் செய்து விடுகிறது, இல்லையா?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

"இந்தப் படத்தை எங்கள் சுரேஷ் பார்க்க வேண்டும்" என்று தங்கள் ஆசிரமத்தைச் சேர்ந்த ஓவியரை நினைத்துக் கொண்டு மாலாவும் அந்தப் படத்தைத் தான் வெகுவாக ரசித்ததை வெளியிடுகிறாள்.

“அது சரி... இந்தப் படத்திற்கு ஏன் 'இம்ப்பாஸிபிள் டிரீம்’ என்று பெயர் வைத்திருக்கிறார்கள்? அப்படி என்ன நிறைவேற்ற முடியாத கனவு அவள் காண்கிறாள்?" என்று நான் இரண்டு அக்காமார்களையும் பார்த்துக் கேட்கிறேன்.

"லோகம் முழுக்கப் பெண் ஜன்மங்களின் நிலைமை ஒரே மாதிரி தாண்டியம்மா இருக்கு" என்று ஒரு பெரு மூச்சுடன் சொல்லிக்கொண்டு அம்மா எழுந்து போகிறாள்.

அவளுக்கு டி.வி. பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்க முடியுமா என்ன? அடிக்கடி வேலை இருக்குமே... குடும்பத் தலைவி ஆயிற்றே!

நமது இந்தியச் சூழ்நிலையில் குடும்ப ஸ்திரீகளுக்கு மேற்கத்திய நாடுகளில் இருப்பதைப்போல் நவீன, யந்திர தொழில் நுட்ப சாதனங்களின் உதவி கிடையாது. அவர்கள்

நாள் முழுவதும் செக்குமாடு மாதிரி உழைக்கிறார்கள். உழைத்துக் களைத்த சோர்வில் சாப்பிடவும் மனமின்றிப் பட்டினி கிடக்கிறார்கள்.

இந்தியப் பெண்கள் என்றால் நமது டி.வி, விளம்பரங்களில் பார்க்கிறீர்களே, அது மாதிரி பெண்கள் என்று நினைத்து விடாதீர்கள்! அதுவும்கூட வெறும் வேஷம். நமது பெண்கள் அனைவருக்கும் இந்த வீட்டிலும் எங்கள் ஹோட்டலிலும் இருக்கிற வசதிகள் இருக்குமென்றால் இதைவிட சொர்க்கம் நமக்குக் கிடையாது - அரைக்க, கரைக்க எல்லாவற்றுக்கும் யந்திரம் உண்டு. நான்கூடத்தான் நிறைய வேலை செய்கிறேன்; ஏன் அம்மாகூடத்தான் நிறைய வேலை செய்கிறாள்.

எனக்கு இந்தப் படத்தில் வருகிற பெண்ணைப் பார்க்கும்போது வருகிற வருத்தம் என்னைப் பற்றியோ என் அம்மாவைப் பற்றியோ இல்லை, இவ்வளவு நவீன வசதிகள் இருக்கும்போது இந்தக் கடமைகளைக் கூடச் செய்யாமல் ஒரு பெண் வேறு என்னதான் செய்வாளாம்?

எல்லா வசதிகளும் உள்ள மேல்தரத்துப் பெண்களும் ஓரளவு வசதிபடைத்த நம்மைப் போன்ற மத்தியதர வர்க்கத்துப் பெண்களும் இந்த அம்மாவைப்போல் ரொம்பச் சலித்துக் கொள்வதைப் பார்க்க எனக்கு எரிச்சல் வருகிறது.

இந்தியாவில் உள்ள பெண்களில் எழுபது சதவிகிதத்தினர் ஒரு குடம் தண்ணீருக்காகப் பத்து மைல் நடக்கிறார்கள்; ஒருவேளை சோறு பொங்க, நாள் முழுவதும் விறகொடிக்கிறார்கள். வாழ்க்கையில் எந்த வசதியும் இல்லாமல், எந்தச் சுகமும் என்னவென்று தெரிவதற்கு முன்னாலேயே இவர்கள் எல்லோரையும் விட அதிகமாகப் பிள்ளைகளை வேறு பெற்றுக் கொள்கிறார்கள்.

கல்வியும் இல்லாத, அறிவும் இல்லாத பெண்கள் வேறு வழியின்றி, கல்யாணம் பண்ணிக் கொள்வதொன்றே கதி என்று நிற்கிறார்கள். கல்யாணம் என்கிற கொடுமைக்கு ஒருத்தி சம்மதித்து விட்ட பிறகு வரதட்சணைக் கொடுமை,

வாழாவெட்டிக் கொடுமை, கைம்பெண் கொடுமை எல்லாவற்றுக்கும் ஆளாக வேண்டியதுதான் விதி. இந்த விதியை மாறுப்பதனால் அல்லவோ இந்த மாலா அக்காவையும் இவளது நண்பர்களையும் லட்சியவாதிகளாக நான் காண்கிறேன்!

சில நிமிடங்களுக்கு முன் பெண்களின் நிலைமைக்காக ரொம்பவும் உருகி உருகிப் படம் காட்டிய அதே டி.வி. திரையில் திடீரென்று கர்ண கடூரமான இசையும் காலையும் கையையும் அலங்கமலங்க உதறிக் கொண்டு ஆடுகிற ஆட்டமும்... என்ன கேலிக் கூத்து? - என்ற எரிச்சல் உணர்ச்சியுடன், "நாம் மாடிக்குப் போகலாம்" என்று மாலா அக்காவைக் கூட்டிக் கொண்டு போகிறேன்.

எனது மனோநிலைக்கும் எண்ண ஓட்டங்களுக்கும் ஒரு விநாடி கூட இந்தக் கண்றாவியைச் சகிக்க முடியாது. ஆனால் அம்மாவுக்கும் கிச்சுவுக்கும் சற்றுமுன் வந்த கார்ட்டூன் படத்தை எப்படி ரசித்தார்களோ அதே மாதிரி இந்தக் கூத்தையும் எப்படித்தான் ரசிக்க முடிகிறதோ!

"இந்த டி.வி.காரன்களுக்கு ஒரு விவஸ்தையும் கிடையாது. கேட்டால் எங்களுடைய நோக்கம் IEE என்பான்கள்" - என்று பொருமியவாறே பார்த்துக் கொண்டிருக்கிறாள் பெரியக்கா.

" IEE -ன்னா?" என்று விளக்கம் கேட்கிறாள் மாலா அக்கா. கிச்சுதான் இதிலெல்லாம் 'எக்ஸ்பர்ட்' ஆயிற்றே! விளக்குகிறான்.

" I -ன்னா இன்ஃபர்மேஷன், E -ன்னா எஜுகேஷன், இன்னொரு E -என்ட்டர்டெயின்மென்ட்...! இப்போ பார்க்கறது என்ட்டர்டெயின்மென்ட்!”

"இந்த விளக்கம் நீ சொல்வதானாலும் சரி, டி.வி.காரன் சொல்வதானாலும் சரி, இந்தக் கடைசி E -'என்லைட் மென்ட்" - அறிவை மேன்மைப்படுத்துதல் என்ற

நோக்கத்தில் இருக்க வேண்டும். நீதான் தொலைக்காட்சி ரசிகன் ஆயிற்றே. 'எதிரொலி'க்கு எழுதிப் போடு" என்று கிச்சுவிடம் சொல்லிவிட்டு நானும் மாலா அக்காவும் மாடியிலுள்ள என் தனியறைக்குப் போகிறோம்.

சற்று முன்னால் பார்த்த அந்த 'இம்ப்பாஸிபிள் டிரீம்' என் மனசை ரொம்பவும் சலனப்படுத்தியிருக்கிறது. அது ஏன் ஒரு 'இம்ப்பாஸிபிள் டிரீம்' ஆக இருக்கவேண்டும்? இந்தப் படத்தைப் பற்றி மாலாவுடன் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டே மிஸ்டர் மணியைப் பற்றி யோசிக்கிறேன்.

மத்தியானம் மாலா வீட்டுத் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது மிஸ்டர் மணியைப் பற்றிச் சொல்ல நினைக்கையில் அவர்கள் எல்லோரும் யாருக்காகக் காத்துக் கொண்டிருந்தார்களோ அந்தக் கோபால் வந்து விட்டார். அதற்குப் பிறகு இப்போது தான் இந்தத் தனி அறையில் அந்தரங்கமாகப் பேசக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

என் அறையில் ஒரு கட்டிலும் ஒரு இரட்டை சோபாவும் இருக்கிறது. மாலா அக்காவுக்குக் கட்டிலில் படுக்கையைத் தட்டிப் போட்டுவிட்டு நான் ஒரு ஜமக்காளமும் தலையணையுமாய் சோபாவில் படுக்கை விரிக்கிறேன். அந்த சோபாவில் தான் படுத்துக் கொள்வதாக மாலா அக்கா சொல்கிறாள். நான் அவளை வற்புறுத்திக் கட்டிலின் மீதுள்ள படுக்கையில் உட்கார வைக்கிறேன்.

கட்டிலில் உட்கார்ந்த பிறகு அந்த அறையை ஆராய்வதுபோல் தீர்க்கமாகப் பார்க்கிறாள் மாலா. இந்த வீட்டில் எங்களோடு வந்து இருப்பது மாலா அக்காவுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்திருப்பது எனக்குப் புரிகிறது.

"நான் பார்ப்பது, படிப்பது, புரிந்து கொள்வது, யோசிப்பது, யோசித்த பின்னர் குழம்புவது இவையெல்லாம் பற்றி மிஸ்டர் மணியிடம் பேசுவது சமீப காலத்தில் அன்றாட

வழக்கமாக ஆகிவிட்டது. மிஸ்டர் மணியைப் பற்றி நான் உங்களிடம் சொல்லவில்லையே. இந்த வீட்டைப் பொறுத்த வரை மணியை எனது 'ஃபியான்ஸி' அதாவது என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற காதலர் என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர் எனக்கு நல்ல நண்பர் மட்டுமே.

"அம்மாவோட சிநேகிதியாம்... செல்லம்னு பேரு. மகன் மணிக்கு என்னைப் பெண் பார்க்கறதுக்காக, இங்கே வந்தார். அவரைப் பார்த்தபோது பெண் பார்க்க வந்திருக்கிற மாப்பிள்ளைபோல் எனக்குத் தோணலை, ஏதோ அம்மாவோட சிநேகிதி வீட்டுக்கு வந்து அவர் குடும்பத்தோடு நட்பு ஏற்படுத்திக்கிற முறையிலேதான் எல்லாம் நடந்தது.”

"பெரியவர்கள் விரும்புகிற கல்யாணம்ங்கிற விஷயத்தைப் பத்தி எங்கள் இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி அபிப்பிராயம். ஒரு ஆணும் பெண்ணும் கருத்தொருமித்துக் கல்யாணம் செய்து கொள்வது போலவே கல்யாணத்தை மறுத்தும் நண்பர்களாக இருக்கலாம் அல்லவா? அவர் இப்போது ஐந்து வருஷ காண்ட்ராக்ட்லே மொரீஷியஸுக்குப் போயிருக்கார்" - இதைச் சொன்னவுடன் மாலாவின் கண்கள் அகல விரிகின்றன.

"எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த மணி! கே.எஸ். மணிதானே பேர்? சிவில் இஞ்சினியர்..." என்று மாலா கூறுகையில் அவளைப் போலவே ஆச்சரியத்துடன் நானும் ‘ஆமாம் ஆமாம்' என்று தலையசைக்கிறேன்.

"சரிதான்... உத்தியோக மறுப்பு விஷயம் ஒன்றில்தான் மணிக்கு எங்களோடு கருத்து வேறுபாடு என்று நினைத்திருந்தேன், கல்யாண மறுப்பையும் கைவிட்டுவிட்டானா? நான் மணியை 'அவன்' என்று சொல்வதற்காக மன்னித்துக் கொள். அவன் எங்களுக்கு ரொம்பவும் வேண்டியவன்" என்று மிஸ்டர் மணியை நினைத்து வியப்புக் கொள்கிறாள் மாலா.

"தனக்கு இப்படி ஒரு சிநேகிதி இருப்பதையும் அவளைத் தான் கல்யாணம் செய்துகொள்ள நினைத்திருப்பதையும் அவன் எங்களிடம் சொல்லவே இல்லையே!" என்று மறுபடியும் மறுபடியும் சொல்லி மாய்ந்து போகிறாள். "நாங்கள் நண்பர்களெல்லாம் சேர்ந்து மொரிஷியஸ் போவதற்கு முன்னால் அவனுக்கு ஒரு 'பார்ட்டி' கூடக் கொடுத்தோமே!" என்கிறாள்.

“நாங்கள் கல்யாணத்தைப் பற்றி இன்னும் நிச்சயம் செய்யவில்லையே. அதனால் சொல்லாமல் இருந்திருக்கலாம். உத்தியோகம் பார்க்கிற, கல்யாணம் செய்து கொள்ளக் காத்திருக்கிற ஒருத்தியை, உத்தியோக மறுப்பு-கல்யாண எதிர்ப்புக் கொள்கை உடைய உங்கள் கோஷ்டிக்கு அவர் எப்படி அறிமுகம் செய்து வைக்க முடியும்" என்று நான் மாலாவுக்குச் சமாதானம் சொல்லுகிறேன்.

"ஆனால் இன்று உங்களையும் உங்கள் நண்பர்களையும் உங்கள் கொள்கைகளையும் நீங்கள் வாழ்கிற வாழ்க்கையையும் நேரிடப் பார்த்த பிறகு 'கல்யாண வாழ்க்கையில் சிக்கிக் கொள்வதா?' என்று நான் மறுபடியும் யோசிக்கிறேன். இந்த மனோநிலையில் இந்த ‘இம்ப்பாஸியிள் டிரீம்' வேறு பார்த்து விட்டோம்…”

என் குழப்பத்தைக் கண்டு மாலா அக்கா சிரிக்கிறாள்.

“இந்தப் படத்தில் நீ பார்த்த மனிதனைப் போல் ஒரு சுரண்டல் பேர்வழி அல்ல மணி, மனித உழைப்பை மிகவும் மதிப்பவன் அவன். 'அணைகளையும் பாலங்களையும் கட்டுவதற்குப் படித்துவிட்டு உங்களோடு சேர்ந்து ஆடிப்பாடிக் கொண்டிருக்கச் சொல்கிறீர்களா?' - என்று அவன் எங்களிடம் கேட்டிருக்கிறான். 'நீங்களெல்லாம் கலைஞர்கள்! உங்களோடு நான் சேர்ந்தால் சோம்பேறியாகி விடுவேன் என்றுகூட அவன் விளையாட்டாகச் சொல்லுவான்.’ அதனால் உன்னுடைய கனவுகள் 'பாஸிபிள் டிரீம்ஸ்'தான் பயப்படாதே!" என்று என் தோளில் தட்டிக் கொடுத்தாள் மாலா அக்கா.

"இல்லை அக்கா! கல்யாணம் என்று ஒன்று ஆகிவிட்டால் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவு எங்கேயோ அடிப்படையிலேயே மாறித்தான் போய்விடுகிறதோ என்று பயமாயிருக்கிறது. எவ்வளவோ வளர்ச்சியுடைய, நாகரிகமுடைய, ஆண்-பெண் சமத்துவமுடைய மேலை நாடுகளிலேயே பெண்ணின் நிலைமை நிறைவேறாத கனவாகவே இருக்கிறது. அந்த படத்திற்கு 'இம்ப்பாஸிபிள் ட்ரீம்' என்று அவர்கள் ஏன் தலைப்பிடுகின்றனர்? இந்தப் பிரச்னைக்கு முடிவே கிடையாது; தீர்வே கிடையாது. சுரண்டலுக்கும் அடிமைத்தனத்துக்கும் ஈடு கொடுத்துப் பழைய சமாதானங்களையே ஏற்றுக் கொண்டு, இரண்டாந்தர ஜீவனாகப் பெண் இழிந்து, உழைத்து, உடல் தேய்ந்து, மக்கி மாய்ந்து போவதுதான் யதார்த்த வாழ்க்கை என்பதை நிராசை கொப்பளிக்க அந்தப் படம் அழுத்தம் தந்து சொல்கிறது..." என்றேன் நான்.

"இந்த நிலைமையில் நாம் கனவு கண்டு கொண்டு திருப்திப்படுகிற அவல நிலையில்தான் குடும்பத் தலைவிகளாக இருக்க முடியும். அப்படி ஒரு கனவில் மகிழ்ந்து கொண்டிருக்கும்பொழுது யதார்த்தத்தின் சில்லிட்ட கரம் அவளை அறைந்து எழுப்பி விடுகிறது. இது எவ்வளவு அவலம்? இப்படி ஒரு பொய்க்கனவில் மயங்கித்தான் பெண்கள் கேவலப்பட்டு விடுகிறார்கள்" என்கிறாள் மாலா அக்கா.

அவள் மேலும் தொடர்ந்து யோசித்துச் சொல்லுகிறாள்: "அப்படி ஒரு கனவு காண்பதை, அது கலைவதை ஏன் அவலம் என்று நினைக்க வேண்டும்? அந்தக் கனவை நனவாக்கப் போராட வேண்டும் என்று தோன்றினாலும் அதற்காக நாம் ஒன்றுமே செய்ய முடியவில்லையே! இது என்ன-'தனி மனிதர்கள் திருந்தினால்தான் எதுவும் சீர்படும்'... என்று சொல்லுகிறார்களே... அது சம்பந்தப் பட்டதா? ஒருவனும் ஒருத்தியும் என்று ஆகிவிட்ட பிறகு அவர்கள் எப்படித் தனிமனிதர்கள் ஆகமுடியும்?" என்றெல்லாம் மாலா அக்கா சொல்லுவதை நானும் கருத்தொருமித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

"சரி, இதெல்லாம் எப்படியும் ஆகட்டும். இன்னும் ஐந்து வருஷங்களுக்குப் பிறகுதானே நீ மணியைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்! அதற்குள் இங்கு பெரிய சமூக மாற்றங்கள் ஏற்பட்டுவிடும். உலகம் பூராவும் பெண்களின் நிலை இப்படித்தான் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. இதை மாற்றிய சமூக அமைப்புக்களும் உலகத்தில் உண்டு! அவை தனியுடமையை ஒழித்த சமூகங்கள். நாங்களெல்லாம் கூட்டு வாழ்க்கை நடத்துகிறோமே. அங்கே எதுவும் தனியுடைமை இல்லை. ஓர் ஓவியனுக்கு அவனுடைய தூரிகை போலவும், எனக்கு என்னுடைய வீணைபோலவும் சில சொந்த உடைமைகள் உண்டு. நாங்கள் சம்பாதிப்பதை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். எங்களுக்குள் கல்யாணம், பிள்ளை - குட்டி என்று வந்தால் இந்தச் சமூகச் சூழ்நிலையில் இந்தக் கூட்டு வாழ்க்கை குலைந்து போகும். எந்தச் சமூகத்திலும் எங்களைப் போன்றவர்கள் கொஞ்சமாகத்தான் இருக்க முடியும். எல்லோருக்கும் இந்த வழியைக் காட்ட முடியுமா? அதனால்தான் நீ கல்யாணம் செய்து கொள்ளப் போவதை ஆசிர்வதிக்கிறேன். மணி ரொம்பவும் நல்லவன்" என்று எனக்கு நம்பிக்கையூட்ட முயல்கிறாள் இந்த அக்கா.

இரவு மணி பன்னிரெண்டுக்கு மேல் ஆகிறது. விடியற் காலையில் எழுந்து மாலாவைக் கொண்டுபோய் விட்டு விட்டு வரவேண்டும். அவளுக்கும் தூக்கம் வருகிறது. நானும் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கிறேன். எனக்குத் தூக்கம் வரவில்லை.

திரும்பத் திரும்ப ‘நிறைவேற முடியாத கனவு' பல பரிமாணங்களில் என் மனக்கண்ணில் முகிழ்க்கின்றது.

'காதலையும் இல்லறத்தின் மேன்மையையும் கவிகளெல்லாம் புகழ்கிறார்கள். நடைமுறை வாழ்க்கையில் 'காதல்' என்பது பரஸ்பர உடற்கவர்ச்சியாகவும் 'சம்சாரம்' என்பது குழந்தைத் தடுப்புப் பிரச்னையாகவும் தன்மை கெட்டுக் கிடக்கிறது.’ இந்தச் சூழ்நிலையில் ஆணுக்குப்

பெண் துணையாக வாழ வேண்டுமென்றால் அவர்கள் தோழமை கொண்டு தோள் கொடுத்து வாழ வேண்டுமே தவிர இருவர் கைகளையும் கட்டிப் போட்டுக் கொள்வது என்பது மீளாத சங்கடத்துக்கும் பிரச்னைகளுக்குத்தான் வழிகோலும்.

ஏதோ இந்த மாலா அக்கா சொல்லுகிறாளே - மாறிய சமூகம் என்றும் - தனியுடமை ஒழிந்த சமூகம் என்றும் - அப்படி ஒரு நிலை நமக்கு வருமா...? சாத்தியம்தானா? என்றெல்லாம் மனம் ஏங்குகிறது.

இவற்றையெல்லாம் குறித்து ஒரு நீளமான கடிதத்தை மிஸ்டர் மணிக்கு நாளை எழுதலாம் என்ற தீர்மானத்தில் தூங்க முயன்றேன்.

பக்கத்தில் நிம்மதியாகப் படுத்து உறங்குகிற மாலா அக்காவைப் பார்க்கிறேன்.

எவ்வளவு தெளிவான சிந்தனையும் திடமான மனமும் கொண்டிருக்கிறாள் இவள்! இப்படிப்பட்ட தெளிவும் திடமும் இவளுக்கு எப்படி ஏற்பட்டது என்று இன்னும் நான் தெரிந்து கொள்ளவில்லை...!

விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து தயாராகி விடுகிறோம். அம்மா வழக்கமாக எழுந்திருப்பதற்கு ஒருமணி நேரம் முந்தியே எழுந்து எங்களுக்குக் காபி தயாரித்துத் தருகிறாள்.

"என்னமோடி அம்மா! இத்தனை வருஷத்துக்கு அப்புறம் உன் அருமைத் தங்கை உன்னைத் தேடிக் கண்டு பிடிச்சு ஆத்தோட கொண்டு வந்து சேர்த்துட்டாள்! உன்னை அடிக்கடி வந்து போயிண்டிருன்னு சொல்றதா. இங்கேயே வந்துடுன்னு சொல்றதான்னு எனக்குத் தெரியலை" என்று அன்பைப் பொழிந்தவாறே காபியைக் கலந்து கொண்டு வந்து எங்கள் முன் வைக்கிறாள் அம்மா.

'இங்கே இருக்கவொட்டாமல், அடித்து விரட்டாத குறையாக நடந்துகொண்ட அம்மாவின் அக்கால நிலைமை அப்படி

இருந்தது போலும்' என்று யோசித்துப் புரிந்து கொண்டவள் போல் புன்னகையோடு அம்மாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் மாலா.

அதே அம்மா இப்போது காட்டுகிற அன்பை நான் நினைப்பது போல் பொய்யென்று மாலா கருதவில்லை. அது அந்தக் கபடமில்லாத புன்னகையில் வெளிப்படும் நன்றி உணர்ச்சியில் தெரிகிறது!

"என்ன நடந்தது? நீங்கள் காணாமல் போய்விட்டீர்கள் என்றல்லவா எல்லாரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்...?" என்று காபியை ஆற்றியவாறே நான் கேட்கிறேன்.

மணிகள் குலுங்குவதுபோல் சிரித்தபின் சிரிப்படங்கிச் சற்று லேசாகக் கனைத்துக் கொண்ட பிறகு சொல்லுகிறாள் மாலா அக்கா!

"அம்மா அப்பா இல்லாத நான் அத்தை ஆத்தில் அவர்களுக்குப் பாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக, அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காக எவ்வளவோ பாடுபட்டேன்; கிடைத்த உத்தியோகங்களுக்கெல்லாம் போனேன். சம்பாதிப்பதையெல்லாம் அப்படியே கொண்டு வந்து கொடுத்தேன். நிலையான வேலை எதுவும் கிடைக்கவில்லை.”

"நான் ஏற்கனவே வேலை செய்து நின்றுவிட்ட ஒரு பெரிய நிறுவனத்தில் உள்ள ஊழியர்கள் அவர்களது மன மகிழ்மன்ற ஆண்டுவிழாவில் கோபாலின் நாடகம் ஒன்றை நடத்தினார்கள்."

"அந்த நாடகத்தில் ஆண்களே பெண்வேடம் போடுவதாகக் கோபால் வந்து சொன்னான்; எனக்குப் பரிதாபமாக இருந்தது. ஏற்கனவே பள்ளிக்கூட நாடகங்களில் நடித்த தைரியத்தில் ஒரு முக்கியமான பெண் வேஷத்தைத் தரச் சொல்லி நான் நடிப்பதாக ஏற்றுக் கொண்டேன்.”

"அத்தையும் மாமாவும் ஏனோ இதை மூர்க்கமாக எதிர்த்தார்கள். நான் இதை எதிர்பார்க்கவில்லை. நண்பர்களிடம் ஏற்கனவே நடிக்க ஒப்புக் கொண்டாகிவிட்டது. இவர்களோ, 'நாடகத்தில் நடிப்பதென்றால் இந்த வீட்டை விட்டு வெளியே போ!' என்று இறுதியாகச் சொல்லி விட்டார்கள்.

"சிறு வயதிலிருந்து என்னை ஆதரித்தவர்களுக்கு என் உடனிருப்பு அவமானம் தருமென்றால் அவர்களைவிட்டு விலகி விடுவதே, இவ்வளவு காலம் அவர்கள் எனக்குச் செய்த உபகாரத்துக்கு நான் செய்கிற கைமாறாக இருக்கும் என்ற முடிவில் அம்மா எனக்குத் தந்த வீணையைத் தூக்கிக் கொண்டு ஒருநாள் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டேன்."

"நண்பர்கள்தான் உதவினர். கிருஷ்ணாம்பேட்டையில் எளியவர்கள் வாழும் பகுதியில் ஒரு சின்னக் குடிசை வீட்டில் ஆரம்பத்தில் நான் தனி வாழ்க்கை நடத்தினேன். ஆனால் எப்போதும் நண்பர்கள் வந்து என்னுடன் இருப்பார்கள். அவர்கள் வசதி படைத்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அறிவு பூர்வமாக அந்த வாழ்க்கையோடு முரண்பட்டவர்கள் என்பதால் என்னைச் சமத்துவமாக நடத்தினார்கள்."

"இந்த பைரவியும் தன்னுடைய பெற்றோரிடமிருந்து தனித்து வாழ்வதென்ற முடிவில் வீட்டை விட்டு வெளியே வந்தவள். அவளது முயற்சியினால்தான் எங்களைப் போன்ற சுதந்திரமான இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து இந்தக் கூட்டு வாழ்க்கையையும் சமூக-கலைப் பணிகளையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொண்டோம்.

"நான் ஒன்றும் காணாமற் போய்விடவில்லை... பகிரங்கமாக இவ்வளவு நாட்களும் ஒளி பொருந்திய மேடைகளில் தோன்றிக் கொண்டேதான் இருந்தேன். நான் நடித்த நாடகத்தில் எனக்குப் பெயர் மாலா; அதுவே நிலைத்துவிட்டது. அல்லாமல் நான் ஒன்றும் பெயர் மாற்றம்

செய்து ஒளிந்து கொள்ளவில்லை" என்று தன் நிலைமையை விளக்கினாள் மாலா அக்கா.

"நீ அப்போவே இங்கே வந்திருக்கலாம்" என்று மறுபடியும் என்னமோ சொல்ல வந்த அம்மாவை நான் அடக்கினேன்: "எல்லாம் இதைவிட நல்ல இடத்தில் இப்போது அவள் இருக்கிறாள்."

ஹாலில் பேச்சுக்குரல் கேட்டுப் பெரியக்காவும் கிச்சுவும் தூக்கம் கலைந்து ஒவ்வொருவராக எழுந்து வந்தனர்.

பெரியக்கா ஒரு கொட்டாவியுடன் கேட்டாள்! “புறப்பட்டாச்சா?" அம்மா சொன்னதையேதான் நான் திருப்பிச் சொல்றேன்... நீ எங்களோடு வந்து இங்கேயே உன் சௌகரியத்துக்கு இடைஞ்சல் இல்லேன்னா... இருக்கலாம்... இனிமே நீ எங்கே இருந்தாலும் எங்களோட இருக்கற மாதிரிதான்...” என்று பெரியக்காவும் அன்புடன் சொன்னாள்.

நானும் மாலாவும் ஸ்கூட்டரில் ஏறிப் போகும்வரை, அம்மா, அக்கா, கிச்சு எல்லோரும் வாசற்படி வரை வந்து வழியனுப்பினார்கள். எனக்கும் இன்றைக்குக் காலை நேரத்திலேயே வேலைக்குப் போக வேண்டும்...

மிஸ்டர் மணிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதவேண்டும். மாலாவைப் பற்றியும் அவளது நண்பர்கள் பற்றியும் ஏற்கனவே மிஸ்டர் மணிக்குத் தெரிந்திருப்பதால் இந்தக் கடிதத்தில் நான் எழுதப்போகும் விஷயங்கள் அவரைப் பரவசப்படுத்தும் அல்லவோ!

*****

# 5

காலை ஏழு மணிக்கு எங்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் உக்கிராணப் பகுதியில் எனது பணிகளில் மூழ்கிப் போனேன். எவ்வளவு வேலைகள்! ரத்தமும் தண்ணீருமாக வந்து இறங்கும் மாமிசத்தையும், மீன்களையும் குளிர்ப் பதன அறைக்குள் இருந்து எடுத்துக் கொடுக்கிற கணக்கில் இருந்து, மூன்று வேளைக்கும் 'மெனு' தயாரிப்பதில் இருந்து, அங்குள்ள பணியாட்களுக்கு உத்தரவிடுவதும் யோசனை சொல்வதும், எல்லாவற்றையும் பூட்டிச் சாவியைக் கொண்டு வந்து மானேஜர் அறையில் ஒப்படைப்பது வரை எனது வேலைகள் மூடிய மணி பன்னிரெண்டாயிற்று. அந்த உக்கிராணப் பகுதி ஒரு பெரிய தொழிற்சாலை மாதிரி இயங்கிக் கொண்டிருக்கிறது. அடுத்த ஷிப்டு வந்து பொறுப்பேற்றுக் கொள்ளுகிறவரை எனக்கு வேலை...

மறுபடியும் நான் வந்து சார்ஜ் எடுத்துக் கொள்ள வேண்டியது மாலை நாலு மணிக்குத்தான். ஹோட்டலில் நான் ஓய்வெடுத்துக் கொள்வதற்கென்று எனக்கொரு தனி அறை உண்டு. அந்த அறைக்குப் போய் ஆர அமர உட்கார்ந்து மிஸ்டர் மணிக்கு ஒரு கடிதம் எழுதுகிறேன்...

அந்தக் கடிதத்தில் முதல் விஷயமாக மாலா அக்காவையும், அவளது நண்பர்களையும் அவருக்கு ஏற்கனவே தெரியும் என்கிற ரகசியத்தை நான் தெரிந்து கொண்ட விஷயத்தை எழுதி அதற்காக என் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்புறம் அவர் எழுதுகிற மாதிரியே விஸ்தாரமான வர்ணனைகளுடன் மாலா அக்காவின் வீட்டிற்கு நான் போய் வந்த அனுபவத்தையும், அங்கு சந்தித்த நண்பர்களைப் பற்றியும் விவரித்து எழுதி அவர்களின் கொள்கைகளையும் வாழ்க்கை முறையையும் புகழ்கிறேன்.

காணாமற் போய்விட்டாள் என்று கதைகட்டிப் பலவித சந்தேகங்களுக்கு ஆளாக்கப்பட்ட மாலா அக்கா எவ்வளவு

பெருமிதப்பான வாழ்க்கை வாழ்கிறாள் என்பதை விளக்கி, அவள் எங்கள் வீட்டுக்கு வந்து தங்கியிருந்ததைத் தெரிவிக்கிறேன்.

அவருக்கும் எனக்கும் உள்ள நட்பு தெரிந்து மாலா அக்கா அடைந்த மகிழ்ச்சியையும், அந்த நட்பை அவள் ஆசிர்வதித்ததையும் - மாலாவின் கோஷ்டியோடு நட்பும் உறவும் இருந்தும் கூட அவர்களது கொள்கையான உத்தியோக மறுப்பு என்கிற விஷயத்தில் அவரைப் போலவே அவர்களுடன் எனக்கும் உள்ள முரண்பாட்டை விளக்கியும் ஒரு கட்டுரை போல் ஒரு பக்கம் எழுதுகிறேன்.

அவர் இங்கே வருகிற பொழுது அந்த நண்பர்கள் மத்தியில் அவரைச் சந்திக்க விரும்புவதாகவும், அவர்களில் ஒருத்தியேபோல் நான் ஆகிவிட்டதாக உணர்வதாகவும் எழுதுகிறேன்...

அந்தக் கடிதத்தை எழுதி முடிக்க எனக்கு ஒரு மணி நேரமாயிற்று, இவ்வளவு நீளமான கடிதத்தை நான் இதுவரை யாருக்கும் எழுதியதில்லை என்ற நினைப்புடன் அதை உறையிலிட்டுக் கைப்பையில் வைத்துக் கொண்டு புறப்படுகிறேன்.

தபாலாபீஸ் வரை போய் அந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்த்த பிறகுதான் ஒரு யோசனை வருகிறது: “வீட்டுக்குப் போகலாமா, மாலா அக்காவைப் பார்க்கப் போகலாமா...?"

காலையில்தானே போனோம் என்று மனதை அடக்கிக் கொண்டு வீட்டுக்கே திரும்புகிறேன்.

ஆனால் அடுத்த நாளும் அதற்கு அடுத்தநாளும், அநேகமாக ஒவ்வொரு நாளும் நான் மாலா அக்காவையும், அவளது நண்பர்களையும் நேரமிருக்கும் போதெல்லாம் சந்தித்து அங்கேயே பொழுது கழிக்கிறேன்.

அங்கு பொழுது பயனுறக் கழிகிறது.

இந்தப் பதினைந்து நாட்களாக மிஸ்டர் மணியைப் பற்றிய நினைவே இல்லை. இப்பொழுதெல்லாம் எனது டிபார்ட்மெண்ட்டிலுள்ள டெலிபோன் மணி அடித்தால், ‘மாலாவாக இருக்குமா... வாணியாக இருக்குமா... ரேகாவாக இருக்குமா... இல்லை ரவி, கோபால் யாராவது இருக்குமா?' என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது!

ஒரு விடுமுறை நாளில் மத்தியானம் நான் மாலாவைத் தேடிப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது ஹாலில் ரேடியோ நாடகம் கேட்டுக் கொண்டிருந்த கிச்சு உற்சாகமாக மிஸ்டர் மணியிடமிருந்து கடிதம் வந்திருக்கிற செய்தியைக் கூறிக் கொண்டு மாடியறையை நோக்கி ஓடி வந்தான்.

அவன் வந்த வேகத்தில் மாடிப்படியில் இறங்கிக் கொண்டிருந்த என் மேல் மோதிக் கொண்டான். 'இவனுக்கென்ன இதில் இவ்வளவு எக்ஸைட்மெண்ட்' என்ற எரிச்சலுடன் கடிதத்தை வாங்கிக் கொண்டு படியிறங்கிக் கூடத்துக்கு வருகிறேன். அம்மா சரக்கையை முந்தானையில் துடைத்துக் கொண்டு முகமலர்ச்சியுடன் ஓடி வருகிறாள். பெரியக்கா இரைந்து கொண்டிருந்த ரேடியோவின் சுருதியைக் குறைக்கிறாள்.

நான் கடிதத்தின் உறையைப் பிரிக்கிறேன். மிஸ்டர் மணியிடமிருந்து கடிதம் வந்தால் இவர்கள் எல்லார் முன்னிலையிலும் படித்துக் காட்டுகிற பழக்கம் வைத்துருக்கிறேனே...!

எங்கள் நட்பில் ரகசியமோ, எங்கள் இருவருக்கும் மட்டுமே உரிய அந்தரங்கமோ எதுவும் இல்லை.

பொதுவாக எங்கள் கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் இருப்பதனால் நாங்கள் ஒருவரையொருவர் ஒருமையில் அழைத்துக் கொள்கிறோமா மரியாதைப் பன்மையில் அழைத்துக் கொள்கிறோமா என்று புரிந்துகொள்ள முடியாது. அம்மாவுக்காக, நான் ஆங்கிலத்தில் வரும் கடிதங்களைத் தமிழிலேயே மொழி பெயர்த்துப்

படித்துவிடுவேன். கிச்சு தோள் வழியே எட்டிக் கொண்ட பார்ப்பான்...

படித்த பிறகு கடிதத்தைப் பெரியக்காவிடம் தருவேன். அவள் ஒரு பார்வை பார்த்துவிட்டு என்னிடமே திருப்பித் தந்துவிடுவாள். நான் படிக்கிறேன்:

“அன்புள்ள மிஸ் ஜெ"

உன் நீண்ட கடிதம் கிடைத்தது. மிஸ் மாலா உனது சகோதரி என்பதை அறிந்து நான் மெய்யாகவே மகிழ்ச்சி அடைந்தேன்.

அவளைச் சந்திப்பதன் மூலம் உன் தகப்பனாரின் மனச்சாட்சியாகச் செயல்படுகிற நீ, உன் சின்ன அக்கா விஷயத்தில் வருத்தம் கொண்டிருக்கிற நீ, மிஸ் மாலாவை அழைத்துக் கொண்டு வந்து உங்கள் குடும்பத்தில் ஒருத்தியாய்ச் சேர்த்துக் கொள்வாய் என்று நான் நம்பினேன்.

மாலாவும் அவளது நண்பர்களும் எனக்கும் நண்பர்கள் தான். ஆனாலும் நான் அவர்கள் கோஷ்டி அல்ல என்பதை நீ புரிந்து கொள்ளவேண்டும். மாலாவின் நண்பர்கள் அனைவரும் திறமை வாய்ந்த கலைஞர்கள்தான். ஆனால் அவர்கள் எல்லாருமே வீட்டுக்கு அடங்காமல் ஓடி வந்துவிட்ட தத்தாரிகள். அதற்காக அவர்கள் சொல்லுகிற நியாயங்கள் அவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அவர்களுக்கே அது தகும், தாங்கும்.

அவர்கள் எவ்வளவுதான் தங்கள் குடும்பத்தைப் பகைத்துக் கொண்டு விலகியிருந்த போதிலும் அவர்கள் பணம் படைத்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே, அவர்களைப் போல் உத்தியோகம் வேண்டாம் என்று ஒதுங்கியிருக்க நம்மால் முடியாது: கூடாது.

அங்கு நீ சந்தித்த மிஸ் வாணி என்கிற பெண் இருக்கிறாளே, அவள் வருஷம் பூராவும் ஊர் சுற்றிக் கொண்டிருப்பாள். ஏதோ ஒரு பத்துநாள் உட்கார்ந்து அந்த

ஆண்டு காலண்டருக்கான டிஸைன் ஒன்றை வரைந்து ஒரு சர்வதேசப் புகழ்பெற்ற நிறுவனத்துக்குக் கொடுத்து ஆயிரக் கணக்கில் பணம் சம்பாதித்துவிட அவளால் முடியும் அவர்கள் விஷயத்தில் அவர்கள் எவ்வளவுதான் எனது இனிய நண்பர்களாக இருந்த போதிலும் நான் எச்சரிக்கையாகவே இருந்திருக்கிறேன்.

எல்லா விஷயங்களிலும் என்னோடு கருத்தொருமித்து இருக்கும் நீ, இது விஷயத்திலும் என்னைப் போலவே யோசிப்பாய் என்று நான் நம்பலாமா?

உனது நீண்ட கடிதம் அவர்களைப் பற்றி ரொம்பத் தான் அளவுக்கு மீறிப் புகழ்கிறது. அதனாலேயே இக்கடிதத்தை நமது வழக்கமான கடிதங்களிலிருந்து மாறுபட்ட தொனியில் நான் எழுதுகிறேன்.

கல்யாணம் குறித்த நமது கருத்தரங்கத்திற்கு நாம் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். எனது தரப்பில் அது பற்றிய எனது முடிவுரையை இந்தக் கடிதத்தில் சொல்லிவிட நினைக்கிறேன்.

இந்திய வாழ்க்கையில், அதுவும் நம்மைப் போன்ற மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த, படித்த, ஆணும் பெண்ணும் உத்தியோகம் பார்க்கிற சமூகத்தில் ஏற்படுகிற பிரச்னைகள் குறித்து நாம் விரிவாகவே விவாதித்திருக்கிறோம்.

இப்போது இந்திய சூழ்நிலையிலிருந்து முற்றிலும் ஒரு மாறுபட்ட வாழ்க்கையில், உத்தியோகத்தில் இருக்கிற நான் புதிய மாற்றங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு யோசிக்கிறேன்.

இங்கே மலர்வனங்கள் சூழ்ந்த ஒரு தோட்டத்தின் நடுவே எனக்கென்று ஒரு மாளிகை, பணியாட்கள், ஒரு ராஜதந்திரிக்கு உரிய அந்தஸ்து எல்லாம் ஏற்பட்டபின், வேலையற்றுத் திரிகிற ஒரு பொறியியல் பட்டதாரியாகவே

என்னைப் பாவித்துக் கொண்டு யோசிப்பது யதார்த்தத்துக்குப் புறம்பாக இருக்கிறது.

இப்பொழுது எனக்குத் தேவை 'இந்த மாளிகையை ஒரு மங்களகரமான இல்லமாக்குவதற்குக் குடும்ப விளக்காக நீ வந்துவிட வேண்டும்' என்பதே. இது விஷயமாக என் அம்மாவுக்குத் தனியே ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்.

நம்முடைய புதுமைக் கருத்துக்கள், புரட்சிகரச் சிந்தனைகள் இவையாவும் நமது கலாசாரத்துக்கு உட்பட்டு நமக்கு உரிய வாழ்வை நாம் ஏற்றுக் கொள்வதற்குத் தடையாக இருக்க வேண்டாம்.

நமது பெற்றோரின் விருப்பப்படி, நமது மரபுப்படி நாம் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அதன்பிறகு நமது புதுமைக் கருத்துக்களுக்கு ஏற்ப நாம் வாழ முடியும் என்று நம்புகிறேன். உனது மகிழ்ச்சிகரமான சம்மதத்தை நான் அறிந்தவுடன் ஒரு மாத லீவில் இந்தியாவுக்கு வரமுடியும்.

உனது 'ஹோட்டல் சமையல்கார' உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிடு. ஒரு புதிய வாழ்க்கைக்கு உன்னைத் தயார்ப்படுத்திக் கொள். மற்ற விவரங்களை அம்மா வந்து சொல்வார்கள்.

அன்புள்ள

மணி

- எனது உணர்ச்சிகளையெல்லாம் அடக்கிக் கொண்டு எனக்குச் சம்பந்தமில்லாத ஒரு கதையைப் படிப்பதுபோல் அந்த ஆங்கிலக் கடிதத்தை மொழி பெயர்த்து முடித்தேன்.

கடிதம் முழுவதையும் கேட்ட அம்மா என் கண் முன்னாலேயே ஒரு சுற்றுப் பெருத்து வருவது போல் மகிழ்ச்சியால் பூரித்து முகமெல்லாம் சிரிப்பு விகசிக்க நிற்கிறாள்.

"இது மிகவும் அதிகமான எதிர்பார்ப்பு” என்று ஆங்கிலத்தில் சொல்லிக் கடிதத்தை அக்காவிடம் தருகிறேன் நான். அக்கா மூக்குக்கண்ணாடி பிரேமுக்குள் புருவங்கள் நெரிய என்னைப் பார்த்தவாறே கடிதத்தை வாங்குகிறாள்.

"நீ கல்யாணம் பண்ணிண்டு மொரீஷியஸுக்குப் போகும்போது நானும் உன்கூட வருவேண்டி” என்று அசடு வழியச் சொல்கிறான் கிச்சு.

"ஒரு பெண் என்கிற முறையில் நீ கல்யாணத்துக்குக் காட்டுகிற தயக்கம் எனக்குப் புரிகிறது. ஆனாலும் இது ஒரு நல்ல வாய்ப்பு" என்று சிபாரிசு செய்வது போல் சொல்லுகிறாள் அக்கா.

ஒரு நொடியில் எல்லாராலும் கைவிடப்பட்ட நிராதரவான அநாதைபோல் உணர்கிறேன் நான்.

முன்பு ஒருமுறை, எனக்கு நண்பராகவும் ஹிந்தி ஆசானாகவும் இருந்த ஒருவர் தன் மீது நட்பும் அன்பும் இருந்தால் நான் அசைவ உணவு சாப்பிட வேண்டும் என்று - ஒரு மட்டன் ஸமோஸாவை வைத்துக் கொண்டு வற்புறுத்தினாரே, அந்தக் கசப்பான நிகழ்ச்சி மறுபடியும் என் நினைவுக்கு வருகிறது.

எதற்கு இந்த யாரோ ஒரு அந்நியர் என்னிடம் இவ்வளவு எதிர்பார்க்க வேண்டும்? நான் எப்படி இதற்கு இடம் கொடுத்தேன்? இல்லையே... நான் இடம் கொடுக்கவே இல்லையே...! எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தேன்; இருக்கிறேன்.

எங்கள் ஹோட்டல் முதலாளிக்கும் அங்குள்ள சிப்பந்திகளுக்கும் எனது மதிப்பிற்குரிய நண்பர் என்றுதான் மிஸ்டர் மணியைத் தெரியுமே தவிர, என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர் என்றோ எனது காதலர் என்றோ இவரை யாரும் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

ஒரு வேலையில்லாத பட்டதாரி இளைஞனுக்குப் புரட்சிகரமான கருத்துக்கள் வெறும் பொழுதுபோக்கு போலும்! நம்மைவிட எளிய ஒரு தேசத்தில், அந்தத் தேசத்திற்கு நாம் செய்கிற உதவித் திட்டத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்துவிட்டதனால் இவருக்கு ஒரு ராஜதந்திரியின் அந்தஸ்து வந்துவிட்டது! அரண்மனையும் வேலையாட்களும் சேர்ந்துவிட்டார்கள்...! இனி வேண்டுவதெல்லாம் இவருக்கு ஒரு பட்டமகிஷிதான்...! எனவே எனது உத்தியோகம் வெறும் 'ஹோட்டல் சமையற்கார' வேலையாகத்தான் தோன்றும்!

தாயை, சகோதரிகளை, நண்பர்களை, லட்சியத்தாலும் கொள்கையாலும் இணைந்த தோழர்களை, அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர்களை, பிறந்த தேசத்தை, எல்லாவற்றையும் உதறிவிட்டு இவரது புதிய வாழ்க்கை விளையாட்டில் நான் பொம்மையாகிவிட வேண்டுமா?

“முடியாது."

"என்ன? முடியாதா...?”- இது அம்மா.

"ஆமாம். முடியாது, முடியாது, முடியாது... மூன்று முறை சொன்னேன்” என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டு மாடிக்குச் சென்று தனிமையில் அமர்ந்து மிஸ்டர் மணிக்கு ஒரு கடிதம் எழுதுகிறேன்.

"அன்புள்ள நண்பர் மணி" என்று ஆரம்பித்து, முதல்வரியே 'ஐயாம் ஸாரி' - தான்.

"ஐந்து வருஷத்துக்குப் பிறகுதான் நாம் கல்யாணத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்கிற ஒப்பந்தத்தை உங்கள் கடிதம் மீறுகிறது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.”

"நமது புதிய கருத்துக்களோடு நாம் வாழ்வதற்காக இந்தப் பிறந்த மண்ணை விட்டு வேறு எங்கோ ஒரு மண்ணில் ஐந்து வருஷ காண்ட்ராக்டில் போய்த்தான் வாழ வேண்டுமென்றால் - அதைவிட நமது பழைமைக்

கருத்துக்களோடு போராடிக் கொண்டு இங்கேயே வாழ்ந்துவிடுவது மேல் என்று நினைக்கிறேன்.”

"குடும்பவிளக்கு, இல்லத்தரசி என்கிற வார்த்தைகள் எல்லாம் நமது நகைப்புக்கு இலக்கானவை என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.”

“கை நிறைய சம்பாதித்துக் கொண்டு, கடல் கடந்து வாழ்கிற ஒரு மாப்பிள்ளையைக் கைப்பிடித்து வாழ்வதற்கு நமது ஜாதியில் ரொம்பப் பெண்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்... அவர்களது அம்மாமார்கள் அயோத்தியா மண்டபத்துக்கு வருவார்கள். அவர்களில் ஒருவரைப் பார்த்து, வேறொரு பெண்ணைத் தேடச் சொல்லி அடுத்த கடிதத்தில் உங்கள் அம்மாவுக்கு எழுதுங்கள்...”

"எப்போதும் நாம் நண்பர்களாக இருப்போம் - உங்கள் வருங்கால மனைவி உங்களை அனுமதித்தால்...”

அன்புள்ள

ஜெ...

எழுதிய கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து கூடத்தில் நின்று அம்மாவும், அக்காவும், கிச்சுவும் கேட்பதற்காக உரத்துப் படித்துக் காண்பிக்கிறேன்.

"அடியே! அவசரப்பட்டுத் தத்துப்பித்துனு ஒண்ணும் எழுதி வைக்காதே... சும்மா இரு...” என்று என்னை அதட்டி அடக்குகிறாள் அம்மா.

"இல்லை அம்மா... இதற்குமேல் இடம் கொடுக்கக் கூடாது. நான் என்ன பெண் பார்க்க வரச்சொல்லி, அலங்கரித்துக் கொண்டு நின்று, நிச்சயதார்த்தமா செய்து கொண்டேன்? அதையெல்லாம் மறுத்தபோது என்னோடு சேர்ந்து 'ஆமாம்' போட்ட ஒரு நண்பர், அவர் நிலைமை திடீரென்று மாறிவிட்டதால் நானும் என் கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது சரியில்லை...”

"எனக்குக் கல்யாணம் வேண்டாம்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டேன்.

"அதெப்படி முடியும்? இவ்வளவு நாள் சிநேகிதமாய் பழகிட்டு... அந்த நம்பிக்கையைக் கொடுத்துட்டு... நாளைக்கு அவன் எழுதின கடிதாசியை எடுத்துண்டு வந்து செல்லம் நிப்பாளே...! நான் என்ன பதில் சொல்லுவேன்?" என்று அங்கலாய்க்கிறாள் அம்மா.

"இந்தக் கடிதத்தை நீ ஒன்றும் அனுப்ப வேண்டாம். யோசித்து நிதானமாக முடிவெடுப்பதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது" என்று மறுபடியும் சொன்னாள் பெரியக்கா.

"எவ்வளவு யோசித்தாலும் என் முடிவை நான் சொல்லிவிட்டேன். இதற்கு மேல் என்னை வற்புறுத்த வேண்டாம்" என்று சொல்லிவிட்டு அந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்ப்பதற்குப் புறப்பட்டேன்.

அப்பொழுது தொடங்கியது அம்மாவின் அலறல்...

அந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்த்ததோடு எனது பொறுப்பு தீர்ந்தது என்று ஆசுவாசத்துடன் எப்போதும் போல் நான் இருக்கிறேன்.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு நான் வேலையிலிருந்து களைத்து வீடு திரும்பிய நேரத்தில் மிஸ்டர் மணியின் அம்மா வந்து விட்டுப்போன செய்தியைச் சொல்ல ஆரம்பித்து என்னிடம் மறுபடியும் அலற ஆரம்பித்தாள் அம்மா.

எனது விருப்பத்துக்கு மாறாக இப்படி ஒரு நிர்ப்பந்தத்திற்கு என்னை ஆளாக்குவது அநியாயம் என்று இந்தப் பெரியக்காவுக்கோ கிச்சுவுக்கோ தோன்றாமல் இருப்பது எனக்கு வருத்தம் தருகிறது.

அம்மா என்னைப் பார்க்கும் போதெல்லாம் திட்டித் தீர்க்கிறாள். என்னைத் திட்டுவது போதாதென்று மாலா

அக்காவையும் சேர்த்தே திட்டுகிறாள். அவள்தான் என் மனத்தைக் கெடுத்து விட்டாளாம். மாலா அக்கா ஒரு ஓடுகாலியாம்... அவளை வீட்டில் சேர்த்ததே தப்பாம்...

- பொறுக்க முடியவில்லை எனக்கு.

பெரியக்கா பேசாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்கிறாள். கிச்சுவுக்கு மொரீஷியஸ் தீவுக்குப் போக முடியவில்லையே என்கிற ஏமாற்றம்!

"இப்படி அம்மா என்னையும் மாலா அக்காவையும் கண்டபடி பேசுவது முறைதானா?" என்று அக்காவிடமும் கிச்சுவிடமும் முறையிடுகிறேன்.

என் முகத்துக்கு நேரே நிமிர்ந்து பார்த்து அக்கா சொல்கிறாள்:

"அம்மா சொல்வதில் என்ன தப்பு? அந்த மாலா உன் மனசை ரொம்பவும் கெடுத்து விட்டாள்: அதனால்தான் நீ மணியின் கடிதத்திற்கு மறுப்பு எழுதுகிறாய். அவளுடைய சிநேகம் உனக்கு நல்லதில்லை..."

"இது அபாண்டம். என் மனம் கெடவுமில்லை. அதை யாரும் கெடுக்கவுமில்லை. நான் எப்போதும் என் மனத்தை ஒரே மாதிரியாக வைத்திருக்கிறேன். அடிக்கடி மனம் சலனப்படுகிறவர்களுக்கு அது புரியாது" என்று நானும் அக்காவைத் தூக்கியெறிந்து பேசிவிடுகிறேன்.

அம்மா கையில் ஒரு கரண்டியுடன் ஆக்ரோஷமாக வெளிப்பட்டுக் கத்துகிறாள்.

"இவளோட என்னடி பேச்சு? இந்த வீட்டிலே இருக்கற பெரியவா சொல்றதைக் கேட்டு நடக்கறதானால் நல்ல படியா இந்த வீட்டிலே இருக்கலாம். இல்லேன்னா அந்த மாலா மாதிரியே எங்கேயாவது ஓடச் சொல்லு... நாளைக்குச் செல்லம் வந்து கேட்டாள்னா 'என் பொண்ணு ஆத்தை விட்டே போயிட்டாள்'னு ஒரு வரியிலே பதில் சொல்லிடுவேன்."

அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டு மனம் ஒரு 'சபாஷ்' போடுகிறது. இந்த வீட்டுக்கு மெய்யாகவே பெரியவர் யார் என்ற நினைப்போடு அப்பாவின் படத்தைப் பார்க்கிறேன்.

"யார் என்ன சொன்ன போதிலும் உன் அறிவுக்கும் மனத்துக்கும் சரி என்று பட்டதைப் பயப்படாமல் செய்.” என்ற அவரது ஆக்ஞையை நினைவுபடுத்திக் கொள்கிறேன். அம்மா மீதோ பெரியக்கா மீதோ கிச்சுவின் மீதோ எனக்குக் கொஞ்சமும் வருத்தமில்லை. மௌனமாக இருந்த பெரியக்காவிடம் கேட்கிறேன்:

"என்ன... அம்மா சொன்னதுதான் இறுதியான வார்த்தையா?"

பெரியக்கா மௌனமாக இருக்கிறாளே!

"இந்த மிரட்டலுக்குப் பயந்து பணிந்து விடுவேன் என்று நினைக்கிறார்களா? ஹ்ம். முடியாது!”

"தாங்க் யூ" என்று பெரியக்காவிடம் சொல்லிவிட்டு மாடியறைக்குப் போகிறேன்.

என்னுடைய பொருட்கள் மிகவும் எளிமையானவை. குறைவானவை. பாங்க் பாஸ் புக்கைப் பார்க்கிறேன். எனக்கென்ன குறை? இது போதும் என்று தோன்றுகிறது.

கைப்பெட்டியுடன் மாடியிலிருந்து இறங்கி வருகிறேன்.

"எங்கே புறப்பாடு?” என்று மூவரும் கேட்பது போல் என்னைப் பார்க்கிறார்கள்.

நானே முந்திக்கொண்டு பதில் சொல்கிறேன். "நான் எங்கேயும் ஓடிப்போய் விடவில்லை. மாலா அக்காவிடம் போகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்து ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்ய உதைக்கிறேன்.

அந்த அக்காவைத் தேடி அவளோடு சேர்ந்து கொள்ளப் புறப்படும்போது ஒரு நினைப்பு நெருடுகிறது. “அவர்கள்

கோஷ்டியில் நானும் சேர்ந்துகொள்ள எனது உத்தியோகம் ஒரு தடையாக இருக்குமோ?”

'அப்படி அது ஒரு தடையாக இருக்குமெனில் அந்த உத்தியோகத்தை உதறிவிட வேண்டியதுதான்' என்கிற உறுதியோடு ஸ்கூட்டரைப் பலமாக உதைக்கிறேன்.

மனதில் ஒரு நிம்மதி பிறக்கிறது. ரிசர்வ் பாங்குக்கு வாழ்க்கைப்பட்ட ஒரு அக்காவிடமிருந்து, சுதந்திரப் பறவையாக இருக்கும் இன்னொரு அக்காவைத் தேடித்தானே நான் போகிறேன்!

(முற்றும்)